பக்கங்கள் - 24
விலை - 30ரூபா

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 34 கதிர் 253 ஆடி 24 ஆம் நாள் வெள்ளிக்கிழமை 09 ஓகஸ்ட் 2019 வள்ளுவர் ஆண்டு 2050




## ரெலோவின் முடிவுகள் நிதானமாக அமையும்

*கட்சித் தலைவர் செல்வம் அறிக்கை*

கொழும்பு, ஓக. 9
அரச தலைவர் தேர்தல் தொடர்பில் பல்வேறு குழப்பமான நிலமைகள் உருவாகியிருக்கின்றன. இந்த நிலையில் அரச தலைவர் தேர்தல் தொடர்பில் தமிழீழ விடுதலை இயக்கம் அவசரம் காட்டாது என்று தமிழ் ஈழவிடுதலை இயக்கத்தின் தலைவரும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.
அந்தக் கட்சியின் உறுப்பினரும் முன்னாள் மாகாண சபை உறுப்பினரு 21

## நல்லூர்ச் சோதனைகளுக்கு இயந்திரவழி உபகரணங்கள்

யாழ்ப்பாணம், ஓக. 9
நல்லூர் ஆலயத்துக்கு வருகை தரும் பக்தர்களின் உடற்சோதனை நடவடிக்கைகளை இலகுபடுத்துவதற்காக 4 இயந்திர வழி உபகரணங்கள் பாவனைக்கு விடப்படவுள்ளன என்று தெரிவித்தார் வடமாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன்.
நல்லூர்க் கந்தன் ஆலயத்தின் வருடாந்தத் திருவிழா தற்போது ஆரம்பமாகியுள்ளது. அடியவர்கள் பாதுகாப்புப் பிரிவி 21

## நல்லூர் பாதுகாப்புச் சோதனைகள் உடன் கைவிடப்படுதல் அவசியம்

வலியுறுத்துகின்றார் சிறீதரன் எம்.பி.

கொழும்பு, ஓக. 9
நல்லூர் கந்தசுவாமி ஆலயத் திருவிழாக் காலங்களில் இராணுவம் சப்பாத்துக்களுடனும் துப்பாக்கிகளுடனும் ஆலய வளாகத்துக்குள் நுழைந்து தமிழர்களை சோதிக்கும் செயற்பாடுகள் உடனடியாக கைவிடப்படல் வேண்டும். தலைமை அமைச்சரும் அரச தலைவரும் உடனடியாக இவற்றைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் 04

# தமிழ் - முஸ்லிம் வாக்குகளே வெற்றியைத் தீர்மானிக்கும்

## மகிந்த அதிரடிக் கருத்து

கொழும்பு, ஓகஸ்ட் 9
'நாடுமுழுவதும் சிங்கள மக்கள் பெரும்பான்மை இனத்தவர்களாக இருந்தாலும் சிறுபான்மை இனத்தவர்களான தமிழ், முஸ்லிம் மக்களின் வாக்குகளே தேர்தல்களின் வெற்றியைத் தீர்மானிக்கும்.'
இவ்வாறு முன்னாள் அரச தலைவரும் தற்போதைய எதிர்க்கட்சித் தலைவருமான மகிந்த ராஜபக்ச தெரிவித்தார். 21



## விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஓக. 9
உரும்பிராய் கிருஷ்ணன் கோவில் முன்பாக டிப்பர் வாகனமும் உந்துருளியும் நேருக்கு நேர் மோதிக் கொண்டதில் நபரொருவர் உயிரிழந்தார். இந்தச் சம்பவம் நேற்றுக் காலை 6.45 மணியளவில் இடம்பெற்றது. இயக்கச்சியைச் சேர்ந்த க.செந்தமிழ் (வயது-22) என்பவரே உயிரிழந் 21

## தமிழர்களை ஓரங்கட்டும் கருத்தை கோத்தபாய வெளியிடவில்லையாம்!

விளக்கம் கூறுகிறார் மகிந்தானந்த

கொழும்பு, ஓக. 9
அரச தலைவர் தேர்தலில் வெற்றிபெறுவதற்கு தமிழ் மக்களின் வாக்குகளும் அவசியம் என்றே பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலர் கோத்தபாய ராஜபக்ச தெரிவித்திருந்தார். தமிழ் மக்களை ஓரங்கட்டும் வகையில் அவர் எந்தவிதக் கருத்துக்களையும் வெளியிடவில்லை. 21

## ஆட்சியமைக்க கூட்டமைப்பின் ஆதரவுகள் தேவையேயில்லை!

*இப்படிக் கூறுகிறார் பசில் ராஜபக்ச*

கொழும்பு, ஓக. 9
கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெரும்பான்மையான மக்கள் ஆதரவைப் பெற்றுக்கொள்ளவில்லை. வடக்கு கிழக்கில் அவர்களைத் தவிர்ந்த பல கட்சிகள் எங்களுடன் உள்ளன. 04

## கோத்தபாயவைப் பார்த்து எவரும் பயப்படவேண்டாம்

*நற்சான்றிதழ் கொடுக்கிறார் பசில்*

கொழும்பு, ஓக. 9
முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாயவைப் பார்த்து எவரும் அச்சப்படத் தேவையில்லை. இவ்வாறு முன் 04

ஆட்சிக்கு வந்ததும்

## பன்னாட்டு நிதிச் சம்மேளனத்தை 6 மாதங்களில் உருவாக்குவோம்!

மன்னாரில் கூறினார் சஜித்

மன்னார், ஓக. 9
எதிர்வரும் நவம்பர் மாதம் நீங்கள் சரியான தீர்மானம் எடுத்தால், நாங்கள் ஆட்சிக்கு வந்து கடந்த 10 ஆண்டாக இங்கு நடைமுறைப்படுத்தப்படாத பன்னாட்டு நிதிச் சம்மேளனத்தை உருவாக்கு 21

## இனப்பிரச்சினை தொடர்பில் மூச்சுக் காட்டவில்லை சஜித்!

யாழ்ப்பாணம், ஓக. 9
ஐக்கிய தேசியக் கட்சியின் அரச தலைவர் வேட்பாளராகக் களமிறங்கக் கூடும் என்று எதிர்பார்க்கப்படும் சஜித் பிரேமதாச, தமிழ் மக்கள் அதிகம் வாழும் மன்னார் 04

# வெளிநாட்டிலுள்ளவர்களையும் வாக்காளராக பதியும் சந்தர்ப்பத்தை தவறவிட்டுள்ளனர் அரசியல்வாதிகள்

*யாழ். தேர்தல் மாவட்டத்தின் ஆசனங்கள் இரண்டால் குறையவும் வாய்ப்பு*

யாழ்ப்பாணம், ஓக. 9
வலி. வடக்கில் மீளக்குடியமர அனுமதிக்கப்படாத 21 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த வெளிநாட்டில் உள்ள மக்களை வாக்காளர்களாகப் பதிவு செய்வதற்கான வாய்ப்பு இருந்தும், அது தொடர்பில் மக்களை அறிவுறுத்த தமிழ் அரசியல் வாதிகள் தவறியுள்ளனர். இதன் 21



# ஓகஸ்ட் மாத எண் ஜோதிட பலன்கள்




### 4, 13, 22, 31 ஆகிய திகதிகளில் பிறந்தவர்களுக்கு...

**4**

உழைப்பை மூலதனமாகக் கொண்ட நான்காம் எண் அன்பர்களே!
இந்த மாதம் எந்தப் பிரச்சினைகளையும் சமாளிக்க ஆக்கபூர்வமான யோசனைகள் தோன்றும். எண்ணம் புத்தி செயலில் இருந்த மந்த நிலை மாறும். நண்பர்கள் மூலம் உதவி கிடைக்கும். ஆடம்பரச் செலவுகள் ஏற்படும். எதிர்மறை எண்ணங்கள் மறைந்து நேர்மறையான எண்ணங்கள் உருவாகும். தொழில் வியாபாரம் வேகம் பிடிக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வேலைப்பளு இருக்கும். சக ஊழியர்கள் மேல் அதிகாரிகளை அனுசரித்து செல்வது நல்லது. குடும்பத்தில் இருப்பவர்களுடன் வாக்குவாதத்தைத் தவிர்ப்பது நல்லது. பிள்ளைகளின் நலனில் அக்கறை தேவை.
பெண்களுக்கு வீண் பேச்சை குறைப்பது நல்லது. கலைத்துறையினருக்கு வேளை தவறி உணவு உண்ணும்படி நேரலாம். வீண் வார்த்தைகளைப் பேசுவதைத் தவிர்ப்பது நல்லது. அரசியல்வாதிகளுக்கு கூடுதல் பணிச்சுமையால் உடற் சோர்வு ஏற்படலாம். மேலிடத்திடம் வீண் பேச்சுக்களைத் தவிர்ப்பது நல்லது. மாணவர்களுக்கு அடுத்தவர்களுக்கு உதவிகள் செய்வதில் கவனம் தேவை. பாடங்களைப் படிப்பதில் தீவிரம் காட்டுவீர்கள்.

### 5, 14, 23 ஆகிய திகதிகளில் பிறந்தவர்களுக்கு...

**5**

நுணுக்கமான அறிவைக் கொண்ட ஐந்தாம் எண் அன்பர்களே!
இந்த மாதம் எதிர்ப்புகள் விலகும். பணவரத்து திருப்தி தருவதாக இருக்கும். புதிய நபர்களின் அறிமுகம் உண்டாகும். வாகனங்களை செலுத்தும்போது கவனம் தேவை. தனிமையாக இருக்க நினைப்பீர்கள்.
தொழில் வியாபாரம் நன்றாக நடக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் மிகவும் நல்ல பலன்களைப் பெறுவார்கள். மேலிடத்துடன் இருந்து வந்த கருத்து வேற்றுமைகள் அகலும். குடும்பத்தில் ஏதேனும் குழப்பம் ஏற்படலாம். கருத்து வேற்றுமை வந்து நீங்கும். உறவினர்களிடம் நிதானமாகப் பேசுவது நல்லது.
பெண்களுக்கு உடல்நலத்தில் அக்கறை தேவை. கலைத்துறையினர் மற்றவர்களிடம் அனுசரித்துச் செல்வது நல்லது. உடல் சோர்வு உண்டாகலாம். அரசியல்துறையினருக்கு நீண்ட நாள்களாக இழுப்பறியாக இருந்த காரியங்கள் சாதகமாக நடந்து முடியும். மாணவர்களுக்கு சக மாணவர்களுடன் இருந்த மனவருத்தம் நீங்கும். பாடங்கள் படிப்பதில் இருந்த தடைகள் நீங்கி ஆர்வமாக படிப்பீர்கள்.

### 6, 15, 24 ஆகிய திகதிகளில் பிறந்தவர்களுக்கு...

**6**

எந்தக் காரியத்திலும் திட்டமிட்டு வெற்றிபெறும் ஆறாம் எண் அன்பர்களே!
இந்த மாதம் தைரியமாக எந்தக் காரியத்தையும் செய்து முடிப்பீர்கள். சகோதரர்கள் மூலம் நன்மை உண்டாகும். பணவரத்து அதிகரிக்கும். கடினமான வேலைகளையும் எளிதாகச் செய்து முடிக்கும் திறமை உண்டாகும். மனதில் இருந்த தயக்கம், பயம் நீங்கும். வாகனங்களை செலுத்தும்போது கவனம் தேவை.
தொழில், வியாபாரம் தொடர்பான விவகாரங்களில் தாமதம் ஏற்படலாம். உத்தியோகத்தில் இருப்பவர்கள் இடமாற்றம், பதவி இறக்கம் ஆகியவற்றைச் சந்திக்க வேண்டி இருக்கும். குடும்பத்தில் இருப்பவர்களுடன் மனஸ்தாபம் ஏற்பட்டு நீங்கும். குடும்பத்துக்காகக் கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும்.
பெண்களுக்கு மனத்துணிவு அதிகரிக்கும். காரிய வெற்றிக்கு தேவையான உதவிகள் கிடைக்கும்.
கலைத்துறையினருக்கு எதிர்காலம் பற்றிய சிந்தனை மேலோங்கும். எல்லா காரியங்களும் நல்லபடியாக நடக்கும்.
அரசியல்துறையினர் மற்றவர்களுக்கு உதவப் போய் வீண் பழி ஏற்படலாம். அலைச்சல் அதிகரிக்கும். மேலிடத்தின் கருத்துக்களுக்கு மதிப்பு கொடுப்பது நன்மை தரும்.
மாணவர்களுக்கு கூடுதல் கவனம் செலுத்தி பாடங்களை படிப்பது நல்லது. விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கும் போது கவனம் தேவை.



# உங்களின் பிறந்த திகதியின்படி எந்த நிறம் உங்களுக்கு ராசியானது என்று தெரியுமா?



நிறங்களானது எம்முடைய வாழ்க்கையில் முக்கிய பங்கு வகிக்கிறது. எமது தோலின் நிறம், உடையின் நிறம், நாம் பயன்படுத்தும் பொருளின் நிறம் என அனைத்துமே எமது வாழ்வில் ஏதோ வித தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும். எம் எல்லோருக்கும் பிடித்த நிறம் ஒன்று இருக்கும். அதேபோல ராசியான நிறம் என்ற இருக்கும்.

**எந்த ராசியினர் எந்த நிறம் உபயோகப்படுத்த வேண்டும்**

ஜோதிட விதிகளின்படி உங்களின் பிறந்த திகதிக்கென ஒரு ராசியான நிறம் இருக்கும். மிகவும் முக்கியமான காரியங்களுக்குச் செல்லும்போது அந்த நிற உடையோ அல்லது பிற பொருள்களையோ பயன்படுத்தினால், அதன் மூலம் உண்டாகும் முடிவு உங்களுக்குச் சாதகமாக மாறும். எப்படி எமது ராசிக்கு ராசியான நிறம் உள்ளதோ அதே போல உங்கள் பிறந்த திகதியின் படி ராசியில்லாத நிறமும் உண்டு. இந்த ராசியில்லாத நிற ஆடை அல்லது பிற பொருள்கள் பயன்படுத்துவது அந்தக் கராரியத்தின் முடிவை உங்களுக்கு எதிரானதாக மாற்றும்.


**பிறந்த திகதி 1, 10, 19, 28**
இந்த திகதிகளில் பிறந்தவர்கள் சூரிய பகவானின் ஆளுமைக்கு உட்பட்டவர்கள். எனவே இவர்களுக்கு ஒரேஞ்சு, மஞ்சள் போன்ற நிறங்கள் மிகவும் ராசியானதாக இருக்கும். இந்த நிறங்கள் மனதைரியம், நேர்மை மற்றும் துணிச்சலை கொடுப்பதாகும். இந்த நிற உடை இந்த திகதிகளில் பிறந்தவர்களுக்கு அதிக ஆற்றலையும், அதிர்ஷ்டத்தையும் வழங்கும். ஆனால் இவர்கள் கறுப்பு மற்றும் மரூன் போன்ற நிறங்களை முடிந்தவரை பயன்படுத்துவதை தவிர்க்க வேண்டும். இதனால் அவர்களுக்கு எந்த நன்மையும் ஏற்படாது, மாறாகத் தீமைகள் மட்டுமே ஏற்படும்.

**பிறந்த திகதி 2, 11, 20, 29**
இந்த திகதிகளில் பிறந்தவர்கள் சந்திர பகவானின் ஆளுமைக்கு உட்பட்டவர்கள். இவர்களின் அதிர்ஷ்டமான நிறம் எதுவென்றால் பச்சை மற்றும் மஞ்சள் நிறமாகும். இவர்களுக்கு ராசியில்லாத நிறங்கள் சிவப்பு மற்றும் கறுப்பு.

**பிறந்த திகதி 3, 12, 21, 30**
இந்த திகதிகளில் பிறந்தவர்கள் குரு பகவானின் ஆளுமைக்கு உட்பட்டவர்கள். இவர்களின் ராசியான நிறம் ஒரேஞ்சு மற்றும் பிங்க் ஆகும். அதே சமயம் இவர்களுக்கு ராசியில்லாத நிறங்கள் என்றால் அது கறுப்பு, அடர் ஊதா. மற்றும் அடர் பச்சை ஆகும்.

**பிறந்த திகதி 4, 13, 22, 31**
இந்த திகதிகளில் பிறந்தவர்கள் குரு பகவானின் ஆளுமைக்கு உட்பட்டவர்கள். இவர்களின் ராசியான நிறம் நீலம் ஆகும். அதிலும் மெல்லிய ஊதா நிறம் இவர்களுக்கு வெற்றியை தேடித்தரும். இவர்களின் ராசியில்லாத நிறம் கறுப்பு ஆகும்.

(தொடரும்)



# தெங்கு தொழிற்துறையில் தங்க ஒளிக்கீற்று வடக்கிற்கு

தெங்கு முக்கோண வலயத்தை மையமாகக் கொண்டு இலங்கையில் தெங்கு பயிர்ச்செய்கை பரவியுள்ளது. அதற்கு அப்பால் யாழ்ப்பாணம், வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களை மையமாகக் கொண்டு குறிப்பிடத்தக்க தெங்கு அறுவடை கிடைக்கிறது.

மனித குடியேற்றத்திற்குக் கூட பொருத்தமில்லாத காலத்தில் வட மாகாணத்தில் தெங்குப் பயிர்ச்செய்கைக்கு ஏற்பட்ட அழிவு பற்றி தொடர்ந்து விபரிப்பதற்கு அவசியமில்லை. அவ்வாறான பின்னணியில் தென்னை மரங்களில் இருந்து பெற்றுக்கொள்கின்ற நன்மைகள் உணவுக்கு பெற்றுக் கொள்வதைத் தவிர்த்து அதற்கு அப்பால் தொழிற்துறையில் ஈடுபட்டு உற்பத்தித் துறை மற்றும் அபிவிருத்திகளில் இருந்து விலகி இருந்ததோடு கடற்கரை ஓரத்தில் மிகவும் பொருத்தமாக சூழலில் மிகவும் சிறந்த அறுவடை ஒன்றை பெற்றபோதும் அது வீட்டுப் பயன்பாட்டுக்கு மாத்திரம் பயன்படுகின்ற நிலைமை இருந்தது. அதனை அடையாளம் கண்டு கிடைக்கின்ற தெங்கு பயிர்ச்செய்கைக்கு நிகராக தெங்கு பயிர்ச்செய்கை மற்றும் உற்பத்தித் துறையை முன்னேற்றகரமான நிலைமைக்கு கொண்டுவருவதற்கு தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளது.

2018 ஆம் ஆண்டு தரவுகளின்படி வட மாகாணத்திற்குள் இருக்கின்ற 26194 ஏக்கர் தெங்கு காணி அளவில் 95.2 மில்லியன் காய்கள் தெங்கு அறுவடை பெறப்பட்டுள்ளது. கிடைக்கின்ற தெங்கு அறுவடை இன்று தெங்கு நுகர்வுக்கு மாத்திரம் பயன்தரக்கூடிய நிலையில் இருப்பதால் தற்போது தென்னை மரப்பட்டை மற்றும் தேங்காய்ச் சிரட்டை என்பவைற்றுடன் தொடர்புடைய உற்பத்தி தொழிற்துறை மாத்திரம் ஆரம்பிக்கப்பட்டு வருகிறது. அதேபோன்று 2010 ஆம் ஆண்டுக்கு பின்னர் வட மாகாணத்திற்குள் மீண்டும் தெங்கு பயிர்ச் செய்கை ஆரம்பிக்கப்பட்டதால் அதன் அறுவடை அடுத்த மாதம் தொடக்கம் ஆரம்பிக்க எதிர்பார்க்கப்படுகிறது. அறுவடை கிடைக்க ஆரம்பித்த உடன் தெங்கு சார்புடை தொழிற்துறைகளை அதிக அளவில் ஆரம்பிக்க எதிர்பார்க்கப்படுகிறது. வடக்கு மக்களுக்கு புதிய அனுபவம் ஒன்றை பெற்றுக்கொடுத்து முற்றத்தில் உள்ள தென்னை மரத்தில் இருந்து விழும் தேங்காயை சமையலறைக்கு எடுப்பதற்கு பதில் சர்வதேசத்தை வெற்றி கொள்வதற்கு உள்நாட்டின் பெயரை உலகுக்கு கொண்டு செல்வதற்கு அந்த தேங்காயால் முடியும் என்று அவர்களின் சிந்தனை மாறி வருகிறது. புதிய தொழற்துறையில் ஈடுபட்டு பொருளாதாரத்தை வளப்படுத்துவது போன்று புதிய வாழ்க்கை முறை ஒன்றை பெற்றுக்கொள்வதற்கு உற்பத்தித் துறையில் பங்குதாரர் ஆவதற்கு அவர்கள் ஆர்வமாக உள்ளனர். சமையல்அறையில் இருந்து அகற்றப்படும் தேங்காய்ச் சிரட்டை, தேங்காய் மட்டை வீட்டுத் தோட்டத்திற்கு பயன்படுத்துவதை விடவும் அதன் மூலம் வருவாய் ஒன்றை பெற்றுக்கொள்வதற்கு அந்த மக்கள் ஈடுபாடு காட்ட ஆரம்பித்துள்ளனர். விளக்குமாறு, தும்புத்தடி, கம்பளம், தரைவிரிப்பு போன்ற உற்பத்திகளை வீட்டில் இருந்தே தயாரித்து பணம் சம்பாதிக்கின்றனர். அதேபோன்று தென்னை மரத்தில் அனைத்து பகுதிகளையும் பயன்படுத்தி பணம் ஈட்டுவதற்கும் அதன் மூலம் பொருளாதாரத்தை பலப்படுத்துவதற்கும் அவர்கள் ஈடுபட்டுள்ளனர். பாரிய அளவில் இடம்பெறுகின்ற முறையான தொழிற்சாலைகளில் மாத்திரமன்றி இந்த பகுதிகளில் சுய தொழிலாக வீட்டில் இருந்தே உற்பத்திகளை மேற்கொள்வதற்காக தேவையான தொழில்நுட்பம், அறிவு மற்றும் ஆலோசனை தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை மூலம் பெற்றுத்தரப்படுகிறது. அது, வேறு யுத்த சூழல் இருந்த நாடுகளுடன் ஒப்பிடுகையில் யுத்தம் முடிவுற்ற குறுகிய காலத்திற்குள் கிடைத்த பாரிய வெற்றியாகும். வீட்டில் இருந்து அகற்றப்படுகின்ற தென்னஞ்சிரட்டை, தென்னம்மட்டை ஆலைகளுக்கு கிடைக்கின்றன. உற்பத்தி தொழிற்சாலைகள் உருவாகின்றன. அவற்றில் தொழில்வாய்ப்புகளுக்கு இளம் பிள்ளைகள் ஈடுபடுவர்.






ஓகஸ்ட் மாதம் 10ஆம் திகதி யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 04 தும்பு தொழிற்சாலைகள்

ஓகஸ்ட் மாதம் 12ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்டத்தில் தும்புத் தொழிற்சாலை ஒன்று

பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் கௌரவ நவீன் திசாநாயக்க அவர்களின் கைகளால் திறந்துவைக்கப்படவுள்ளன

## வடக்கில் தெங்கு தொழிற்துறையை ஆரம்பிப்பது மற்றும் அந்த பகுதி மக்களின் வாழ்க்கை முறையை மேம்படுத்தி இலங்கைக்காக அந்நிய செலாவணியை பெற்றுத்தருவதற்கு எதிர்பார்க்கிறேன்

கௌரவ நவீன் திசாநாயக்க
பெருந்தோட்ட கைத்தொழில்
அமைச்சர்



பல ஆண்டுகளுக்கு முன்னர் யுத்த சூழலுக்குள் இருந்த அந்த பகுதிகளின் மக்கள் யுத்தத்தின் இறுதிக் காலத்தில் அந்த நிலைமைக்கு விருப்பமின்றியேனும் பழகிக் கொள்ளும் நிலை இருந்தது. அதன் காரணமாக அந்த சூழல் மற்றும் மனநிலையில் இருந்து விலகி சாதாரண சமூக வாழ்வு முறை ஒன்றுக்கு பழகுவதற்கு புதிய சிந்தனைகளை ஏற்படுத்திக்கொண்டுள்ளனர். அதற்குத் தேவையான பொருளாதார பலம் இதன் மூலம் பெறப்பட்டுள்ளது. சம்பிரதாயமான சிந்தனைக்கு பதில் சம்பிரதாயமான தொழிற்துறைகளுக்கு தொழில்நுட்பத்தை இணைத்து புதிய சிந்தனைகளை சேர்த்து அதை தமது வாழ்க்கைத் தொழிலாக மாற்றிக்கொண்டுள்ளனர். அதிகாரசபை மூலம் பெற்றுத்தரப்படுகின்ற பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சிகளில் பங்கேற்று புதிய தொழில்களுக்குள் நுழைவதற்கு முயற்சிக்கின்றனர். தெங்குத் துறையை கட்டியெழுப்புவதற்காக வட மாகாணத்தில் நடத்தப்படுகின்ற இந்த நிகழ்ச்சிகள் தெங்கு அபிவிருத்தி துறைகளுக்கும் சாதாரண மக்கள் வாழ்விற்கும் எழுகின்ற ஒளிக்கீற்றாக அமையும்.

குடும்ப உரிமையாக நடத்தப்படுகின்ற தொழிற்சாலைகளின் முன்னேற்றத்திற்கு தேவையான ஆலோசனை மற்றும் தொழில்நுட்பம் அதிகாரசபையால் பெற்றுத்தரப்படுகிறது. அதேபோன்று புதிய தொழிற்துறையை ஆரம்பிப்பதற்கும் அது தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையால் பெற்றுத் தருகின்ற செயலூக்கத்திற்கான சந்தர்ப்பமாகும். பெருந்தோட்ட அமைச்சர் கௌரவ நவீன் திசாநாயக்கவின் வெவிலி சவிய சிந்தனைக்கு அமைய செயற்பட்டு, வடமாகாணத்தில் தென்னை மரத்தின் அனைத்து பகுதிகளும் பயனுள்ள உற்பத்தி செயற்பாடுகளுக்கு ஈடுபடுத்துவதற்கு அதிகாரசபை ஆரம்பித்திருக்கும் இந்த நிகழ்ச்சி அந்த பகுதிகளின் மக்களின் வாழ்க்கை தரத்திற்கும் ஒட்டுமொத்த தெங்குத் தொழிற்துறையின் நிலையான இருப்புக்கும் சாதகமான வகையில் தாக்கம் செலுத்தியுள்ளது.



எச்.கே. உதய ரூபசிங்க
தலைவர்
தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை

பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு
தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை

54, நாவல வீதி, நாரஹேன்பிட்ட, கொழும்பு 05.

# ஜெயராமுக்கு குவியும் வில்லன் வேடங்கள்




ஜெயராம்மலையாளத்தில்முன்னணிகதாநாயகனாக இருந்து தற்சமயம் நடிப்பில் இருந்து சற்று ஒதுங்கி இருந்தார். திடீரென்றுசமூகவலைத்தளத்தில்கட்டுமஸ்தானதோற்றத்தில் புதிய சிகைஅலங்கரத்துடன் இருக்கும் ஒளிப்படத்தை வெளியிட்டு ஆச்சரியப்பட வைத்திருக்கிறார்.

அண்மையில் விஜய்சேதுபதி நடித்த 'மார்கோனி மதாய்' என்னும் மலையாள படத்தில் நடித்திருந்த ஜெயராம், அடுத்து தெலுங்கு நடிகர் அல்லு அர்ஜுன் நடிக்கும் புதிய படத்தில் முக்கிய வேடம் ஏற்கிறார்.

இந்தப் படத்தை திரிவிக்ரம் இயக்குகிறார். ஜெயராமின் புதிய தோற்றத்தைக் கண்ட இயக்குநர்கள் தங்கள் படத்தில்வில்லன்வேடத்தில்நடிக்கஅவரிடம்பேசி வருகிறார்களாம்.










## நல்லூர்...

தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன்.

அபிவிருத்தி உபாயமுறைகள் மற்றும் பன்னாட்டு வர்த்தக சட்டத்தின் மீதான ஒழுங்குவிதிகள் குறித்த விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி கோவில் ஆலய திருவிழா தமிழர்களின் அடையாள நிகழ்வாகக் கருதப்படுகின்றது. இந்த ஆலய வரலாற்றில் இதுவரை ஆலயத்துக்குள் செல்பவர்களை பரிசோதனை செய்ததாக வரலாறுகள் இல்லை. நல்லூர் கந்தசுவாமி ஆலயம் மிகவும் புனிதமான பகுதி. ஆனால் இன்று அங்கு சப்பாத்துக்களுடனும் துப்பாக்கிகளுடனும் உள்நுழைந்து தமிழ் மக்களை சோதிக்கும் நிலமை உருவாகியுள்ளது. சீருடை தரித்த இராணுவத்தினரின் இந்த நடைமுறைகள் ஏற்றகத் தகாதவை. ஆலய நிர்வாகமும் சரி, பொதுமக்களும் சரி எவரும் இவ்வாறு பாதுகாப்புக் கேட்கவில்லை.

தேசியப் பாதுகாப்பை உறுதிபடுத்திவிட்டதாகக் கூறும் அரசு வடக்கில் மட்டும் ஏன் இவ்வாறு கெடுபிடிகளை கையாள்கின்றது என்பது தெரியவில்லை. யாழ்ப்பாணம் -நல்லூர் ஒரு கலாசார புனித பூமி. அங்கு எமது கலாசாரத்தை நாசமாக்கும் வகையில் இராணுவம் நடந்துகொள்கின்றது. இந்த புனிதத் தன்மையை கெடுக்காது இராணுவம் உடனடியாக வெளியேற வேண்டும். ஆலய வளாகத்துக்கு வெளியில் பல இடங்கள் உள்ளன. அங்கு சோதனைகளை நடத்த முடியும். ஆலய வளாகத்துக்குள் அவ்வாறு மக்களை சோதனை செய்யும் நடவடிக்கைகள் இடம்பெறக் கூடாது. சோதனைகள் என்ற பெயரில் ஆலயத்துக்குள்நுழையும்எமதுமக்கள்துன்புறுத்தப்படுகின்றனர். 2009ஆம் ஆண்டின் பின்னர் வடக்கில் ஒரு வெடி குண்டேனும் வெடிக்கவில்லை. இதனைக் கவனத்தில் கொண்டு நல்லூரில் இருந்து இராணுவத்தை வெளியேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

செம்மணியில் படுகொலை செய்யப்பட்ட கிருஷாந்தியின் நினைவுநாள் இன்று. அவர் மட்டும் அல்ல அவரது உறவினர்கள் பலர் அதே இடத்தில் கொல்லப்பட்டனர். கிருஷாந்தியின் கொலை உண்மை வெளியில் வந்தவுடன்தான் யாழ்ப்பாணத்தில் பல இளைஞர், யுவதிகள் கொல்லபட்ட உண்மைகள் வெளிவந்தன. ஆனால் இன்றுவரை அதற்கான தீர்வுகள், நீதி எமக்கு கிடைக்கவில்லை. காணாமல் போனோர் உறவினர்கள் 900 நாள்களாக போராடி வருகின்றனர். அலுவலகங்கள் நியமிக்கப்பட்டும் கூட இன்றுவரை நீதி கிடைக்கவில்லை -என்றார். (ம-31)

## இனப்பிரச்சினை...

மாவட்டத்துக்கு நேற்று வருகை தந்தபோதும், இனப் பிரச்சினைத் தீர்வு தொடர்பிலேயோ அல்லது தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைக்கான தீர்வு தொடர்பிலேயோ வாய் திறக்கவில்லை.

மன்னார் மாவட்டத்தில் சஜித் பிரேமதாசவின் அமைச்சின் ஊடாக அமைக்கப்பட்ட வீடுகளைத் திறந்து வைக்கும் நிகழ்வில் அவர் நேற்றுப் பங்கேற்றார்.

அரச தலைவர் தேர்தல் நெருங்கும் நிலையிலும், அரச தலைவர் வேட்பாளராக ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் போட்டியிடப் போவதாகவும் தெரிவிக்கும் சஜித் பிரேமதாச, இந்த நிகழ்விலும், அரச தலைவர் தேர்தல் தொடர்பில் அதிகளவு பரப்புரைகளை முன்னெடுத்தார்.

ஆனாலும், தமிழ் மக்களின் முக்கியமான பிரச்சினையான இனப் பிரச்சினை தொடர்பிலேயோ அல்லது காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் தொடர்பிலேயோ, அரசியல் கைதிகளின் பிரச்சினை தொடர்பிலோயோ மூச்சும் காட்டவில்லை. (ம-ஒ.5)

## ஆட்சியமைக்க...

அவர்களுடன் இணைந்து பேசி ஆட்சி அமைப்போம். இவ்வாறு முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ச தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் மாநாட்டுக்கு வருமாறு எதிர்க்கட்சியில் உள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சிநாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளோம். சுதந்திரக் கட்சி எங்களுக்கு ஆதரவை வழங்குவது குறித்து பேச்சு நடத்தப்படுகிறது. அரச தலைவர் தேர்தலில் போட்டியிட எனக்கு அதிர்ஷ்டமில்லை என்று நினைக்கிறேன். ஆனாலும் திறமையான நிர்வாகத் திறன் கொண்ட பாதுகாப்பை உறுதிப்படுத்தக் கூடிய ஒருவர் வேட்பாளராக நியமிக்கப்படுவார்.

முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச தனது அமெரிக்க குடியுரிமையை நீக்கிக் கொண்டுள்ளார். மகிந்த ராஜபக்ச தலைமையிலான அரசை மக்கள் எதிர்பார்க்கிறார்கள். அவரின் வழிகாட்டலின் கீழ் ஆட்சி முன்னெடுக்கப்படும்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலில் அரசியல் பிரமுகர்கள் சம்பந்தப்பட்டிருந்தால் அவர்களுடன் நாங்கள் எந்தத் தொடர்பையும் வைக்கமாட்டோம். ஆனால் என் மீதும் வீண் குற்றச்சாட்டுகளை முன்வைத்து, வெள்ளை வானில் நீதிமன்றம் கொண்டுசென்றனர். நாம் யோசித்து முடிவெடுப்போம்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் சேர்ந்தால் வெற்றி பெறுவோம் என்றும் இல்லை. தோல்வியடைவோம் என்றும் இல்லை. ஆனால் எல்லாக் கட்சிகளையும் இணைத்து போட்டியிட வேண்டும். பொதுமக்கள் முன்னணியின் தலைமைப் பொறுப்பை ஏற்பதால் மகிந்தவுக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவியோ நாடாளுமன்ற உறுப்பினர் பதவியோ இல்லாமற் போகுமானால் அதைப்பற்றி எமக்கு கவலையில்லை. மகிந்த எப்போதும் மக்கள் மனதில் உள்ளார். அவர் மக்கள் தலைவர்.

பன்னாட்டு ரீதியாக நாங்கள் கடந்த கால தவறுகளை மீண்டும் செய்யமாட்டோம். உலக நாடுகள் பலவற்றுடன் இராஜதந்திர ரீதியில் நாங்கள் நெருங்கிச் செயற்படுகிறோம் - என்றார். (ஒ.5,21,22)

## கோத்தபாயவைப்...

னாள் அமைச்சர் பசில் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில், கோத்தபாய அரச தலைவராவது தொடர்பில் மக்கள் அச்சப்படுகின்றார்கள். அது தொடர்பில் உங்கள் கருத்து என்ன என்று செய்தியாளர் ஒருவர் கேள்வி எழுப்பினார்.

'அப்படி அச்சப்படத் தேவையில்லை' என்று பசில் ராஜபக்ச பதிலளித்தார். (ஒ.5,21,22)

# உங்களுக்குத் தெரியுமா?

- டைனோசர் என்றால் கிரேக்க மொழியில் பயங்கரமான 'பல்லி' என அர்த்தம்.
- அங்கோலா நாட்டில், உற்பத்தியாகும் குபாஸ்கோ ஆறு 1590 கிலோ மீற்றர் தூரம் ஓடி கலகாரி பாலைவனத்தில் பாய்ந்து ஆவியாகி விடுகிறது.
- சால்மன் மீன்கள் நீர் மட்டத்தை எதிர்த்து சுமார் மூவாயிரம் மைல்கள் பயணித்து முட்டைகளை இட்டு விட்டு இறந்து விடுகின்றன.
- தொலைபேசியைக் கண்டு பிடித்த அலெக்ஸாண்டர் கிரகம் பெல் தனது சொந்தப் பாவனைக்காக ஒரு தொலைபேசியைக்கூட வைத்திருக்கவில்லை.
- நம் காதுகள் மதியவேளையில் மந்தமாகவும், இரவு,அதிகாலை நேரங்களில் மிகக் கூர்மையாகவும் செயற்படுகின்றன.
- கார் ஓட்டுநர்கள், கார் ஓட்டும்போது பயணிகளுடன் பேசக் கூடாது என ஜேர்மன் நாட்டில் சட்டம் ஒன்று உள்ளது.
- விண்வெளி வீரர்கள் அணியும் உடையின் எடை சுமார் 127கிலோ. இதற்குக்காரணம் அது 13 அடுக்குகளைக் கொண்டமைந்ததே.
- தேன் எளிதில் சமிபாடடைந்து விடும். ஏன் தெரியுமா? அது ஏற்கனவே தேனீக்களால் ஜீரணமாக்கப் பட்டது.
- சேவல்களால் கழுத்தை நிமிர்த்தாமல் கூவ முடியாது.

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 21/12/1950 மறைவு 07/08/2019

எமது பாடசாலையில் நீண்ட காலமாக ஆசிரியராகவும், அதிபராகவும் கடமையாற்றிய இளைப்பாறிய அதிபர்

**சாம்பசிவம் தியாகலிங்கம்**

அவர்களின் மறைவு குறித்து ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நாரந்தனை.

பிரிவின் துயரில்,
பாடசாலைச் சமூகம்,
யா/ நாரந்தனை கணேச வித்தியாலயம்.

CS27250(16/17)

## மரண அறிவித்தல்

### பிரம்மஶ்ரீ இராஜேஸ்வரசர்மா



சித்தங்கேணி, சிவன் கோவிலடியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட பிரம்மஶ்ரீ சத்தியதாசன் சர்மா இராஜேஸ்வர சர்மா நேற்று (08.08.2019) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் பிரம்மஶ்ரீ சத்தியதாசன் சர்மா - லலிதாம்பாள் தம்பதியினரின் பாசமிகு மகனும் - முத்துக்குமாரசாமி தம்பதியினரின் பாசமிகு மருமகனும் கௌதமியின் அன்புக் கணவரும் அபிஷானா, அபிசாயினி, அபிவர்னன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் விஜயலக்சுமி, உதயசங்கர சர்மா, ஆகியோரின்அன்புச்சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.08.2019) வெள்ளிக்கிழமை பி.ப 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக சங்கானை இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**சிவன் கோவிலடி,**
**சித்தங்கேணி**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 25 . 11 . 1928



உதிர்வு 21 . 07 . 2018

திதி:- பூர்வபக்க நவமி

வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும், கொழும்புத்துறை, வைமன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட

### திருமதி தவமணி நடராசா

எமது அன்புத் தெய்வத்தின் முதலாம் ஆண்டு ஆத்மசாந்திப் பிரார்த்தனை **122/2, 4ஆம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தியிலுள்ள அவரது மகளின் இல்லத்தில் நடைபெறும்.** அதனைத் தொடர்ந்து முற்பகல் **11 மணியளவில் 527,** நாவலர் வீதியில் **அமைந்துள்ள சொர்ணாம்பிகை மண்டபத்தில்** *(TCT)* பிரார்த்தனையும் மதியபோசன நிகழ்வும் நடைபெறும். இந்நிகழ்வுகளில் தங்கள் குடும்ப சகிதம் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.


எம்மை எல்லாம் வையத்தில்
வாழ்வாங்கு வாழ வைத்த
அன்புத் தெய்வமாம்
எம் அன்னையின் முதலாம்
ஆண்டு நிறைவில்

ஆத்திப்புலம் சந்திரசேகரப்பிள்ளையாரின்
பாதார விந்தங்களில்
ஆன்மா சாந்தியடைய
இறைவனை வேண்டி நிற்கும்
அன்பு உள்ளங்கள்.

**ஆனைப்பந்தி.** (CS/27177)(11) **குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

தோற்றம் 20 . 04 . 1945



மறைவு 08 . 08 . 2019

### நாகலிங்கம் குமாரசாமி

(பிரசித்த நொத்தாரிஸ்)

கிராமக்கோடு, புலோலி மேற்கு, பருத்தித்துறையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் குமாரசாமி நேற்று (08.08.2019) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் பார்வதி தம்பதியினரின் அன்பு மகனும் ஜெகதீஸ்வரியின் அன்புக்கணவரும் மதிவதனன் (எசட்லைன் லீசிங் கம்பனி, யாழ்ப்பாணம்), பகீரதன் (முகாமையாளர், செலிங்கோ லைப் இன்சூரன்ஸ், நெல்லியடிகிளை 04), ஜெயரூபி, ஜெயசாந்தி (முகாமைத்துவ உதவியாளர், வலயக்கல்வி பணிமனை வடமராட்சி வலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சரண்யா (ஆசிரியை, யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), விஜயசாந்தி (ஆசிரியை, யா/செம்பியன்பற்று அ.த.க பாடசாலை), யுவராஜ் (அபிவிருத்தி உத்தியோகத்தர் , உதவி அரசாங்க அதிபர் பணிமனை நெடுந்தீவு) ஆகியோரின் அன்பு மாமனாரும் கவினின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின்இறுதிக்கிரியைகள்இன்று(09.08.2019)வெள்ளிக்கிழமை காலை 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆனைவிழுந்தான் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**
077 224 7897, 077 416 1287
021 226 0156

**கிராமக்கோடு புலோலி மேற்கு, பருத்தித்துறை.**

## FACULTY OF SCIENCE, UNIVERSITY OF JAFFNA
## IN-COURSE ASSESSMENTS(FIRST SEMESTER)

***GENERAL DEGREE EXAMINATION IN SCIENCE – 2018, LEVELS 1G& 2G***

***BACHELOR OF SCIENCE DEGREE EXAMINATION IN COMPUTER SCIENCE – 2018, LEVEL 1S & 2S***

The In-Course Assessments (ICAs) for Level 1G/1S and 2G/2S will be conducted on 02/09/2019 &03/09/2019 and 19/08/2019 & 20/08/2019 respectively.

The Examination Timetable is displayed on the Notice Board and our faculty website: http://www.sci.jfn.ac.lk.

**Registrar**
**08/08/2019**

(N/10920)(1)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

## ஸ்ரீஸ்கந்தராசா வரோதயன்-(M.B.B.S)




சிறுப்பிட்டி வடக்கைச் சேர்ந்த க.ஸ்ரீஸ்கந்தராசா(ஓய்வு நிலை கிராம அலுவலகர்) – மல்லிகாதேவி தம்பதிகளின் தவப்புதல்வன் செல்வன் **ஸ்ரீ.வரோதயன்** கொழும்பு பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் பயின்று சிறப்புச் சித்தியடைந்து 24.07.2019 அன்று கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் M.B.B.S பட்டத்தை பெற்றுள்ளார்.

**இவர் மேலும் பல பட்டங்களைப் பெற்று சிறந்த வைத்தியராக சேவையாற்ற இறையாசி வேண்டி பாராட்டி வாழ்த்துகிறோம்.**

வாழ்த்துவோர்

**செல்வி இராமசாமி திலகவதி (ஓய்வு நிலை ஆசிரியை) -அத்தை-வளலாய்**

**திருமதி ஸ்ரீ முருகானந்தராசா சியாமளா- அத்தை-சுவிஸ்**

C10926 (16)

# 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 10.07.2019 புதன்கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர்

## செல்லப்பா வைத்தியநாதன்

அவர்களுடைய வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (09.08.2019) வெள்ளிக்கிழமை

முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற வுள்ளது. அத்தருனம் தாங்கள் வருகை தந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.**

**கலைவாணி வீதி,**
**கோண்டாவில் வடக்கு, கோண்டாவில்.**

**குடும்பத்தினர்**

(cs.27242) (13)

# மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் பகிரங்க பிஸ்கால் ஏல விற்பனை

கொமர்ஷல் பாங்க் ஒவ் சிலோன் (PLC) இல:21. சேர் றசீக் பறீட் மாவத்தை. கொழும்பு 01. அதன் வேலணைக்கிளை அலுவலகம் குறிகட்டுவான் றோட், பங்களாவடிச் சந்தி. வேலணை.

**வழக்காளி**

எதிர்

01. புவனேந்திரன் வேரகன்
02.வேரகன் பெண் சுகன்யா
ஏழாலை தெற்கு. சுன்னாகம்.

**எதிராளிகள்**

பெறுமதி : ரூபா 6,176,052/31
தன்மை : ஈட்டு முறி
கிரமம் : ஒழுங்குமுறை
வழ.இல. : ஈடு/29/2016

2017 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 25 ஆம் திகதி இந் நீதிமன்றினால் இடப்பட்ட கட்டளையின்படி மல்லாகம் மாவட்ட நீதிமன்ற பிஸ்காலாகிய N.K.கஜரூபன் ஆகிய என்னை அங்கீகரிக்கப்பட்ட கட்டுப்பாடுகளுக்கமை வாகவும் எனக்களிக்கப்பட்ட இவ் விற்பனை அதிகாரத்திற்கமைவாகவும் இவ் விற்பனையை நடத்த மன்று நியமித்துள்ளதால் இதன் கீழுள்ள ஆதன அட்டவணையில் விவரிக்கப்பட்ட ஆதனத்தை குறித்த ஏழாலையில் அமைந் துள்ள **"மகாநாயன் கலட்டி" நிலப்பரப்பு 03 மூன்றும் குளி 17.4 பதினேழு தசம் நான்கும்** வீடும் கிணறும் ஆதனத்தில் நின்று 2019 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 18 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படுமென இத்தால் அறியத் தருகின்றேன்.

**தீர்வைத் தொகை**

எதிராளிகள் வழக்காளிக்கு வழக்குச் செலவு கொடுக்க வேண்டியுள்ளது.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் தெற்குப்பகுதி மல்லாகம் கோவிற்பற்று உடுவில் பிரதேச செயலகம். வலிகாமம் தெற்கு பிரதேச சபை. கிராம அலுவலர் பிரிவு ஏழாலை கிழக்கு J/204 ஏழாலை இறை:

**"மகாநாயன் கலட்டி" நிலப்பரப்பு 03 மூன்றும் குளி 17.4 பதினேழு தசம் நான்கும்** வீடும் கிணறும் மற்றும் அதற்குரியவைகளும் இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் S.K. சிவாநந்தன் அவர்களால் 26.04.2012 திகதியில் 2481 ஆம் இலக்கத்தில் தயாரிக்கப்பட்ட படத்தில் 1 ஆம் துண்டாகக் காட்டப்பட்டுள்ளது. இதற்கெல்லை **கிழக்கு:** சிவபாதம் கைம்பெண் செல்லமணியின் ஆதனம். **வடக்கு:** ஒழுங்கை. **மேற்கு:** கணபதி கைம்பெண் பொன்னியினாதனம். தெற்கு : கணபதி மார்க்கண்டுவினாதனம். இதடங்கலும் இன்னும் மேற்கெல்லை பொது ஒழுங்கைக்கு போக்குவரவு செய்ய விடப்பட்ட 10 பத்தடி அகலப்பாதையின் பாவிப்புரித்தும்.

வாங்கற்காரன் கொள்விலையில் நாலிலொரு பங்கை (¼) உடன் அவ் விடத்திலேயே செலுத்துவதுடன் பின்வரும் செலவுகளையும் மேலதிகமாக செலுத்த வேண்டும்.

அரச இறை (பவுண்டேஜ்) 1 %
பிஸ்கால் செலவில் சிவில் நடைமுறைக்கோவையின்படி
விளம்பரச் செலவுகளும், பிரசித்த செலவுகளும்
விற்பனை சம்பந்தமான போக்குவரத்து செலவுகள்
விற்பனை கமிசன் சிவில் நடைமுறைக்கோவையின்படி
விற்பனை ஒப்பந்தக்கட்டணம் (நொத்தாரிஸ் தயாரித்த பட்டியலின்படி)

**2019 ஆம் ஆண்டு 08 ஆம் மாதம் 08 ஆம் திகதி**

**நீதிமன்ற கட்டளைப்படி**
**பதிவாளர் /பிஸ்கால்,**
**மாவட்ட நீதிமன்றம், மல்லாகம்.**

(cs.27244) (13)

## அத கோடிபதி — அட கோடிபதி ADA KOTIPATHI

சீட்டிழுப்பு இல: 694
வர்ணம் : நீலம்
சீட்டிழுப்பு திகதி: 2019.08.08

இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 77,853,920/-

வெற்றி இலக்கங்கள்: 02 07 21 45 O

விசேட வெற்றி இல. 4395

## ராசி அதிர்ஷ்டம்

| திகதி | வெற்றி வாரம் | வர்ணம் |
| --- | --- | --- |
| 08.08.2019 | 2580 | ஊதா |

சிம்மம்

வெற்றி இலக்கங்கள்: 12 21 31 40

வெள்ளிக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2.427.904/=

## டபள் சான்ஸ்

விசேட இல.

ரூ.500 பரிசுக்காக 1096

ரூ.100 பரிசுக்காக 973

09.08.2019 ம் திகதி வெள்ளிக் கிழமை நீலம் நிற டிக்கட்டுக்களாகும்

வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

## ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

| சீட்டிழுப்பு வாரம் | சீட்டிழுப்பு திகதி |
| --- | --- |
| 1593 | 08.08.2019 |

வெற்றி இலக்கங்கள்: 27 47 62 63 E

அடுத்த செவ்வாய்கிழமைக்கான ஜக்பொட் ரூ.35, 496. 248/=

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>JY என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 776

மஞ்சள் நிற டிக்கெட்டுக்கள் 13.08.2019 திகதி செவ்வாய்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கெட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

# மண்டலாய்ப் பிள்ளையார் ஆலய பொதுக்கூட்டம்

**இடம் :- மண்டலாய்ப் பிள்ளையார் ஆலய முன்றல்**

**காலம் :- 18.08.2019 (ஞாயிற்றுக்கிழமை) முற்பகல் 10.30**

**தலைமை :- திரு.க.கனகேஸ்வரன் (பிரதேச செயலரும், ஆலய பரிபாலன சபைத் தலைவரும்)**

**நிகழ்ச்சி நிரல்**

- இறைவணக்கம்
- சென்ற கூட்ட அறிக்கை வாசித்தல்
- கணக்கறிக்கை வாசித்தல்
- புதிய யாப்பினை வாசித்தலும். அங்கீகரித்தலும்
- அங்கீகரித்த யாப்புக்கு அமைய புதிய நிர்வாகத் தெரிவு
- ஆலய உறுதி தொடர்பான விடயம்
- நன்றியுரை.

இக்கூட்டத்தில் வழிபடுவோர். ஆலய உபயகாரர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

பிரதேச செயலகம்,
வடமராட்சி கிழக்கு.
மருதங்கேணி.

பிரதேச செயலாளரும்/
ஆலய பரிபாலனசபைத் தலைவரும்.

# ஆண்டு ஒன்றின் நினைவலைகள்...



மண்ணின் மடியில் 21.06.1948

இறைவனின் நிழலில் 22.07.2018

அமரர்

## கந்தையா சண்முகலிங்கம் (செட்டி)

**திதி: ஆடி வளர்பிறை தசமி**

ஆண்டு ஒன்றாகி விட்டது எங்கள்
நினைவுகள் உங்களைச் சுற்றிச் சுழல்கின்றது
மீண்டும் பிறப்பொன்று இருந்தால் எங்களில்
ஒருவராய் மண்ணில் வருவீரோ என்று....?

ஏக்கமுறத் தவித்து நிற்கும்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவுகள்.

(cs 27228) (13)

24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள

**NEWUTHAYAN.COM**

# பணியாளர் தேவை

யாழ் நாவலர் வீதியில் இயங்கும் தையல் நிலையத்திற்கு பெண்களுக்கான ஆடைகள் தைக்கும் அனுபவமுள்ள பெண்கள் தேவை.

தொடர்பு:- 154, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.


**076 462 7459**

# வேலையாள்கள் தேவை

சுன்னாகத்தில் உள்ள பலசரக்குக் கடை ஒன்றுக்கு வேலையாள்கள் தேவை.
சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

**075 640 4546**

# இப்பொழுது திரையில்




வடக்கு மற்றும் கிழக்கு திரையரங்குகளில்

MAJESTIC CITY CINEPLEX Jaffna

| | |
| --- | --- |
| CHELVA Jaffna | RAJA Jaffna |
| VIJAYA Batticaloa | SARU Point Petro |
| SARASWATHI Trinco | KIVESH Mankadu |
| SUGANTHI Batticaloa | NELSON Trinco |
| ANNAI SELLAM Chenkalady | BALA Chavakacheri |
| VASANTHI Vavuniya | WELINGTON Kantale |
| ARCHANA Akkraipattu | GK CINEMA Kalmunai |

மற்றும் நாடெங்கிலும் உள்ள ஏனைய திரையரங்குகளிலும்

Distributed by: Cinema Entertainments (Pvt) Ltd (CEL)

# MAJESTIC CINEPLEX




Jaffna Platinum / Silver
10.30AM | 1.30PM | 4.30PM | 7.30PM | 10.30PM / 7.00PM




Jaffna Bronze (2D)
4.30PM




Jaffna Bronze (2D)
10.30AM | 1.30PM | 7.15PM




Jaffna Silver
10.45PM | 1.45PM
4.30PM

மேலதிக விபரங்கள் தொடர்பாக அழையுங்கள் **011 5 999 999**

CEYLON THEATRES Since 1928
www.ceylontheatres.lk
MajesticCineplexSL

**பெண் உதவியாளர் தேவை**

ஆரோக்கியமான சுயமாக செயற்படக் கூடிய வயோதிப் பெண் ஒருவருக்கு வீட்டு வேலைகளையும், சமையலும் செய்யக்கூடிய பெண் உதவியாளர் தேவை. சம்பளம் 30, 000ரூபா தொடர்புகொள்ளவேண்டிய தெ.பே.இல.

**077 943 2494**

**பெயர் மாற்றம்**

188/15, தாவடி வடக்கு, கொக்குவிலைச் சேர்ந்த **கலிகாபேகம்** ஆகிய எனது முதற்பெயரை **மைஷா** எனப் பெயர்மாற்றம் செய்வதோடு இனிவரும் காலங்களில் **மைஷா** என கையொப்பமிடுவேன் என தெரியப்படுத்துகின்றேன்.

**பெயர் மாற்றம்**

முகாம் வீதி, ஊர்காவற்றுறையினைச் சேர்ந்த **திருமதி ஞானநாயகம் றோஸ்** ஆகிய நான் (09.08.2019) இன்றிலிருந்து எனது பெயரை **திருமதி ஞானநாயகம் மரியறோஸ்** என்று மாற்றம் செய்வதோடு சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பம் இடுவேன் என்று அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திருமதி ஞானநாயகம் மரியறோஸ்**

**ROOM வாடகைக்குண்டு**

திருநெல்வேலியில் பல்கலைக்கழகத்திற்கு அருகாமையில் அறைகள் வாடகைக்கு உண்டு. பல்கலைக்கழக மாணவர்கள் விரும்பத்தக்கது.

**076 998 0837, 077 586 2975**

**தவறிவிட்டது**

தேசிய அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம், வாகனத்துக்கான காப்புறுதி அட்டை, வாகன வரிப்பத்திரம், சிற்றூர்திச் சங்கத்தினால் வழங்கப்பட்ட அடையாள அட்டை ஆகியன அடங்கிய பேர்ஸ் கடந்த 4ஆம் திகதி உரும்பிராய்க்கும் மாதகலுக்கும் இடையில் தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ளவும்.

சின்னத்துரை ரங்கநாதர்
077 525 8036,077 619 6418

# VACANCIES
# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

**University of Jaffna will entertain applications from qualified persons for the under mentioned posts.**

## FACULTY OF MEDICINE

**1. Senior Professor/Professor of**

Anatomy/ Physiology/ Community & Family Medicine/ Pathology/ Forensic Medicine/ Pharmacology/ Medicine/ Psychiatry/ Obstetrics &Gynaecology/ Paediatrics / Surgery

**2. Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II/ / Lecturer (Unconfirmed) / Lecturer (Probationary) in** Anatomy/ Biochemistry/ Physiology/ Community & Family Medicine/ Pathology/ Microbiology/ Parasitology/ Forensic Medicine /Pharmacology/ Nuclear Medicine / Psychiatry/ Paediatrics/Surgery

**Note 1:**

I. Applications for the above posts will be entertained from the candidates with **MBBS degree** as their first degree

II. For the Posts of Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II/ Lecturer (Unconfirmed)/ Lecturer (Probationary), preference will be given to those who have/are doing/are willing to do the post graduate degree as given below against the subject:

i. Anatomy - a) MD in Surgery/ MD in Surgery with sub specialty/ Radiology
- b) M.Phil/M.Sc./Ph.Din Anatomy

ii. Biochemistry - a) MD in General Medicine/Chemical Pathology/ Genetics/Clinical Genetics/Nutrition/Clinical Nutrition
- b) M.Phil/M.Sc./Ph.D in Biochemistry

iii. Physiology - a) MD in General Medicine/ Anaesthesiology/ Paediatrics/ Surgery/ Obstetrics & Gynaecolgy/ Emergency Medicine
- b) M.Phil/M.Sc./Ph.D in Physiology

iv. Community & Family Medicine - MD in Community Medicine/Family Medicine

v. Pathology - MD in Haematology/Histopathology

vi. Microbiology MD in Clinical Microbiology/Medical Microbiology/ Immunology

vii. Parasitology - MD in Parasitology

viii. Forensic Medicine - MD in Forensic Medicine

ix. Pharmacology - a) MD in Clinical Pharmacology/ General Medicine/ Paediatrics/ Anesthesiology
- b) Ph.D in Pharmacology/Clinical Pharmacology

x. Nuclear Medicine - MD in Radiology

xi. Psychiatry - MD in Psychiatry/Psychiatry with sub specialty

xii. Paediatrics - MD in Paediatrics/ Paediatrics with sub specialty in Neonatology/ Paediatrics with sub specialty in Neurology

xiii. Surgery - MD in Anaesthesiology

**3. Temporary Research Assistant in Surgery**

**4. Temporary Scientific Assistant in Microbiology/Parasitology**

## UNIT OF ALLIED HEALTH SCIENCES, FACULTY OF MEDICINE

**Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II/ Lecturer (Unconfirmed)/ Lecturer (Probationary)** in Nursing/ Pharmacy/ Medical Laboratory Sciences

## FACULTY OF TECHNOLOGY

**Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II/ Lecturer (Unconfirmed)/ Lecturer (Probationary)** in Engineering Technology

**Note 2:**

Applicants possessing degrees in Engineering or Technology specialized in the fields of **Automobile Technology/Mechanical Engineering** will be considered.

### SALARY AND OTHER BENEFITS

| Post | Salary scale |
|---|---|
| Senior Professor | Rs.139175 - 11x2925-171350 p.m |
| Professor | Rs.117350 -13x2700-152450 p.m |
| Senior Lecturer Gr.I | Rs.91310 - 7x2170 -106500 p.m |
| Senior Lecturer Gr.II | Rs.79360 - 11x1630 -97390 p.m |
| Lecturer (Unconfirmed) | Rs.69580 - 5x1630 –77730p.m |
| Lecturer (Probationary) | Rs.54600 - 10x1335 – 67950 p.m |
| Temporary Research Assistant | Rs.45,092/- (fixed) p.m |
| Temporary Scientific Assistant | Rs.43,611/- (fixed) p.m |

**Note3:**

The above salary scales are fully operative w.e.f 01.01.2020 and the placement of salary applicable to the posts for the years 2019 & 2020 will be made in accordance with the University Grants Commission Circular No. 17/2016(v) dated 01.06.2018.

In addition to the above salary,

1. The following allowances will be paid in the percentage of the basic salary to for all permanent posts:

i) Academic allowance

| | |
|---|---|
| Senior Professor | - 167% |
| Professor | - 162% |
| Senior Lecturer Gr.I/Gr.II | - 151% |
| Lecturer (Unconfirmed) | - 131% |
| Lecturer (Probationary) | – 115% |

ii) Additional monthly allowance – 20% of the basic salary

iii) Research allowance - 35% (based on the research activity)

2. Cost of living allowance of Rs.7,800/-p.m.

### Statutory benefits:

1) Sabbatical leave entitlement for the holder of the Post of Senior Lecturer Gr.II and above
2) Membership in Universities Provident Fund and Pension Scheme in the University system
3) Gratuity payments
4) Employees' Trust Fund benefits
5) Free Medical Services

### Closing date:

Applications should reach us on or before the date given below:

**Post of Senior Professor/Professor - 18.10.2019**
**Other posts - 12.09.2019**

Applications and other documents for the **Post of Senior Professor/Professor** shall be sent to the **Vice-Chancellor** with a covering letter. Applications for the other posts shall be sent to the **Deputy Registrar/Academic Establishments,** University of Jaffna, Sri Lanka with the certified photocopies of the educational & professional qualifications (with statement of the Degrees and service certificates.)

* Applicants for the Post of Professor are requested to submit the following in addition to the prescribed Application Form:

a) 18 copies of his/her Curriculum Vitae

b) 18 copies of self-assessment of his/her whole career that lists and specifies the contribution to:
- Teaching, Scholarship and Academic Development
- Research, Scholarship and Creative Work
- Dissemination of Knowledge
- Awards, University, National and International Development Activities

The Self Assessment should be prepared in accordance with the marking scheme, (issued with this document) giving details under each heading/sub heading.

c) Three copies each of the documents to support self assessment in :
- Teaching, Scholarship and Academic Development (Section 1.0)
- Research, Scholarship and Creative Work (Section 2.0)
- Dissemination of Knowledge (Section 3.1)
- Awards, University, National and International Development Activities and other relevant documents listed in the self assessment. (Section 3.2 & 3.3)

(Section 2.0 & 3.1 could be prepared as a separate document)

(The three copies of the publication, research papers and other relevant documents should be submitted in a form of that can be evaluated )

d) Titles of five (05) outstanding research publications/research papers by the candidate.

Application forms and other details will be available in the University website www.jfn.ac.lk. Those who wish to send the application forms downloaded from the University website should accompany with the paid Bank Slip for the deposit of a sum of Rs.100/- credited to the Peoples Bank Account No: 162-1-001-6-0000880 of Bursar, University of Jaffna.

Application forms and other details may be obtained from the office of the Deputy Registrar, Academic Establishments, University of Jaffna, Sri Lanka, on a payment of Rs.100/- per application form. Those who wish to obtain application forms by post are requested to send a self – addressed stamped envelope 23x10 c.m. in size along with the paid Bank Slip to the above address.

The candidates who apply for more than one post should submit separate application along with separate Bank slip. The post applied for should be marked on the top left hand corner of the envelope.

Applicants from the University System/Government Departments /Corporations and Statutory Boards should channel their applications through the Head of respective Institutions, but may send an advance copy in the first instance. However, no such applicant will be considered for interview, if the application channeled through the Head of the Department is not received.

Illegible & incomplete applications, and applications received by the University after the closing date will be rejected without intimation. Only short- listed applicants will be called for an interview.

**REGISTRAR**
**UNIVERSITY OF JAFFNA, SRI LANKA.**
**08.08.2019**

(IN/10925)(11)

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



# எல்லாம்தலைகீழாக மீண்டும்மாறிவிடும்

தமிழர்கள்விரும்பினாலும்விரும்பாவிட்டாலும்அரச தலைவர்தேர்தலுக்கானபோட்டிதீவிரமடைந்துவருகின்றது என்பதைக் கடந்த சில நாள்களாக வெளிவரும் செய்திகள் வெட்டவெளிச்சமாக்குகின்றன. பதவியைக் கைப்பற்றுவதற்கான போட்டியில் ஐக்கிய தேசியக் கட்சியின்வேட்பாளர்களாகவரக்கூடியவர்களும்பொதுமக்கள் முன்னணியின்வேட்பாளர்களாகக்கூடியவர்களும்வாக்குகளைக் கவர்வதற்கான பணிகளில் மும்முரமாக இறங்கியிருக்கிறார்கள்.

பொதுமக்கள்முன்னணியின்சார்பில்கோத்தபாயராஜபக்சவே களமிறங்குவார் என்பது அனேகமாக உறுதியாகி வருகின்றது. பசில்ராஜபக்சவின்பெயரும்இந்தப்போட்டியில் அடிபட்டாலும் அவர் போட்டியிடமாட்டார் என்பதுநேற்றுத்தெளிவாகிவிட்டது. கோத்தபாயவேபோட்டியிடப்போகிறார் என்கிற நிலையில் அவர் கட்சிகளின் ஆதரவைத்திரட்டுவதற்கானசந்திப்புக்களையும்நடத்தத் தொடங்கியிருக்கிறார்.

அத்தகைய சந்திப்புக்கள் அவரது நிலைப்பாட்டை மிகத் தெளிவாக வெளிப்படுத்தி வருகின்றன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் பங்காளிக் கட்சியாக இருக்கக்கூடிய புளொட் அமைப்பின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தனுடன் அவர் நடத்திய சந்திப்பு தமிழர்களின் பிரச்சினை தொடர்பில்அவர்கொண்டிருக்கக்கூடியநிலைப்பாட்டைத் தெளிவுபடுத்துவதாக இருந்திருக்கிறது.


இலங்கையில்நிலவுவதுஒருபொருளாதாரப்பிரச்சினையே தவிரஇனப்பிரச்சினைஅல்லஎன்றபுரிதலிலேயேகோத்தபாயஇப்போதும்இருக்கிறார். போர்க்காலத்திலும்அவர் இதேநிலைப்பாட்டைத்தான்கொண்டிருந்தார்.நாட்டைத் துரிதமாகஅபிவிருத்திப்பாதையில்கொண்டுசென்றுவிட்டால் தமிழர்களின் பிரச்சினைகள் எவையும் இருக்க மாட்டா என்றே அவர் கருதுகின்றார். அதனால் புதிய அரசமைப்பு, அரசியல்தீர்வு ஆகிய விடயங்கள் குறித்துப் பெரிதாகஅலட்டிக்கொள்ளும்நிலையில்அவர்இல்லை.

அரசமைப்பின்13ஆவதுதிருத்தத்தைநடைமுறைப்படுத்துவது என்பதற்கு அப்பால் தீர்வு குறித்துச் சிந்திப்ப தற்குக் கூட அவர் தயாராக இல்லை. சிங்களவர்களின் வாக்குகளை மட்டும் வைத்துக்கொண்டே தான் அரச தலைவர் தேர்தலில் வெற்றிபெற்று விடலாம் என்று அவர் கருதுவதனால் தமிழர்களின் பிரச்சினைக்குக் கனதியான முன்னுரிமைவழங்கப்படவேண்டும்என்பதில்அவருக்குஉடன்பாடுஇல்லை என்பதும் வெளிப்படுகின்றது.

அதேவேளை, தாம் மீண்டும் அதிகாரத்துக்கு வந்தால் அரசமைப்பின்19ஆவதுதிருத்தத்தைநீக்கிவிடப்போவதாக முன்னாள்அரசதலைவர்மகிந்த ராஜபக்சவும்தெரிவித்திருக்கிறார். 19ஆவது திருத்தம் நீக்கப்பட்டால்அரசதலைவர்பதவிக்கு மீண்டும்முழுமையானஅதிகாரம்திரும்பக் கூடும்.சுயாதீனஆணைக்குழுக்கள்தூக்கிவீசப்படக்கூடும்.

ஆக மொத்தத்தில் நாடு மீண்டும் இருண்ட யுகத்தை நோக்கி முழு வீச்சில் திரும்பிப் பயணிக்கவேண்டியிருக்கும். ஒரு குடும்ப ஆட்சி முறைக்கு எதிராக 2015இல் இலங்கை மக்களில் பெரும்பான்மையானவர்கள் ஏற்படுத்திய மாற்றம் பொருளற்றதாக்கப்பட்டு, அதே குடும்பத்தின் ஆட்சி மேலும் வலுவானதாக அரங்கேறக்கூடும்.

இவ்வாறு இலங்கை பின்னோக்கிப் பயணிக்கத் தொடங்கும்போது அதில் அதிகம் பாதிக்கப்படுபவர்களாகதமிழர்கள்உள்ளிட்ட சிறுபான்மையினரே இருக்கப்போகின்றார்கள். இந்த நிலையை எதிர்கொள்வதற்கான தயார்ப்படுத்தல்களோடுதமிழர்கள்இருக்கின்றார்களாஎன்பதேஇன்று பயமுறுத்தும் கேள்வி.



# விக்னேஸ்வரனுக்கு எதிரான தீர்ப்பும் அவர் மீதான சந்தேகங்களும்

■ சேரலாதன்

முன்னாள் மாகாண அமைச்சரான பா.டெனீஸ்வரனைப்பதவிநீக்கம் செய்த வழக்கில் மேல் முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு சட்டத்தை மதிக்காது நடப்போர்களுக்கு ஒரு பாடமாகவே அமைந்து விட்டது.

இந்தத் தீர்ப்புத் தொடர்பாக வடக்கு மாகாண சபையின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரான சி.தவராசா கூறிய கருத்துக்கள் மிகவும் சரியானது. விக்னேஸ்வரன் தமது அதிகாரங்கள் எவை என்பதை அறியாது தலைகீழ் தெரியாமல் நடந்து கொண்டதன் விளைவே இந்தத் தீர்ப்பு எனவும் அரசர் சரியாகத் தெரிவித்துள்ளார்.

**அரசியல் மாயையை தகர்த்தெறிந்த நீதிமன்றத் தீர்ப்பு**

மாகாண சபையின் ஆட்சிக் காலத்தில் முதலமைச்சர் என்ற வகையில் அரசமைப்புக்களுக்கும், சபையின் ஒழுங்கு விதிகளுக்கும் கட்டுப்பட்டவராக விக்னேஸ்வரன் இருக்கவில்லை. ஒரு சிலரின் கைப் பாவனையாலேயே அவர் செயற்பட்டார். ஆரம்பத்தில் முன்னாள் மாகாண அமைச்சர் பொ.ஐங்கரநேசன் மீது குற்றச்சாட்டுக்கள் எழுந்த போது அதை உரிய வகையில் விசாரித்து பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தால் மாகாண சபையில் ஏற்பட்ட குழப்பங்களைத் தவிர்த்திருக்க முடியும். ஆனால், ஐங்கரநேசனுக்கு ஆதரவாகவே விக்னேஸ்வரன் கருத்துக்களை வெளியிட்டு வந்தார்.

அமைச்சர்களான டெனீஸ்வரன், குருகுலராஜா, சத்தியலிங்கம் ஆகியோரை தமது இஷ்டம் போன்று பதவி நீக்கம் செய்தார். இதுவே இவருக்குஎதிரானநம்பிக்கையில்லாத்தீர்மானத்துக்கு வழியமைத்தது. தம்மைப் பதவியில் அமர்த்திய கூட்டமைப்புக்கு எதிராகச் செயற்படுவதற்கும் இவர் தயங்கவில்லை. தற்போது புதிய கட்சி ஒன்றை ஆரம்பித்துள்ள இவர் கூட்டமைப்பு எதிரான புதிய கூட்டணியொன்றை அமைப்பதற்காக ஆள்களைத் தேடிக்கொண்டிருக்கின்றார். ஆனால் எவருமே இவரைச் சீண்டுவதாகத் தெரியவில்லை. நீதிமன்றம் இவருக்கு எதிராக வழங்கிய தீர்ப்பு இவரது அரசியல் மாயையைத் தகர்த்து எறிந்து விட்டது. இதனால் இவருடன் கூட்டுச் சேர்வதற்கு எவருமே சிந்திக்கமாட்டார்கள்.

நீதிமன்றத் தீர்ப்புத் தொடர்பாக இவர் கூறிய கருத்துக்களும் ஏற்கத்தக்கனவாகத் தெரியவில்லை. டெனீஸ்வரனைப் பதவியில் இருந்து நீக்குவதற்காகக் கூறி, தாம் ஆளுநருக்கு அனுப்பிய கடிதத்துக்கு அவர் நடவடிக்கை எதையும் மேற்கொள்ளவில்லை. இதை நீதிமன்றமும் கவனத்தில் எடுத்துக்கொள்ளவில்லையெனவும் விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இவருக்கு எதிரான நீதிமன்ற அவமதிப்பு வழக்கு ஒன்றும் நிலுவையில் உள்ளது. தீர்ப்பு இவருக்குப் பாதகமான அமைந்து விடுமாயின் இவரது நிலை மேலும் மோசமாகவே மாறிவிடும். ஆனால் தாம் நீதிமன்றத்தில் தோல்வியடைந்திருக்கும் கூட்டமைப்பிலேயே குற்றஞ்சுமத்திக் கருத்துக்கள் கூறியமையைக் கண்டிக்கத் தக்கது. தாம் அரசமைப்பைப் புரிந்து கொள்ளாமல் தவறிழைத்து விட்டு அதர்மம் புரிய வியாக்கியானம் ஒன்றைக் கூட முற்படுத்த எந்த வகையிலும் ஏற்கத்தக்கதாகத் தெரியவில்லை.

**வெளிச்சத்துக்கு வந்த சுயரூபம்**

மாகாணசபைக்கும்மாகாணமுதலமைச்சருக்கும் உள்ள அதிகாரங்கள் தொடர்பாக இலங்கையின் அரசமைப்பில் தெளிவாகக் கூறப்பிடப்பட்டுள்ளது. அரச தலைவராக இருந்தாலென்ன, மக்கள் பிரதிநிதியாக இருந்தாலென்ன அரசமைப்பு சகலருக்குமே பொதுவானது. அதை மதித்து நடக்க வேண்டிய பொறுப்பும் அனைவரிடத்திலுமுள்ளது. முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசரான விக்னேஸ்வரன் வடக்கு மாகாண சபையின் முதலமைச்சராகப் பதவியேற்றதன் பின்னரே மாகாண சபைக்கு மட்டுமல்லாது அதற்கு வெளியிலும் அரசியல் குழப்பங்கள் தோன்றின. இது தாமாகவே தோன்றவில்லை. விக்னேஸ்வரனால் தோற்றுவிக்கப்பட்டன என்று கூறுவதே மிகப் பொருத்தமானது. அரசியலுக்கு இங்கு இடமில்லை என்ற பெரும் கோசத்துடன் தமிழ்மக்கள் பேரவை அமைக்கப்பட்டது. பல துறைகளையும் சேர்ந்தவர்கள் இதில் ஆர்வத்துடன் இணைந்துகொண்டனர். விக்னேஸ்வரனுக்கு பேரவையின் இணைத் தலைவர் பதவி வழங்கப்பட்டது. அவரும் பேரவையுடன் தம்மை நன்கு பிணைத்துக்கொண்டார். ஆனால் விக்னேஸ்வரன் புதிய கட்சியொன்றை ஆரம்பித்தபோதுதான் அவரது சுயரூபம் வெளிச்சத்துக்கு வந்தது. தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக அவர் எதையும் செய்வார் என்றும் தெளிவாகத் தெரிய வந்தது.

தமிழ் மக்கள் பேரவையில் அங்கம் வகிப்பவர்கள் தமது கட்சியின் உறுப்பினர்களாகவும் மாற வேண்டும் என அவர் அறிவித்தல் விடுத்தமை பேரவை வட்டாரங்களில் கடுமையான அதிர்ச்சியை ஏற்படுத்தி விட்டது. விக்னேஸ்வரன் இவ்வளவு கீழ்த்தரமாக நடந்து கொண்டார் என எவருமே எதிர்பார்க்கவில்லை.

அதேவேளை பேரவை ஒரு கட்டத்துக்கு அப்பால் நகரமுடியாததொரு தேக்கமான கட்டத்தை எட்டி நிற்பதையும் அவதானிக்க முடிகிறது. இவற்றையெல்லாம் தொகுத்துப் பார்க்கும்போது விக்னேஸ்வரன் தமிழர்களுக்கு நல்வழி காட்டுவதை விடுத்து பள்ளத்தில் தள்ளி வீழ்த்திவிடுவாரோ என்ற ஐயமே ஏற்படுகின்றது.

உதயன்

# செய்திகள்

24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

வெள்ளிக்கிழமை 09 ஓகஸ்ட் 2019



# மரமுந்திரிகை உற்பத்திக்கு வடக்கில் பற்பல உதவிகள்!

## ஆளுநர் தெரிவிப்பு

*யாழ்ப்பாணம், ஓக. 9*

*வடக்கில் மரமுந்திரிகை உற்பத்திக்கு பல்வேறு உதவித் திட்டங்கள் வழங்கப்படவுள்ளன என்று தெரிவித்தார் வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவன். ஆளுநர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.*

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணத்தில் மரமுந்திரிகை உற்பத்தி செய்யக்கூடிய காரணிகள் சாதகமாக உள்ளன. மன்னார், பூநகரி போன்ற பகுதிகளில் மரமுந்திரிகை உற்பத்தி சிறப்பாக நடைபெற்றுள்ளது. ஆகவே வடக்கு மாகாணத்தில் இதன் உற்பத்தியை அதிகரிக்க வேண்டும். இதற்கு மரமுந்திரிகை தாபனத்தின் ஆலோசனை, வழிகாட்டலின்கீழ் இந்த செய்கைக்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன. 50 குடும்பங்கள் ஒரு பண்ணையாக கருதப்பட்டு அவர்கள் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் பதிவு செய்யப்படவுள்ளார்கள். அவர்களுக்கு 100 ஏக்கர் காணி மற்றும் உதவித் திட்டங்கள் வழங்கப்பட்டு மர முந்திரிகை உற்பத்திக்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன. இதன் மூலமாக மூன்று வருடங்களில் பயனைப் பெறமுடியும்.

**அரிசிக்கு நிர்ணய விலை**

வடக்கு மாகாணத்தில் விவசாயிகளால் உற்பத்தி செய்யப்படும் அரிசிக்கு நியாமான விலை கிடைக்கவேண்டும். அரசு நிர்ணயித்த விலைகளில் ஏனையவர்கள் கொள்வனவு செய்ய வேண்டும். விலையைக் குறைத்து கொள்வனவு செய்வதால் விவசாயிகள் பெரும் நட்டம் அடைகின்றனர். அவர்களின் வாழ்வாதாரமும் பாதிக்கப்படுகிறது. ஆகவே வடக்கில் அரிசியை நியாமான விலையில் விற்பனை செய்யக் கூடிய வாய்ப்புகளை விவசாயிகளுக்கு ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.

**தொழில் சான்றிதழ்**

வடக்கில் 5 ஆயிரம் பேருக்கு தேசிய தொழில் தகைமை சான்றிதழ் வழங்கப்படவுள்ளது. அவர்கள் செய்யும் வேலைக்கும் புலமைக்கும் ஏற்ப அந்தச் சான்றிதழ் வழங்கப்படவுள்ளது. உதாரணமாக சிகை அலங்காரம், தச்சு வேலை போன்ற பல்வேறு வேலைகளை தற்போதும் தொடர்ச்சியாக மேற்கொண்டு வருபவர்களுக்கு சிறிய செயன்முறை பரீட்சையின் பின்னர் இந்தத் தேசியச் சான்றிதழ் வழங்கப்படவுள்ளது.

**காணிப் பத்திரங்கள்**

காணிகள் இல்லாதவர்களுக்கான காணிப் பத்திரங்கள் வழங்கும் செயற்றிட்டம் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 10 ஆயிரம் பத்திரங்கள் வழங்கப்படவுள்ளன. இதில் சுமார் 3 ஆயிரம் காணிப் பத்திரங்கள் ஏற்கனவே வழங்கப்பட்டுவிட்டன. அடுத்து இன்னும் 3 ஆயிரம் பத்திரங்கள் விரைவில் வழங்கப்படும். இவ்வாறு படிப்படியாக இந்த வருடம் 10 ஆயிரம் காணிப் பத்திரங்கள் வழங்கப்படும்.

**மீன்பிடித் துறைமுகம்**

பல்வேறு தேவைகளை நிறைவு செய்யும் நோக்கில் பருத்தித்துறை மீன்பிடித் துறைமுகம் அமைக்கும் பணிகள் நடைபெறும். மாகாண சபை அதிகாரங்களுக்கு உட்பட்ட அதன் நிர்வாக நடவடிக்கைகள் நடைபெறுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் எழுதப்பட்டுள்ளது. அந்தப் பகுதியில் உள்ள மக்களும் பாதிப்பு ஏற்படாத வகையில் சிறு கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்படும். முதலில் அவர்களின் சிறிய படகுகளை நிறுத்தக்கூடிய கட்டுமானப் பணிகள் நடைபெறும். அதேபோன்று வடமராட்சி கடல் நீரேரி திட்டம், ஆனையிறவு நீர்த் திட்டங்கள் மூலம் பயனைப் பெறமுடியும்.

**மருத்துவம்**

சி.ரி ஸ்கானரை கொள்வனவு செய்வதற்கு உதவித் திட்டங்கள் கிடைக் கவுள்ளன. அது கொள்வனவு செய்யப்பட்டு மாகாண சபைக்கு உட்பட்ட மருத்துவமனையில் பயன்பாட்டுக்கு இருந்தால் நன்று. இதற்கான 60 வீதமான நிதி வெளியில் இருந்து கிடைக்கவுள்ளது. 40 வீதம் மக்கள் பங்களிப்பு நிதியாக இருக்க வேண்டும். அதற்கு நாம் இணக்கம் தெரிவித்துள்ளோம்.

வடக்கில் பெற்றோர்களை இழந்த சுமார் 2 ஆயிரத்து 500 பிள்ளைகளுக்கு மாகாண புலமைத் திட்டம் ஊடாக உதவிகளைச் செய்வதற்கு எண்ணியுள்ளோம். ஆனால் அந்தளவு எண்ணிக்கையிலான பிள்ளைகள் எமது மாகாணத்தில் இருக்கக் கூடாது என்று இறைவனைப் பிரார்த்திக்கின்றேன் - என்றார்.

**கேள்வி:** காசநோய் மருத்துவமனை அபிவிருத்தி தொடர்பாக?

**பதில்:** இது தேர்தல் காலம் ஆகவே எமக்கு என்ன நன்மை கிடைக்குமோ அதனைப் பெற்றுக்கொள்வதற்கு முயற்சிகள் எடுக்க வேண்டும்

**கேள்வி:** நீங்கள் அரசியலில் உள்நுழைய போகிறீர்கள் என்ற கருத்துப் பரவி வருகிறதே?

**பதில்:** அரசியல் ஒரு சாக்டை அதில் எனக்கு ஈடுபாடு இல்லை.

**கேள்வி:** பரீட்சை மாணவர்களுக்கு இடையூறாக ஒலிபெருக்கி உள்ளிட்ட சாதனங்களை பயன்படுத்துவது தொடர்பாக?

**பதில்:** இவ்வாறு மாணவர்களுக்கு இடையூறாக அதிக சத்தமாக பாடல்கள் மற்றும் இசைகளை எழுப்புபவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று உரியவர்களுக்கு பணித்துள்ளேன். இவ்வாறான முறைப்பாடுகளை வழங்குவதற்கு பொதுவான தொலைபேசி இலக்கம் ஒன்றை விரைவில் அறிமுகப் படுத்துவேன் - என்றார்.

**கேள்வி:** இரணைமடு அறிக்கை தொடர்பில் எந்தத் தகவலும் இல்லையே?

**பதில்:** அரச மொழி பெயர்ப்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அது வெளிப்படைத் தன்மையாக அமையும் - என்றார். (ம-7)

## வடக்கின் தண்ணீர்த் தேவைக்கு பல்வேறு திட்டங்கள் விரைவில்!

### ஆளுநர் உறுதி

யாழ்ப்பாணம், ஓக. 9



வடக்கின் தண்ணீர்த் தேவையை முழுமை செய்வதற்கு பல்வேறு திட்டங்கள் விரைவில் ஆரம்பிக்கப்பட்டு. நடைமுறைப்படுத்தப்படும். இவ்வாறு தெரிவித்தார் வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன்.

ஆளுநர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கில் தண்ணீர் தேவை அதிகமாக உள்ளது. எமக்கு 2030ஆம் ஆண்டு ஆகும் போது எவ்வளவு தண்ணீர் வேண்டும் என்று நாம் கணக்கிட வேண்டும். அப்போதுதான் தண்ணீர் இருப்பை எவ்வாறு வலுப்படுத்துவது உள்ளிட்ட காரணிகளை அறிந்து கொள்ள முடியும். தண்ணீருடன் தொடர்புபட்ட திணைக் களங்கள், சபைகள், தனித்தனியாக மாறுபட்ட அளவில் எவ்வளவு தண்ணீர் தேவை என்று இதுவரை காலமும் புள்ளிவிவரமாகக் குறிப்பிட்டுள்ளன. ஆனால் தற்போது உறுதியான ஒரு வரையறையை அவை தந்துள்ளன. இதன்படி 2030ஆம் ஆண்டு ஆகும்போது வீடு மற்றும் ஏனைய தேவைகளுக்கு 80 எம்.சி.எம். தண்ணீரும், கமத்தொழிலுக்கு 2 ஆயிரத்து 500 எம்.சி.எம். தண்ணீரும் தேவை. தாராளமாகத் தண்ணீர் பெற்றுக் கொள்ளக் கூடிய இடங்கள் இங்கு உள்ளன.

அதனைப் பயன்படுத்தி எவ்வாறு தண்ணீரைப் பெறுவது, சேமிப்பது, நிர்வகிப்பது போன்ற வேலைத் திட்டங்கள் நடைபெற்று வருகின்றன. இது தொடர்பான கருத்தரங்கு ஒன்றை விரைவில் நடத்தவுள்ளோம். துறைசார் வல்லுநர்கள் 150 பேர் இந்தக் கருத்தரங்கில் கலந்து கொள்வார்கள். (ம-7)



## இரணைமடுக் குளத்தின் கீழ் 72,000 மெற்றிக் தொன் நெல்

யாழ்ப்பாணம், ஓக. 9

இரணைமடுக் குளம் சிறப்பாக நிர்வகிக்கப்பட்டதன் காரணமாக இதுவரை 20 ஆயிரம் ஏக்கர் வரையில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் மூலம் 72 ஆயிரம் மெற்றிக் தொன் அறுவடையை எதிர்பார்க்கின்றோம் என்று தெரிவித்தார் வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன்.

ஆளுநர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நீர்பாசனத் தேவைகளுக்காக இரணைமடுக் குளம் அமைக்கப்பட்டது. அது சரியாக நிர்வகிக்கப்பட்டதன் காரணமாக தற்போது தேவையான தண்ணீர் காணப்படுவதோடு விவசாய நடவடிக்கைகளும் தற்போது சிறப்பாக நடைபெற்றுள்ளன. 4 ஆயிரம் ஏக்கரில் இதுவரை பயிர் செய்கையை மேற்கொள்ளப்பட்டுள்ளது. தற்போது அது 20 ஆயிரம் ஏக்கர் வரை சென்றுள்ளது. இதன் மூலம் 72 ஆயிரம் மெற்றிக் தொன் நெல் அறுவடையை எதிர்பார்க்கின்றோம் - என்றார். (ம-7)

## சிறப்புத் தேவையுடைய மாணவர்களுக்கு சிறப்பு போக்குவரத்துச் சேவை வடக்கில்!

யாழ்ப்பாணம், ஓக. 9

சிறப்புத் தேவையுடைய மாணவர்களுக்கு சிறப்புப் போக்குவரத்துச் சேவைகள் வடக்கில் அறிமுகப்படுத்தப்படவுள்ளன என்று தெரிவித்தார் வடமாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன்.

ஆளுநர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிறப்புத் தேவையுடைய மாணவர்களுக்கான போக்குவரத்துச் சேவைகள் வடக்கில் விரைவில் அறிமுகப்படுத்தப்படவுள்ளன. யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்டங்களுக்கு இடையில் இந்தச் சேவைகள் அறிமுகப்படுத்தப்படவுள்ளன. சிறப்புத் தேவையுடைய மாணவர்கள் வசதியாக பயணிக்கக்கூடிய வகையில் இந்தச் சேவைகள் அமையும் - என்றார். (ம-7)

## யாழ். - கொழும்பு இடையே அதிகளவு தொடருந்துச் சேவை

யாழ்ப்பாணம், ஓக. 9

யாழ்ப்பாணம் கொழும்பு இடையே அதிகளவு தொடருந்துச் சேவைகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்று தெரிவித்தார் ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தொடருந்துச் சேவையில் முன்னேற்றகரமான பல வேலைகள் நடைபெற்று வருகின்றன. அதிகளவு தொடருந்துகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. இது தவிர மேலும் இரண்டு தொடருந்துச் சேவைகள் விரைவில் அறிமுகப்படுத்தப்படவுள்ளன. இதற்கு எதிர்ப்பு வந்தால், அது பேருந்து ஓட்டுநர்களிடம் இருந்தாகத்தான் இருக்க முடியும். பாதுகாப்பாக குறைந்த கட்டணத்தில் மக்களுக்கு போக்குவரத்துச் சேவையை வழங்குவதைத்தான் நாம் எதிர்பார்க்கின்றோம் - என்றார். (ம-7)

# பதவியைத் தந்து வாயை மூட முயன்றார் மைத்திரிபால சிறிசேன

*குற்றஞ்சாட்டுகிறார் சரத் பொன்சேகா*

கொழும்பு, ஓக. 9

அண்மையில் தமக்கு அமைச்சர் பதவியையும், பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் பதவியையும் வழங்க, பாதுகாப்பு அமைச்சராகவுள்ள அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன முன்வந்தார் என்று பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் குறித்து விசாரிக்கும் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் முன்னிலையில், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவன் விஜேவர்த்தன கடந்த செவ்வாய்க்கிழமை சாட்சியமளித்திருந்தார்.

அவரிடம் சாட்சியம் பெறுவதற்காக கேள்விகளை எழுப்பியபோதே, பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா இதனைக் குறிப்பிட்டார்.

அமைச்சர் பதவியையும், பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் பதவியையும் வழங்குவதாக எனக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. பாதுகாப்பு அமைச்சரே அந்த அழைப்பை அனுப்பியிருந்தார். நான் அதனை நிராகரித்து விட்டேன். ஏனென்றால், அந்தப் பதவியை வழங்கும் நோக்கம், எனது வாயை மூட வைப்பதேயாகும். இப்போது நாட்டில் நிலவும் நிலமையைக் கருத்தில் கொண்டு, வாயை மூடிக்கொள்ள முடியாது என்றும் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். (ஒ.5)



## கந்தசாமி கோவில் வீதி சீரமைப்பு

சாவகச்சேரி, ஓக.9

யாழ்ப்பாணம், சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட கிராம்புவில் கந்தசாமி கோவில் வீதி இரண்டு மில்லியன் ரூபா செலவில் சீரமைக்கப்படவுள்ளது.

இதற்கான ஆரம்பக் கட்ட வேலைகள் நேற்றுமுன்தினம் நகரசபை தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதனால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர் எம். ஏ.சுமந்திரனால் துரித கிராமிய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட நிதியில் வேலைகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன. (ஐ)

## கூடுதல் விலைக்கு பொருள் விற்பனை 10 வர்த்தகர்களுக்குத் தண்டம் விதிப்பு

சாவகச்சேரி, ஓக. 9

நிர்ணயிக்கப்பட்ட விலையை விட கூடுதல் விலைக்குப் பொருள்களை விற்பனை செய்த பத்து வர்த்தகர்களுக்கு சாவகச்சேரி நீதிமன்றத்தால் நேற்றுமுன்தினம் தண்டம் விதிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மாவட்ட பாவனையாளர்கள் அதிகார சபையால் தாக்கல் செய்யப்பட்ட மேற்படி வழக்குகள் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

இதன்படி நான்கு வர்த்தகர்களுக்குத் தலா 6 ஆயிரம் ரூபா வீதம் 24 ஆயிரம் ரூபாவும் நான்கு வர்த்தகர்களுக்குத் தலா 4 ஆயிரத்து ஐநூறு ரூபா வீதம் 18 ஆயிரம் ரூபாவும் இரு வர்த்தகர்களுக்குத் தலா ஆயிரத்து ஐநூறு ரூபா வீதம் 3 ஆயிரம் ரூபாவும் அவ்வாறு தண்டமாக விதிக்கப்பட்டன. (ம-9)

## மதுபோதையில் சாரத்தியம்; மூவருக்கு ஒரு லட்சம் தண்டம்

கொடிகாமம், ஓக.9

மது போதையில் உந்துருளி செலுத்திய மூவருக்குச் சாவகச்சேரி நீதிமன்றில் ஒரு லட்சம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

மது போதையில் உந்துருளி செலுத்தினர் என்ற குற்றச்சாட்டில் மூவர் கொடிகாமம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு அவர்களுக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.



இந்த வழக்குகள் நேற்றுமுன்தினம் தனித்தனியாக எடுத்துக்கொள்ளப்பட்டதன.

இதன்போது குடிபோதையில் உந்துருளி செலுத்திய இருவருக்கு தலா 25 ஆயிரம் ரூபா வீதம் 50 ஆயிரம் ரூபா தண்டப் பணமும் மூன்று மாதத்துக்கு சாரதி அனுமதிப்பத்திரமும் தடுத்து வைக்கப்பட்டது.

குடிபோதையிலும், அனுமதிப்பத்திரமின்றியும் உந்துருளி செலுத்திய மற்றைய நபருக்கு 50 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (ஐ-159)

## பெருந்திருவிழா

யாழ்ப்பாணம் வரணி குடமியன் அருள்மிகு ஆதிசிவன் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா கடந்த செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

தொடர்ந்து 10 நாள்கள் திருவிழா நடைபெறும். எதிர்வரும் 13ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு வேட்டைத் திருவிழாவும், இரவு சப்பரத் திருவிழாவும், 14ஆம் திகதி புதன்கிழமை தேர்த் திருவிழாவும், மறுநாள் வியாழக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும் என்று ஆலயத்தினர் அறிவித்துள்ளனர். (ஐ-159)

★ ★ ★

யாழ்ப்பாணம் பருத்தித்துறை மேலைப்புலோலி ஆலடி சிறி சித்தி விநாயகர் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா கடந்த செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

எதிர்வரும் 14ஆம் திகதி புதன்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் தீத்தத் திருவிழாவும் இடம்பெறும்.

திருவிழாக் காலங்களில் தினமும் மாலை 6.30 மணி தொடக்கம் 8 மணி வரை சிறப்பு சொற்பொழிவுகள் நடைபெற்று வருகின்றன.

சொற்பொழிவு வரிசையில் இன்று வெள்ளிக்கிழமை "சைவம் காக்கும் நெறி" என்னும் தலைப்பில் சொல்லின் செல்வர் இரா. செல்வவடிவேலும், நாளை சனிக்கிழமை விநாயகர் தத்துவம் என்னும் தலைப்பின்பிறப்பசிறிகுமாரசுவாமி சர்மாவும் சொற்பொழிவை நிகழ்த்துவார்கள். (ஐ-173)

*பண்டாரிக்குளத்தில்*

## உந்துருளிகள் விபத்து மூவர் காயமடைந்தனர்

வவுனியா, ஓக. 9

வவுனியா பண்டாரிக்குளம் பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற உந்துருளிகள் விபத்தில் மூவர் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

வவுனியா பண்டாரிக்குளம் விபுலானந்தக் கல்லூரிக்கு முன்பாக இரண்டு உந்துருளிகள் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றது.

ஓர் உந்துருளியில் பயணித்த 40வயதுடைய குடும்பத் தலைவியும் அவரது 14வயதுடைய மகனும், மற்றைய உந்துருளியில் பயணித்த 19 வயதுடைய இளைஞனும் காயமடைந்தனர்.

மூவரும் வவுனியா மாவட்ட பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். சம்பவ இடத்துக்கு விரைந்த வவுனியா போக்குவரத்துப் பொலிஸார் விசாரணை நடத்தினர். (த-ரி4)

## கடும் காற்றுக் காரணமாக கடற்றொழிலாளர் பாதிப்பு

வவுனியா, ஓக. 9

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த மூன்று நாள்களாக வீசிய கடும் காற்றால் கடற்றொழில் பாதிக்கப்பட்டுள்ளதாக மீனவர்கள் தெரிவித்தனர்.

கடும் காற்றுக் காரணமாக கொக்கிளாய் தொடக்கம் செம்மலை, அளம்பில், நாயாறு, தீர்த்தக்கரை, கள்ளப்பாடு, முல்லைத்தீவு, முள்ளிவாய்க்கால், வலைஞர்மடம், பொக்கணை, மாத்தளன் வரையான கரையோரங்களில் உள்ள கடற்றொழிலாளர்கள் தொழில் நடவடிக்கைக்குச் செல்லவில்லை என்று மீனவர்கள் தெரிவித்தனர்.

இவ்வாறான நிலையிலும் வெளிமாவட்டங்களைச் சேர்ந்த மீனவர்கள் நடுக்கடலில் சட்டவிரோத கடற்றொழில் நடவடிக்கையில் ஈடுபட்டனர் என்று மீனவர்கள் தெரிவித்தனர்.

வெளிச்சம் பாய்ச்சி மற்றும் தடைசெய்யப்பட்ட மீன்பிடி வலைகளைப் பயன்படுத்தி கடற்றொழில் நடவடிக்கையில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகின்றனர்.

இதேவேளை, வடக்குக் கடற்கரையோரத்தில் காற்று வீசக் கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரித்துள்ளது. இதனால் வடக்குக் கரையோரங்களில் மீனவர்கள் தொழிலுக்குச் செல்லவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. (த-ரி3)

## பதவியைப் பயன்படுத்தி நிலத்தைப் பிடிக்கவில்லை

*சிவமோகன் எம்.பிக்கு சாந்தி எம்.பி. பதில்*

யாழ்ப்பாணம், ஓக. 9

எனது மாமனார் 1972ஆம் ஆண்டு முதல் காடுவெட்டி தோட்டச் செய்கை மேற்கொண்டுவந்த நிலத்தில், குத்தகைக்கு விவசாயம் செய்வதற்கு அனுமதி கோரினோமே தவிர எந்த நிலத்தையும் அபகரிக்கவில்லை என்று தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறீஸ்கந்தராசா.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராசா தனது 18 வயது மகனின் பெயரில் நீர்பாசனத் திணைக்களத்துக்குச் சொந்தமான காணியை நீண்டகாலக் குத்தகைக்குக் கோரினார். ஆனால் நாம் அதனை நிராகரித்தோம் என நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் நேற்றுமுன்தினம் தெரிவித்திருந்தார். இதற்குப் பதில் வழங்குகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

குறித்த காணி எனது மாமனார், அதாவது எனது கணவரின் தந்தை 1972ஆம் ஆண்டு முதல் காடு வெட்டி தோட்டச் செய்கை மேற்கொண்டு வந்த நிலம். 1993ஆம் ஆண்டு முதல் நாமும் பயிர்ச்செய்கை மேற்கொண்டு வருகின்றோம். அந்த நிலத்தில் இடப்பெயர்வுக்குப் பின்னரும் 2012ஆம் ஆண்டு முதலே பயிர்ச் செய்கை மேற்கொள்கின்றோம். இந்த நிலத்துக்கு அனுமதி கோரினோமே தவிர புதிதாக காடு வெட்டியோ அல்லது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை பயன்படுத்தியோ நிலங்களை அபகரிக்கவில்லை. நான் நாடாளுமன்ற உறுப்பினராக பதவி ஏற்றமை 2015ஆம் ஆண்டாகும். 2015ஆம் ஆண்டே முறைப்படி விண்ணப்பித்தோம். 2016ஆம் ஆண்டு காணிப் பயன்பாட்டுக் குழுவில் ஆராயப்பட்டு 2017ஆம் ஆண்டு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் அனுமதிக்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிலையில் அதனை ஏதோ காரணத்துக்காக இணைத் தலைவர்களில் ஒருவரான சக நாடாளுமன்ற உறுப்பினர் சிவமோகன் மறுத்திருந்தார். உண்மையில் எனது பெயரில் இந்த நிலத்தை உரிமை கோரியிருந்தால் கூட ஒருவேளை தவறு எனக் கூறலாம். ஆனால் தந்தையின் நிலம் மகனுக்கு வருவதே உரித்து அந்த வழியிலேயே எனது கணவர் அதனை அன்று முதலே பராமரித்தார்.

அவ்வாறான நிலத்துக்கே தற்போது சட்டப்படி உரிமை கோருகின்றோம். அதேநேரம் நாம் ஆரம்பம் முதல் பராமரித்தமை, விவசாயம் செய்தமை, எண்ணைப் பதிவு என அனைத்துக்கும் சாட்சிகள் சான்றுகள் உள்ளன. இந்த நிலையில் 2017ஆம் ஆண்டு தான் அறிந்த விடயத்தை 2 ஆண்டு கழித்து சுயநலத்துக்காக அல்லது அரசியல் வளர்ச்சி பொறுக்காமல் தற்போது கூறுவதே வியப்புக்குரியது - என்றார். (ம-105)

## பன்றி குறுக்கே சென்றதால் மரத்துடன் மோதியது டிப்பர்

வவுனியா, ஓக. 9

வவுனியா, ஓமந்தை, சேமமடுப் பகுதியில் டிப்பர் மரத்துடன் மோதியதில் அதில் பயணித்த இருவர் படுகாயமடைந்து வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

திடீரென்று வீதியின் குறுக்காகப் பன்றி பாய்ந்துசென்றது என்றும் அதிலிருந்து விலகமுற்பட்டபோது டிப்பர் மரத்துடன் மோதுண்டது என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினமிரவு இடம்பெற்றது.

வழிப்போக்கர்கள் 1990 அவசர தொலைபேசி இலக்கத்துக்குத் தெரியப்படுத்தி, நோயாளர் காவு வண்டியை வரவழைத்தனர்.

காயமடைந்தவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் பகுதியைச் சேர்ந்த இருவரே படுகாயமடைந்துள்ளனர்.

விசாரணை இடம்பெறுகிறது என்று பொலிஸார் தெரிவித்தனர். (தரி4)

## வரலட்சுமி விரதம்

யாழ்ப்பாணம், ஓக.9

வரலட்சுமி விரதத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயத்தில் இன்று சிறப்பு வழிபாடுகள் இடம்பெறவுள்ளன.

பிற்பகல் 2 மணிக்கு பூசைகள் ஆரம்பமாகி தொடர்ந்து காப்புக் கட்டல் இடம்பெறும். வரலட்சுமி நூல் பெற விரும்புபவர்கள் தமது பெயர்களை ஆலய காரியாலயத்தில் பதிவுசெய்துகொள்ளுமாறு ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ஐ)

## பொதுக் கூட்டம்

அகில இலங்கை காந்தி சேவா சங்க வருடாந்தப் பொதுக் கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கத்தில் முற்பகல் 10 மணிக்கு தலைவர் ந.சிவகரன் தலைமையில் நடைபெறும்.

சிவகுருநாதபீடம் குருபீடாதிபதி சிறிமத் வேத வித்தியாசாகர சுவாமிகள் முன்னிலையில் நடைபெறும் கூட்டத்தில் அதிதியாக தமிழ்நாடு இயற்கை மருத்துவச் சங்க இணைச் செயலர் மு.சீ.தேவதாஸ்காந்தி கலந்துகொள்ளவுள்ளார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்டனரென்று வவுனியாவில் அதிகாலை 10பேர் கைதாகினர்

## ரூ.15 இலட்சம் பெறுமதியான உபகரணங்கள் மீட்பு

வவுனியா, ஒக. 9

வவுனியாவில் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் 10 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களி டமிருந்து 15இலட்சம் ரூபா பெறுமதியான நூறு வலைகள் மீட்கப்பட்டுள்ளன என்று தேசிய நீர் உயிரினச் செய்கை அபிவிருத்தி அதிகார சபையின் பிராந் திய நீரியல் விரிவாக்கல் அதிகாரி தெரிவித்துள்ளார்.

வவுனியா பாவற்குளம் பகுதியில் நேற்று அதிகாலை 2மணியளவில் 10பேர் சட்டவிரோதமாக தங்கூசி வலை, முக்கூட்டுவலை போன்ற சட்ட விரோதமான வலைகளைப் பயன்ப டுத்தி மீன்பிடியில் ஈடுபட்டிருந்தபோதே அவர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்கள் பாவற்குளம் பகுதியில் உளுக்குளம், சூடுவெந்தபிலவு பகுதிக ளைச் சேர்ந்தவர்கள்.

10பேரும் தலா பத்தாயிரம் ரூபா பெறு மதியான சரீரப்பிணையில் விடு விக்கப்பட்டுள்ளனர். எதிர்வரும் 27ஆம் திகதி அவர்களுக்கு எதிராக வவுனியா நீதிமன்றில் வழக்குத் தாக் கல் செய்யப்படும்.

இந்தச் சுற்றி வளைப்பு நடவடிக்கை யில் மடுக்கந்தை சிறப்பு அதிரடிப்படை யினருடன், வவுனியா தேசிய நீர் உயிரினச் செய்கை அபிவிருத்தி அதி காரசபையின் பிராந்திய நீரியல் விரி வாக்கல் அதிகாரியோகநாதன் நிஷாந் தன் தலைமையில் சென்ற அலுவலர் களும் ஈடுபட்டிருந்தனர். (த)





## சுஷ்மா சுவராஜுக்கு யாழ்ப்பாணத்தில் அஞ்சலி

யாழ்ப்பாணம்,ஒக.9

இந்திய அயலுறவுத்துறை முன்னாள் அமைச்சர் சுஷ்மா சுவராஜின் மறை வுக்கு அனுதாபம் தெரி வித்து யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத் தூதரகத்தில் அஞ்சலி செலுத்தப்பட்டுவருகிறது.

இந்தியத் துணைத் தூதர கத்தில் சுஷ்மா சுவராஜின் உருவப் படம் வைத்து இன்று வெள்ளிக்கிழமை வரையில் அஞ்சலிசெய்வ தற்கான ஏற்பாடு செய்யப் பட்டுள்ளன.

அவ்வாறு செய்யப்பட்ட ஏற் பாட்டில் நேற்றுமுன்தினம் வடக்கு மாகாண அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞா னம் கலந்துகொண்டு அஞ் சலி செலுத்தியதுடன் நினைவுக் குறிப்பிலும் ஒப்ப மிட்டார். (ஐ-105)

## போதையில் சாரத்தியம் சாரதிகளுக்குத் தண்டம்

சாவகச்சேரி, ஒக. 9

மதுபோதையில் வாகனம் செலுத்திய நான்கு சாரதி களுக்குத் தலா 25 ஆயிரம் ரூபா வீதம் ஒரு லட்சம் ரூபா தண்டம் விதிக்கப்பட் டது.

கொடிகாமம் பொலிஸா ரால்வாகனச்சாரதிகளுக்கு எதிராகத் தாக்கல் செய்யப் பட்ட மேற்படி வழக்குகள் சாவகச்சேரி நீதிமன்றில் நேற்றுமுன்தினம் விசார ணைக்கு எடுக்கப்பட்ட போதே மேற்படி தண்டம் விதிக்கப்பட்டது. (ம-9)

## அடையாள அட்டை வழங்குவதற்கான பதிவுகள் இன்று

சாவகச்சேரி ஒக.9

தென்மராட்சி தெற்கு மற வன்புலவு கமக்கார அமைப்பின் அங்கத்தவர் களுக்கு கமக்கார அடை யாள அட்டை வழங்குவ தற்கான பதிவுகள் இன் றும், எதிர்வரும் 13 ஆம் திகதியும் அமைப்பின் தலைவரின் இல்லத்தில் நடைபெறும்.

அமைப்பின் உறுப்பினர் கள் விவசாய அடையாள அட்டைக்குரிய புகைப் படத்தைக் கொண்டு வரு மாறு அமைப்பின் தலை வர் சி.திருஞானசம்பந்தர் அறிவித்துள்ளார். (ஐ-9)

## செயற்குழுக் கூட்டம்

யாழ்ப்பாணம் கலாஜோதி சனசமூக நிலைய செயற்குழுக் கூட்டம் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

நல்லூர் திருவிழாவை முன்னிட்டு கலாஜோதி ஏற்பாடு செய்யும் தண் ணீர்ப் பந்தல் வேலைத் திட்டம் மற்றும் மாணவர் களுக்கு நூல்கள், சஞ்சிகைகள் வாசிக்கும் விநியோகிக்கும் செயற் றிட்டம் தொடர்பில் ஆராயப்படவுள்ளன.

அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு நிலையத் தலைவர் பேராசிரியர்.இரா. சிவச்சந்திரன் கேட்டுக் கொண்டுள்ளார். (ஐ)

## செஞ்சோலைப் படுகொலையின் 13ஆவது நினைவேந்தல் 18இல்

முல்லைத்தீவு, ஒக. 9

முல்லைத்தீவு வள்ளிபுனம் பகுதியில் வானூர்திப் படையினரின் தாக்குதலில் உயிரிழந்த செஞ்சோலை மாணவர்களின் 13 ஆம் ஆண்டு நினைவேந்தல் எதிர்வரும் 14ஆம் திகதி நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இடைக்காட்டு சந்தி வள்ளிபுனத் தில் வன்னிக்கு றோஸ் தாயக உறவுகள் நினை வேந்தல் அமைப் பின் ஏற்பாட்டில் இது நடைபெற வுள்ளது.



உயிரிழந்த மாண வர்கள் நினைவாக கட்டப்பட்ட நினைவு வளைவு திரைநீக் கம் செய்து வைக்கப்படவுள்ளதுடன் கிறிஸ்தவ, இந்து மத ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் நடைபெறவுள்ளதாகத் தெரி விக்கப்பட்டது.

செஞ்சோலைப் படுகொலையில் 61 சிறுமிகள் கொல்லப்பட் டனர் 155க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்திருந்த னர். (த-ரி3)

## நடன அளிக்கையும் பயிற்சிப் பட்டறையும்

நடன அளிக்கை மற்றும் பயிற்சிப் பட்டறை ஆகி யன மூன்று நாள்கள் பல் வேறு இடங்களில் நடை பெறவுள்ளன.

வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற் றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலு வல்கள் திணைக்களமும் இந்தியத் துணைத்தூதரக மும் வருடாந்தம் தெய்வீக சுகானுபவம் நிகழ்வை நல்லூரில் நடத்தி வரு கின்றன.

நடனக்கலைஞர் கலாநிதி சிறி பரிமள் அசோக் பாட் கேயும் அவரது குழுவின ரும் இணைந்து இப் பயற் சிப் பட்டறை மற்றும் நடன ஆற்றுகையை நடத்தவுள்ள னர்.

எதிர்வரும் 14 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் கைலாசபதிக் கலையரங் கில் பயிற்சிப் பட்டறை யும்,அன்றைய தினம் மாலை 6.30 மணி முதல் நல்லூர் சங்கிலியன் தோப் பில் நடன அளிக்கையும் இடம்பெறும்.

15ஆம்திகதிவியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கிளி நொச்சி கூட்டுறவு மண்ட பத்தில் பயிற்சிப் பட்டறை இடம்பெறும். 16 ஆம் திகதி முல்லைத்தீவு கரைது றைப்பற்று பிரதேச கலா சார மண்டபத்தில் காலை 9 மணிக்கு பயிற்சிப்பட்ட றையும், மதியம் 12.30 மணிக்கு நடன அளிக்கை யும் இடம்பெறும்.

இந்த நிகழ்வுகளில் கலை ஞர்கள், இசை நடன ஆசி ரியர்கள்,பல்கலைக்கழக நுண்கலை மாணவர்கள் மற்றும் ஆர்வலர்களை கலந்துகொண்டு பயன் பெறுமாறு ஏற்பாட்டாளர் கள் அறிவித்துள்ளனர். (ஐ)



## சிறப்புத் தேவையுடையோரின் தடைகளை நீக்கினால்

# சமூகத்தையே மாற்றும் திறனாளிகளாக மாறுவர்

### வலுப்படுத்தல் செயற்றிட்டத்தில் உரை

கிளிநொச்சி, ஒக. 9

சிறப்புத் தேவையுடையவர்களுக்கு சமூகத்தில் இருக்கும் பல்வேறு தடைகளையும் நீக்கி அவர்களுக்கான கதவு களைத் திறந்து விட்டால் அவர்கள் இந்தச் சமூகத்தையே மாற்றும் திறனாளிகளாக மாறுவர்.

இவ்வாறு வவுனியா மாவட்ட சமூக சேவை அலுவலர் செ.சிறிநிவாசன் தெரிவித்தார்.

மாற்றுத்திறனாளிகளை வலுப்படுத்தும் சமூக மட்ட புனருத் தாபனச் செயற்றிட்டம் செட்டிகுளம் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் கை.சிவகரன் தலைமையில் நேற்று நடை பெற்றது.

சமூக சேவை அமைச்சின் அபிவிருத்தி அலுவலர் திருமதி ஜீவசாந்தி ஆரம்ப உரை நிகழ்த்தினார்.

அதில் வளவாளராக உரையாற்றுகையில் சிறிநிவாசன் மேலும் தெரிவித்ததாவது:

சிறப்புத் தேவையுடையவர்களை சமூகத்துக்குள் உட்படுத்தி அவர்களுக்கும் சம மதிப்பு வழங்கி தேசிய நீரோட்டத்தில் இணைந்து சமூக அபிவிருத்திக்கு பங்காற்றுபவர்களாக மாற்றும் செயற்றிட்டம் இது.

உலகளாவிய ரீதியில் முதன்மை பெற்ற இந்தச் செயற்றிட்டம் இலங்கையில் பல தசாப்தங்களாக இடம்பெற்று வருகிறது.

சம வாய்ப்புகளை ஒவ்வொரு துறையிலும் வழங்கி அவர் களின் வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்குமான நல்ல சூழலை ஏற்படுத்திக் கொடுத்தல் அவசியம் என்று மாவட்ட சமூக சேவை அலுவலர் தனது கருத்துரையில் தெரிவித்தார்.

நிகழ்வில் உதவிப் பிரதேச செயலர் கே.முகுந்தன், உதவித் திட்டமிடல் பணிப்பாளர் சி.சண்முகநாதன், கணக்காளர் விமல் மற்றும் பிரதேச செயலக அலுவலர்கள் பலரும் கலந்து பயன்பெற்றனர். (த-222)



# முன்பள்ளி மாணவரின் விளையாட்டு நிகழ்வுகள்

முல்லைத்தீவு எட்வின் முன் பள்ளி மற்றும் கள்ளப்பாடு வடக்கு றோயல் முன்பள்ளி ஆகியன இணைந்து நடத் திய 2019ஆம் ஆண்டுக் கான சிறார்களுக்கான விளையாட்டு விழா சிறப் பாக நடைபெற்றது.

கள்ளப்பாடு வடக்கு பொது நோக்குமண்டப வளாகத் தில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற இந்த நிகழ்வில், முதன்மை விருந்தி னராக வடக்கு மாகாண சபை முன் னாள் உறுப்பினர் து.ரவிக ரன் கலந்துகொண்டார்.

விருந்தினர் வரவேற்புடன் தொடங்கிய நிகழ்வு மங்கல விளக்கேற்றல், ஒலிம்பிக் தீபம் ஏற்றல் என்பன இடம் பெற்று தொடர்ந்து சிறார்க ளின் விளையாட்டு நிகழ்வு கள் இடம்பெற்றன. இறுதி யில், விளையாட்டு நிகழ்வு களில் பங்குபற்றி வெற்றியீட் டிய சிறார்களுக்குப் பரிசில் கள் வழங்கப்பட்டன. விருந் தினர்களின் உரைகளும் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் ஏனைய விருந்தினர்களாக கரைது றைப்பற்றுப் பிரதேசசபை உறுப்பினர் சி.லோகேஸ்வ ரன், முன்பள்ளிகளின் இணைப்பாளர், முன்பள்ளி களின் உதவிக் கல்விப்ப ணிப்பாளர் ஆகியோர் கலந் துகொண்டிருந்தனர். (த-222)

## இரு மாதிரிக் கிராமங்கள் நாளை திறப்பு

தேசிய வீடமைப்பு அதிகார சபையால் அமைக்கப்பட்ட இரு மாதிரிக் கிராமங்கள் நாளை திறந்துவைக்கப்படவுள்ளன.
யாழ்ப்பாணம் வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவில் ஊரத்தியில் அமைக்கப்பட்ட செந்தமிழ் கிராமம் காலை 8 மணிக்கும், தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவில் மந்துவிலில் அமைக்கப்பட்ட திருவேரபுரம் கிராமம் முற்பகல் 11 மணிக்கும் திறந்துவைக்கப்படவுள்ளன.
நிகழ்வில் வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் சஜித் பிரேமதாச கலந்து கொண்டு மாதிரிக் கிராமங்களை திறந்துவைக்கவுள்ளார்.
இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனின் பங்களிப்புடன் நடைபெறும் நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை. சேனாதிராசா, தர்மலிங்கம் சித்தார்தன், ஈஸ்வரபாதம் சரவணபவன், சிவஞானம் சிறீதரன், எம். ஏ. சுமந்திரன், வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் மற்றும் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் தரஞ்ஜித் சிங் சன்து ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ)

*குடாநாட்டில்*

# கடும் வறட்சி காரணமாக கள் உற்பத்தியில் வீழ்ச்சி

யாழ்ப்பாணம், ஓக. 9
யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஏற்பட்டுள்ள கடும் வறட்சியால் கள்ளின் உற்பத்தி வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் 5ஆயிரம் வரையான தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் வலிகாமம் கொத்தணியின் தலைவர் எஸ். செல்வராசா தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
'மழை வீழ்ச்சி இன்மையாலும் கடும் வறட்சி வெப்பத்தாலும் இந்த ஆண்டில் பனை, தென்னை மரங்களில் கள் உற்பத்தி வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளன. தொழிலாளர்கள் மரங்களில் இருந்து குறைந்தளவு கள்ளையே பெற்றுக் கொள்கின்றனர்.
இதனால் கள் விற்பனை நிலையங்கள் ஊடாக விற்பனை செய்வதற்கு கள்ளின் அளவு போதாமை இருப்பதாகவும் தெரிவிக்கின்றனர். கள் பற்றாக்குறை காரணத்தால் போத்தலில் கள் அடைக்கும் பணிகளும் நிறுத்தப்பட்டுள் ளன. கடந்த 2018ஆம் ஆண்டில் இந்த போகத்தின் போது அதிகளவு போத்தல்களில் கள் அடைக்கப்பட்டன. இந்தமுறை போத்தலில் கள் அடைப்பதற்கும் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. கள் உற்பத்தி பாதிப்பால் அங்கத்தவர்களின் வாழ்வாதாரமும் பாதிக்கப்பட்டுள்ளது- என்றார்.
(ஐ-17)

## விருது வழங்கி மதிப்பளிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 9
சமய சமூக வேவையாளரும், இசைக்கலைஞருமான கலாபூசணம் க. லோகேஸ்வரனுக்கு நல்லை ஆதீன குரு முதல்வரால் "திருவாசக மணி" என்னும் விருது வழங்கி மதிப்பளிக்கப்பட்டது.
யாழ்ப்பாண இந்து சமயப் பேரவையால் சிறி சிவகாமசுந்தரி சமேத நடராஜர் சந்நிதானத்தில் அண்மையில் திருவாசக முற்றோதல் நிகழ்வு இடம்பெற்றது. இதன் போதே இந்த விருது வழங்கப்பட்டது. (ஐ)

# முல்லை நாயாறு கடலேரியில் குப்பைகள் கொட்டப்படுகின்றன

*தடுக்க நடவடிக்கை எடுக்குமாறு பெண் கடற்றொழிலாளர்கள் கோரிக்கை*

முல்லைத்தீவு, ஓக. 9
முல்லைத்தீவு நாயாற்று கடல்நீர் ஏரி வறட்சி காரணமாக வற்றிக்காணப்படுகின்றது. இந்த நிலையில் அங்கு குப்பைகள் கொண்டுவந்து கொட்டப்படுகின்றன. இவை எதிர்காலத்தில் பாதிப்பை ஏற்படுத்தும் என்று கூறும் பெண் கடற்றொழிலாளர்கள், இதனைத் தடுக்க கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள், பிரதேச சபையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும்என்றுகோரிக்கை விடுக்கின்றனர்.
குறித்த கடல்நீர்ஏரியில் குமுழமுனைப் பகுதியைச் சேர்ந்த சுமார் 50 பெண் தலைமைத்துவத்தைக் கொண்ட பெண்கள் இறால் பிடிப்பதில் ஈடுபட்டு தங்கள் வாழ்வாதாரத்தை மேற்கொண்டு வருகின்றார்கள். நாயாறு கடல் வற்றிக் காணப்படுவதால் குமுழமுனையை அண்டிய கரையோரப் பகுதிகளில் அதிகளவான குப்பைகளைக் கொண்டுவந்து கொட்டுகின்றனர். இதனால் எதிர்காலத்தில் கடற்றொழில் பாதிக்கப்படும் என்று மீனவ குடும்பங்கள் கவலை தெரிவித்துள்ளன. சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் பலதடவைகள் தெரிவித்தும் எந்த வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் கவலை தெரிவிக்கின்றனர்.
தொடர்ச்சியாகக் கரையோரப் பகுதிகளில் குப்பை கொட்டுவதால் இனி வரப் போகும் மழைகாலத்தில் கொட்டப்பட்ட கழிவுகள் நாயாற்றுப் பகுதியில் கலப்பதால் அதில் இறங்கி கைகளால் இறால்பிடித்து தொழில்செய்யும் தமக்குப் பெரும் பாதிப்பாக அமைந்து விடும் என்று பெண் கடற்றொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.
கரையோரப் பகுதிகளில் கொண்டுவந்து பனை மரங்களின் கழிவுகள் இரும்புக் கம்பிகள், பீங்கான்கள், ஓடுகள், உடைந்த போத்தல்கள் என்பன அண்மைய நாள்களாகக் கொட்டப்பட்டுள்ளன. இவை கடுமையான பாதிப்பை ஏற்படுத்தக் கூடியவை. எனவே சம்பந்தப்பட்ட தரப்பினர் இதைக் கவனத்தில் எடுக்கவேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.
(த-ரி3)



*வடக்கில் சிறப்புத் தேவையுடையோரின்*

# குழுநடனப்போட்டியில் கிளிநொச்சி முதலிடம்

மன்னார், ஓக. 9
வடக்கு மாகாண சிறப்புத் தேவையுடையவர்களுக்கான நடனப் போட்டி மன்னார் நகர சபை மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. இதில் குழு நடனப் போட்டியில் கிளிநொச்சி மாவட்டம் முதலாம் இடத்தையும் யாழ்ப்பாண மாவட்டம் இரண்டாம் இடத்தையும் மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்கள் முன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன. தனி நடனப் போட்டிகளும் நடைபெற்றன. தனிநடனப் போட்டிக்கான பெறுபேறுகள் மாவட்ட ரீதியாக பின்னர் அறிவிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.
இந்த நடனப் போட்டியில் மன்னார், யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களிலிருந்து மாற்றுத்திறனாளிகள் கலந்து கொண்டிருந்தனர்.
இந்த நிகழ்வில் மன்னார் மாவட்ட தலைமைக் கணக்காளர் மற்றும் மன்னார் வலயக் கல்வி உதவிப் பணிப்பாளர், மாவட்ட சமூக அபிவிருத்தி அலுவலர்கள் மற்றும் மத்திய சமூகசேவை அலுவலர்களும் கலந்து கொண்டனர். (த-213)

# ஏ.எல். எழுதும் முஸ்லிம் மாணவிகளின் அடிப்படை உரிமைகள் மீறப்படுகின்றன

முசலி பிரதேச சபை உறுப்பினர் கருத்து

உயர்தரப் பரீட்சைக்குச் செல்லும் முஸ்லிம் மாணவிகளின் அடிப்படை உரிமைகள் மீறப்படுகின்றன என்று முசலிப் பிரதேச சபை பெண் உறுப்பினர் தஸ்லீமா கலீல் மனித உரிமை ஆணைக்குழுவுக்குக் கடிதம் அனுப்பியுள்ளார்.
கடந்த ஆறாம் திகதி நாடு முழுவதும் உயர்தர மாணவர்களுக்கான பரீட்சைகள் ஆரம்பமாகின. இதன் போது மன்னார் மாவட்டத்தில் உயர்தரப் பரீட்சை நிலையங்களில் ஒன்றான பரிகாரிகண்டல் மற்றும் முருங்கன் பரீட்சை நிலையங்களில் பரீட்சை எழுதச் செல்லும் முஸ்லிம் மாணவிகள் கலாசார உடையான பர்தா அணிந்து பரீட்சை எழுதுவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்தச் செயல் முஸ்லிம் மாணவிகளின் அடிப்படை உரிமைகளை மீறும் செயல் என்று தனது கண்டனத்தையும் தெரிவித்துள்ளார்.
இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:
முகத்தை மறைக்காமல் அணியப்படும் பர்தாவை அகற்றிவிட்டு வருமாறு குறித்த பரீட்சை நிலையங்களில் உள்ள மேற்பார்வையாளர்கள் கண்டிப்புடன் நடக்கின்றனர். பாதிக்கப்பட்ட மாணவிகள் பெற்றோர்கள் மூலம் தன்னிடம் தெரிவித்துள்ளனர். இவ்வாறான செயற்பாடுகளால் மன ரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ள மாணவிகள் சீரான மனநிலையுடன் பரீட்சை எழுத முடியாதுள்ளது என்று கவலை தெரிவிக்கிறார்கள்.
இலங்கை சட்டத்தின் சுற்றறிக்கைக்கு அமைவாகவே மாணவிகள் தங்கள் கலாசார உடையணிந்து சென்றுள்ளார்கள். இவ்வாறான செயற்பாடுகளை முன்கூட்டியே கல்வித் திணைக்களங்கள் மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் அறிவுறுத்தியிருந்தால் அவர்கள் தங்களை தயார்ப்படுத்தி வந்திருப்பார்கள். மாணவர்களின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் பரீட்சை நிலையத்துக்கு வந்தவுடன் இவ்வாறான செயற்பாடுகளை மேற்கொள்வது கண்டிக்கத்தக்கது. அடிப்படை மனித உரிமை மீறல்.
இது தொடர்பாக கொழும்பில் உள்ள மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைமையகத்துக்குக் கடிதம் அனுப்பியுள்ளேன் என்று தெரிவித்தார். (த-213)

## தமிழ்ப் பழமொழிகள் நூல் வெளியீடு

சாவகச்சேரி, ஓக. 9
வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் பேர்சிவல் பாதிரியாரால் தொகுத்து வழங்கப்பட்ட தமிழ்ப் பழமொழிகள் என்னும் நூல் வெளியிடப்படவுள்ளது.
இந்த வெளியீட்டு நிகழ்வு எதிர்வரும் 12ஆம் திகதி திங்கட்கிழமை பருத்தித்துறை ஹாட்லி கல்லூரி மண்டபத்தில் காலை 9.30 மணிக்கு நடைபெறும்.
வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் திருமதி சுஜீவா சிவதாஸ் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலர் இ. இளங்கோவன், சிறப்பு விருந்தினர்களாக பருத்தித்துறை பிரதேச செயலர் ஆ. சிறி, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அதிபர் முகுந்தன், மதிப்புறு விருந்தினர்களாக வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் கலாநிதி டி. சொலமன், யாழ்ப்பாண மத்திய கல்லூரி அதிபர் கே. எழில்வேந்தன், யாழ்ப்பாணம் வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை அதிபர் திருமதி சுனீத்ரா சூரியராஜா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.
நூலின் வெளியீட்டுரையை பருத்தித்துறை பிரதேச கலாசார அலுவலர் ஆ. சிவஞானசீலனும், அறிமுக உரைகளை யாழ்ப்பாணப் பல்கலைக் கழக நூலகர் திருமதி ஶ்ரீகாந்தலட்சுமி அருளானந்தம், தேசிய கலை இலக்கிய பேரவை ச. சத்தியதேவன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூக வியற்றுறை தலைவர் இ. இராஜேஸ்கண்ணன் ஆகியோர் நிகழ்த்துவர். (ஐ-9)

## திருமந்திர விருந்து விழா

திருமந்திர விருந்து விழா நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை இணுவில் மஞ்சத்தடி அருணகிரிநாதர் சிவசுப்பிரமணியர் மண்டபத்தில் காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.
கொழும்பு திருமந்திரப் பணிமன்றம், இணுவில் சுகவாழ்க்கைப் பேரவையின் அனுசரணையில் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது.
நல்லை ஆதீன சோமசுந்தர ஞானசம்பந்த பரமச்சாரிய சுவாமிகள் மற்றும் சித்தாந்தரத்தினம் சிவசிறி சி. குமாரராசாக் குருக்கள் ஆகியோர் முன்னிலையில் கொழும்பு திருமந்திரப் பணிமன்றத் தலைவர் கலாபூசணம் சைவப்புலவர் சு. செல்லத்துரை தலைமையில் நடைபெறவுள்ளது. விருந்தினர்களாக உடுவை தில்லை நடராசா, செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன், பேராசிரியர் இ. விக்னேஸ்வரன், கந்தையா சிறிகணேசன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஐ)

### தென்மராட்சிப் பகுதியின்

# மூன்றாவது வீட்டுத் திட்டத்தை கச்சாயில் அமைக்கவுள்ளேன்

### நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் தெரிவிப்பு

கொடிகாமம், ஓக. 9

தென்மராட்சியில் இரண்டு இடங்களில் வீட்டுத் திட்டங்கள் வழங்கியுள்ளேன். மூன்றாவது இடமாக கச்சாய் தெரிவு செய்யப்பட்டுள்ளது. அங்கு 20 இடங்கள் இனங்காணப்பட்டுள்ளன. அமைச்சர் சஜித் பிரேமதாசவிடம் கதைத்து அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வேன்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்தார்.

தென்மராட்சி பிரதேசங்களின் முக்கியமான இடங்களுக்கு வீதி விளக்குகளை பொருத்துவதை இலக்காக கொண்டு பொது மக்கள் மற்றும் சமூக மட்ட அமைப்புகளினுடைய வேண்டுகோளின் பிரகாரம் பொருத்தமான இடங்களில் மின் விளக்குகள் பொருத்துவது தொடர்பான கலந்துரையாடல் சாவகச்சேரி உதயன் அலுவலகத்தில் கடந்த திங்கட்கிழமை நாடாளுமன்ற உறுப்பினரின் இணைப்பாளர் செ.பிரதாப் தலைமையில் நடைபெற்றது.

அதில் உரையாற்றுகையில் நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் மேலும் தெரிவித்ததாவது:

கிராம எழுச்சித் திட்டத்தின் ஊடாக இருநூறு, முந்நூறு மில்லியன் ரூபா கொடுக்கப்பட்டதே கட்சிக்காகத்தான். அந்த நிதி சரவணபவனுக்கோ சுமந்திரனுக்கோ வழங்கப்படவில்லை. நாம் எமது உரிமைக்காக எல்லாவற்றையும் அர்ப்பணித்து நிற்கின்றோம்.



இன்றைய இளைஞர்கள் அப்படியல்ல. சமாந்தரமாக இருக்க விரும்புகிறார்கள். 60 கிராம அலுவலர் பிரிவுகளைக் கொண்டது தென்மராட்சிப் பிரதேசம்.

இந்த நிதியை வைத்து என்ன செய்யலாம் என்று பார்ப்போம். தென்மராட்சியில் அதிகளவான வீதிகள் மணல் வீதியாகவுள்ளன. அவற்றின் மொத்த நீளம் சுமார் 5 ஆயிரத்து 200 கிலோ மீற்றர்.

வீதி விளக்குகள் ஒவ்வொரு இடத்துக்கும் ஒதுக்கியுள்ளோம். உறுப்பினர்கள் இல்லாத இடத்துக்கும் உறுப்பினர்கள் போக வேண்டும். எந்த வட்டாரம் என்றில்லை.

நான் எங்கு சென்றாலும் அரசியலைப்பற்றிக் கதைப்பேன். உள்ளூர் அரசியல் கட்சிகளைப்பற்றி பேசமாட்டேன். ஆனால் பேரினவாத அரசியல் கட்சிகளைப்பற்றி பேசுவேன். என்னுடைய அரசியலை இப்படித்தான் கொண்டு செல்கின்றேன்.

எந்தக் கேள்விக்கும் மறுமொழியுண்டு. நாம் அரசியலில் இருப்பவர்கள். ஏதோ ஒன்றைச் சொல்லிக் கொண்டு தான் இருப்போம். சொல்லும்போது நாம் செய்து காட்டினால் பிறகு அவர்கள் ஒன்றுமே பேசமாட்டார்கள். கோவிலாக்கண்டி பகுதிக்கு ஏன் போகிறீர்கள்? திட்டங்கள் வழங்காதீர்கள் என்று எனக்கு ஒருவர் கூறினார். ஏன் என்று கேட்டபோது அது ஈ.பி.டி.பி. க்கு ஆதரவானவர்கள் என்று கூறினார்.

அது பரவாயில்லை. அந்தப் பகுதிக்குள் இறங்கி அவர்களுக்கு தேவையானதைச் செய்வேன் என்று கூறினேன்.

அபிவிருத்திக்குள் கூடுதலான எண்ணங்களை விடுவோம் என்று மேலும் தெரிவித்தார். (த-159)

---



## கோவிற்குளம் பகுதிகளிலுள்ள விளம்பர பதாகைகள் அகற்றல்

வவுனியா, ஓக. 9

வவுனியா கோவிற்குளம் பகுதியில் வீதிகளில் காணப்பட்ட பதாகைகளை அகற்றும் பணியில் நகர சபையினர் நேற்று முற்பகல் 10.30மணி தொடக்கம் மதியம் 12.30 மணி வரை ஈடுபட்டனர்.

கோவிற்குளம் சிதம்பரபுரம்முதன்மை வீதியில் காணப்படும் பெரும்பாலான மின்கம்பங்களில் விளம்பரப் பாதாகைகள் காணப்பட்டன. அவற்றுக்கு சபை அனுமதியும் பெற்றிருக்கவில்லை. அத்தகைய விளம்பரங்களால் அந்தப் பகுதியின் சுற்றுப்புறச்சூழல் மாசடைவதுடன் கோவிற்குளம் வீதியின் அனைத்து மின் கம்பங்களிலும் விளம்பரப் பதாகைகள் காணப்பட்டன. இதனை அகற்றும் பணியில் நகரசபையினர் ஈடுபட்டிருந்தனர். தற்போது மின்கம்பங்கள் அனைத்து வெறுமையாக்கப்பட்டு அந்தப் பகுதி அழகாகவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (த-222)

---

## காரியாலயம் திறப்பும் காசோலை வழங்கலும்

யாழ்ப்பாணம், ஓக. 9

தென்னைப்பயிர்ச்செய்கை சபையின் புதிய பிராந்திய காரியாலயம் யாழ்ப்பாணத்தில் திறந்து வைக்கப்படவுள்ளது. அத்துடன் மானியங்களைப் பெற்றுக்கொள்ளும் பயனாளிகளுக்கு காசோலை வழங்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

தென்னைப் பயிர்ச்செய்கை சபையின் பிராந்திய முகாமையாளர் வைகுந்தன் தலைமையில் இந்த நிகழ்வுகள் நாளை மற்றும் 12ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன. கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த பயனாளிகளுக்கு நாளை பளை தர்மக்கேணி எனும் இடத்தில் அமைந்துள்ள தென்னைப்பயிர்ச்செய்கை சபையின் மாதிரித் தோட்டத்தில் காலை 8.30 மணிக்கு நடைபெறும்.

யாழ்ப்பாண மாவட்ட பயனாளிகளுக்கு வீரசிங்கம் மண்டபத்தில் நாளை பிற்பகல் 2.30 மணிக்கும், முல்லைத்தீவு மாவட்ட பயனாளிகளுக்கு முல்லைத்தீவு மாவட்ச்செயலக மாநாட்டு மண்டபத்தில் எதிர்வரும் 12ஆம் திகதி காலை 8.30 மணிக்கும் மானியங்கள் வழங்கப்படவுள்ளன. (ஐ)

---

# ஏனைய பகுதிகளுடன் ஒப்பிடும்போது தென்மராட்சியில் அபிவிருத்தி குறைவு

### சரவணபவன் எம்.பியின் இணைப்பாளர் தெரிவிப்பு

கொடிகாமம், ஓக. 9

ஏனைய பிரதேசங்களுடன் ஒப்பிட்டு பார்க்கும்போது தென்மராட்சியின் வளர்ச்சி, அபிவிருத்தி மிகக் குறைந்த நிலையிலுள்ளது. அதற்கு முக்கிய காரணம் ஒரேயொரு பிரதேச செயலகம் இருப்பதும், அதற்குள் 60 கிராம அலுவலர் பிரிவுகளைக் கொண்டிருப்பதும், இதனால் இந்தப் பகுதிக்கு வரும் நிதியை 60 கிராமங்களுக்குப் பங்கீடு செய்யும்போது மிகச் சொற்பமான நிதி ஒவ்வொரு கிராமத்துக்கும் கிடைக்கின்றமையே.

இவ்வாறு தமித் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனின் இணைப்பாளர் செ.பிரதாப் தெரிவித்தார்.

தென்மராட்சி பிரதேசங்களின் முக்கியமான இடங்களுக்கு வீதி விளக்குகளை பொருத்துவதை இலக்காகக் கொண்டு பொதுமக்கள் மற்றும் சமூக மட்ட அமைப்புகளினுடைய வேண்கோளின் பிரகாரம் கலந்துரையாடல் ஒன்று சாவகச்சேரி 'உதயன்' அலுவலகத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. அதில் தலைமையுரையாற்றும் போது மேலும் தெரிவித்ததாவது:

தென்மராட்சி பிரதேசம் இரண்டு மூன்று தடவைகள் இடப்பெயர்வைச் சந்தித்தது. அந்த அழிவுகளிலிருந்து கட்டியெழுப்புவதற்கான வாய்ப்புகள், வளங்கள் இல்லை.

நகர சபைக்கு ஓரளவு வருமானம் இருக்கின்றபோதிலும் பிரதேச சபையின் வருமானத்தைப் பெறுவதற்கான நிகழ்வு மிகக் குறைவாகக் காணப்படுகிறது. பெருமளவிலான வேலைத் திட்டங்கள் பெறுவதாக இருந்தால் மத்திய அரசின் நிதியைப் பெறுவதற்காக அதிகளவு தங்கியிருக்க வேண்டிய சூழ்நிலையும் காணப்படுகிறது.

ஒவ்வொரு தேர்தல் தொகுதிக்கும் கிராம எழுச்சித் திட்டத்தில் 300 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. ஆகக் கூடுதலாக சிறு சிறு வேலைத் திட்டங்களுக்கு ரூபா 20 லட்சம் மட்டும் ஒதுக்கும் வாய்ப்பு அந்தத் திட்டத்தில் உள்ளது. அதேபோல ஆலயங்களுக்கு 10 லட்சம் ரூபா மட்டும் ஒதுக்கீடு செய்யலாம்.

300 மில்லியன் ரூபாவை இங்கு பங்கிடும்போது ஒரு கிராமத்துக்கு 5 மில்லியன் ரூபாதான் கிடைக்கிறது. 50 லட்சம் ரூபாவுக்கு வீதி சீரமைக்க முடியாது.

கொழும்பு மற்றும் மேல்மாகாண மாணவர்களைப் போன்று எமது பிரதேச மாணவர்களும் தொழில்நுட்பம் சார்ந்த கல்விபெற வேண்டும். தென்மராட்சியில் 12 பாடசாலைகளில் திறன் வகுப்பறைகளை அமைப்பதற்கான நிதி விடுவிக்கப்பட வுள்ளன.

நல்லிணக்க அமைச்சின் ஊடாக கச்சாய் கலைமகள் விளையாட்டுக் கழகத்துக்கு 22 லட்சம் ரூபாவும், அல்லாரை டெல்ரா விளையாட்டுக் கழகத்துக்கு 6 லட்சம் ரூபாவும், சங்கத்தானை சிறிசன சமூக நிலையத்தின் அபிவிருத்திக்கு ஆரம்பத்தில் 15 லட்சம் ரூபாவும் வழங்கியிருந்தார். மேலதிகமாக 10 லட்சம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது - என்றார்.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளர் க.வாமதேவன், உபதவிசாளர் செ.மயூரன், சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஆசிரியர் செந்தூரன் அறவழி போராட்டக்குழுத் தலைவர் துரைராஜா, சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

(த-159)

---

## கசிப்பு உற்பத்தி இருவர் கைது

முல்லைத்தீவு, ஓக. 9

முல்லைத்தீவு விசுவமடு நெத்தலியாறுப் பகுதியில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் இருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து 360 லீற்றர் கோடா 25 லீற்றர் கசிப்பு என்பன மீட்கப்பட்டன என்று முல்லைத்தீவு மாவட்ட கலால் திணைக்களத்தினர் தெரிவித்தனர்.

கிடைத்த தகவலுக்கமைய மாவட்ட கலால் பொறுப்பதிகாரி ஏ ரி. வீரமணி தலைமையில் சென்ற குழுவினர் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டனர். கைது செய்யப்பட்டவர்கள் சட்டநடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (த)

---



## பல்வேறு உதவிகள் வழங்கி வைப்பு

யாழ்ப்பாணம்,ஓக.9

போரால் பாதிக்கப்பட்ட சிறப்புத் தேவையுடைய பெண், பாடசாலை மாணவி மற்றும் முதியோர்களுக்கான உதவித்திட்டங்கள் வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தால் வழங்கப்பட்டன.

கிளிநொச்சி இரத்தினபுரத்தைத் சேர்ந்த சிறப்புத் தேவையுடைய இ.சறோஜினிக்கு சுமார் 3 லட்சம் ரூபா பெறுமதியான உந்துருளி ஒன்றும், அல்லாரை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை மாணவியான பி.கல்பனாவுக்கு 18 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான ஈருருளியும், மாங்குளம் பகுதியைச் சேர்ந்த 25 முதியவர்களுக்கு தலா 3 ஆயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவு பொதிகளும் வழங்கிவைக்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

---

## வயல் விழா

கிளிநொச்சி,ஓக.9

பரந்தன் நெல் ஆராய்ச்சி நிலையம் மற்றும் கிளிநொச்சி மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் ஆகியன இணைந்து வயல் விழாவை இன்று நடத்தவுள்ளனர்.

இதன்படி மருதநகர் தென்னம்பிள்ளை பாம் சந்தியில் குருசாமி என்பவருடைய வயற்காணியில் முற்பகல் 10 மணிக்கு இந்த விழா நடைபெறவுள்ளன. (ஐ)

# மயிலிட்டி துறைமுகத்தை திறக்கும் ரணில் மக்களையும் அங்கு குடியமர்த்த வேண்டும்

## வலியுறுத்தினார் மாவை எம்.பி

யாழ்ப்பாணம்,ஓக.9
மயிலிட்டி துறைமுகத்தைத் திறப்பதற்காக யாழ்ப்பாணம் வருகை தரும் ரணில் விக்கிரமசிங்க மயிலிட்டியைச் சொந்த இடமாகக் கொண்டு இன்னும் மீள்குடியமர்த்தப்படாதுள்ள மக்களை குடியமர்த்தவும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா வலியுறுத்தினார்.

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவுக்கும் இடையில் நேற்று கொழும்பில் சந்திப்பொன்று இடம்பெற்றது. அந்தச் சந்திப்பிலேயே மாவை இந்த விடயத்தை வலியுறுத்தினார்.

சந்திப்புத் தொடர்பில் மாவை மேலும் தெரிவித்ததாவது:

மயிலிட்டி துறைமுகத்தை திறப்பது தொடர்பில் தலைமை அமைச்சர் அலைபேசியில் என்னுடன் பேசியிருந்தார். எனினும் நேற்றுக் காலை அவரைச் சந்தித்திருந்தேன்.

மயிலிட்டி துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதற்காக அரச தலைவர் மைத்திரியுடன் நானும் இணைந்து அடிக்கல் நட்டோம். இப்போது தலைமை அமைச்சருடன் திறக்கப்போகிறேன். அரச தலைவர் மைத்திரி அடிக்கல் நடும்போதும் அதற்கு முன்னரும் மயிலிட்டியை சொந்த இடமாகக் கொண்ட மக்களை அங்கு குடியமர்த்த வேண்டும் என்று கூறியிருந்தோம். மைத்திரியிடம் நேரடியாகவே இந்த விடயங்களைத் தெரிவித்திருந்தேன். ஆனால் இன்றுவரை அது நடைபெறவில்லை. தற்போது தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க திறந்து வைக்கவுள்ளார் என்றவுடன் அவரிடமும் நேற்று இது தொடர்பில் பேசினேன். கட்டாயமாக விடுவிக்கவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளேன். அவர் செயலரை உடன்நடவடிக்கை எடுக்குமாறு பணித்தார். படையினருடன் பேசி அந்த நடவடிக்கையை எடுப்பதாகத் தெரிவித்தார். இந்த விடயம் தொடர்பில் திறப்பு நிகழ்வின்போதும் வலியுறுத்து வேண்டும் - என்றார். (ம-21)

# சு.க – பெரமுன பேச்சின் பின்னர் வேட்பாளரில் மாற்றம் வரக்கூடும்

*சு.கட்சியின் தேசிய அமைப்பாளர் தெரிவிப்பு*

கொழும்பு, ஓக.9
ஒவ்வொரு கட்சிக்கும் தத்தமது வேட்பாளர் குறித்து அறிவிக்கும் உரிமை இருக்கிறது. அதற்கிணங்கவே சிறிலங்கா சுதந்திரக் கட்சி அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவையும், சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி கோத்தபாய ராஜபக்சவை அரச தலைவர் வேட்பாளர் என்று கூறுகின்றன. எனினும் சு.க - பொதுஜன பெரமுன கூட்டணி அமைக்கப்பட்ட பின்னர் இதில் மாற்றங்கள் ஏற்படலாம்.

இவ்வாறு சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான துமிந்த திசாநாயக்க தெரிவித்தார். சுதந்திரக் கட்சி தலைமையகத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரச தலைவர் வேட்பாளர் யார் என்று ஒவ்வொரு தரப்பிலும் ஒவ்வொருவர் நியமிக்கப் பட்டாலும் அரச தலைவர் யார் என்று தீர்மானிக்கும் பொறுப்பு சுதந்திரக் கட்சியிடமே இருக்கிறது. காரணம் சுதந்திரக் கட்சியின் முடிவு என்ன என்பதையே அனைவரும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இதனால் தீர்க்கமான முடிவை எடுக்க வேண்டிய பொறுப்பில் நாம் இருக்கின்றோம்.

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியுடன் கூட்டணி தொடர்பில் பல சுற்று பேச்சுக்கள் இடம்பெறுகின்றன. அவற்றில் இரு தரப்பிலும் சில இணக்கப்பாடுகளும் எட்டப்பட்டுள்ளன. ஆனால் பொதுமக்கள் முன்னணியின் தலைமைத்துவத்துக்கு கீழோ அல்லது வேறு கட்சிகளின் தலைமைத்துவத்துக்கு கீழோ செயற்பட வேண்டிய அவசியம் சுதந்திரக் கட்சிக்கு கிடையாது.

எவ்வாறிருப்பினும் வேட்பாளர் என்ற தனிநபர் ஒருவருக்கு வழங்கப்படும் முக்கியத்துவத்தை விட நாட்டுக்குத் தேவையான கொள்கைகளே அத்தியாவசியமானதாகும். அதாவது தற்போது எதிர்க்கட்சியில் இருப்பதால் எதிர்க்கும் விடயங்களை அதிகாரத்துக்கு வந்த பிறகு ஆதரிக்கும் வகையிலான கொள்கைகளை பின்பற்றக் கூடாது. உள்நாட்டு விவகாரங்கள் மாத்திரமன்றி வெளிநாட்டுக் கொள்கைகளும் அத்தியாவசியமானவையாகும் - என்றார்.

**கேள்வி :** அரச தலைவர் வேட்பாளர் குறித்து சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியும், சுதந்திரக் கட்சி யிலும் இரு வேறு நிலைப்பாடுகளில் இருக்கின்றன. இந்தநிலையில் கூட்டணி அமைப்பது சாத்தியப்படுமா?

**பதில் :** ஒவ்வொரு கட்சிக்கும் தத்தமது வேட்பாளர் குறித்து அறிவிக்கும் உரிமை இருக்கிறது. அதற்கிணங்கவே சிறிலங்கா சுதந்திர கட்சி அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவையும், பொதுமக்கள் முன்னணி கோத்தபாய ராஜபக்சவையும் அரச தலைவர் வேட்பாளர் என்று கூறுகின்றன. சு.க பொதுமக்கள் முன்னணி கூட்டணி அமைக்கப்பட்ட பின்னர் இதில் மாற்றங்கள் ஏற்படலாம்.

**கேள்வி :** 11 ஆம் திகதி சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் மாநாட்டில் சுதந்திரக் கட்சி கலந்து கொள்ளுமா ?

**பதில் :** இல்லை. கூட்டணி தொடர்பில் இரு தரப்பு பேச்சு இன்னும் நிறைவடையவில்லை. அவ்வாறிருக்கையில் எம்மால் அதில் கலந்து கொள்ள முடியாது. பொதுமக்கள் முன்னணியின் மாநாட்டில் கலந்துகொள்வதில்லை என்று மத்திய குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**கேள்வி :** ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் உறுப்பினராக இருந்து கொண்டு எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ச சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் தலைமைத்துவத்தை ஏற்கவிருக்கிறார். இந்த நிலையில் அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படுமா?

**பதில் :** இந்தவிடயம் தொடர்பில் மத்திய குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்படும். ஆனால் அவருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதால் எந்த நன்மையும் கிடைக்கப் போவதில்லை. அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டால் அது எதிர் தரப்பினருக்கு சாதகமாக அமைந்துவிடும். ஆனால் இது போன்ற எந்த விடயமும் பொதுமக்கள் முன்னணி சு.க கூட்டணிக்கு தடையை ஏற்படுத்தாது. (எ-61)

# எதிர்வரும் 16ஆம் திகதியன்று திறக்கப்படுகின்றது மயிலிட்டி

*யாழ்ப்பாணம், ஓக.9*
*யாழ்ப்பாணம் காங்கேசன்துறையிலுள்ள உள்ள மயிலிட்டி துறைமுகம் எதிர்வரும் 16ஆம் திகதி திறந்து வைக்கப்படவுள்ளது. இதற்காகத் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணம் வரவுள்ளார். எதிர்வரும் 15, 16ஆம் திகதிகளில் அவர் யாழ்ப்பாணத்தில் தங்கியிருப்பார்.*

உயர் பாதுகாப்பு வலயமாக அறிவிக்கப்பட்டிருந்த யாழ்ப்பாணம் மயிலிட்டி மீன்பிடித் துறைமுகப் பகுதி 2017ஆம் ஆண்டு ஜூலை மாதம் 3ஆம் திகதி விடுவிக்கப்பட்டது.

போருக்கு முன்னர் இலங்கை மீன்பிடி உற்பத்தியில் மயிலிட்டி துறைமுகம் 30 வீதத்துக்கு மேல் பங்களிப்பு செய்துள்ளது. 1979ஆம் ஆண்டிலிருந்து 1983ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் நாட்டின் மொத்த மீன் உற்பத்தியில் வட பகுதியில் 35 தொடக்கம் 41 வீதமான மீன்கள் பிடிக்கப்பட்டன. அதில் மயிலிட்டி மீன்பிடித்துறைமுகம் மிகப்பெரிய பங்களிப்பை வழங்கியிருந்தது. இந்த துறைமுகத்தின் செயலிழப்பு வட மாகாணத்துக்கும் தேசிய உற்பத்திக்கும் பாதிப்பாக அமைந்தது. கடந்த ஆண்டு ஒகஸ்ட் மாதம் துறைமுகத்துக்கான அபிவிருத்திப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. 40 கோடி ரூபா செலவில் 2 கட்டங்களாக நிர்மாணப்பணிகள் முன்னெடுக்கப்பட்டன. அந்தப் பணிகள் நிறைவடைந்ததைத் தொடர்ந்து மயிலிட்டி துறைமுகத்தைத் திறப்பதற்காக தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணம் வரவுள்ளார்.

எதிர்வரும் 15ஆம் திகதி யாழ்ப்பாணம் வரும் அவர், யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நடைபெறவுள்ள கூட்டம் ஒன்றில் கலந்து கொள்ளவுள்ளார். தொடர்ந்து 16 ஆம் திகதி துறைமுகத்தைத் திறந்து வைப்பார். (ம-21)



# யாழ். மாநகர சபைக்கு 6 புதிய வாகனங்கள்!

யாழ்ப்பாணம், ஓக. 9
யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு உலக வங்கித் திட்டத்தின் 'நகர அபிவிருத்தி' திட்டத்தின் ஊடாக 400 மில்லியன் ரூபா செலவில் கொள்வனவு செய்யத் திட்டமிட்ட வாகனங்களில் ஒரு தொகுதி வாகனங்கள் நேற்றைய தினம் மாநகர சபையை வந்தடைந்தன.

உலக வங்கியின் நிதி உதவியில் நகர அபிவிருத்தி அமைச்சின் ஊடாக மேற்கொள்ளும் திட்டத்தில் முதல் கட்டமாகவே குறித்த வாகனங்கள் மாநகர சபையை வந்தடைந்தன. மூன்று கலி பவுசர் (சக்கர்), ஒரு நீர்த்தாங்கி வாகனம், இரு சிறிய ரக பைக்கோ என்பனவே தற்போது சபையை வந்தடைந்துள்ளன. (ம-105)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்

# சுயாதீன விசாரணை ஆணைக்குழு வேண்டும்

## மகிந்த தெரிவிப்பு

கொழும்பு, ஓக.9
உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் தொடர்பில் சுயாதீன விசாரணைகள் இடம்பெற வேண்டுமாயின் சிறப்பு சுயாதீன அரச தலைவர் விசாரணை ஆணைக்குழு அமைக்கப்பட வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

பொதுமக்கள் முன்னணியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கத்தோலிக்க நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்சவுக்கும் இடையிலான சந்திப்பு விஜயராம மாவத்தையில் உள்ள எதிர்க்கட்சி தலைவரின் இல்லத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இதன்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

குண்டுத்தாக்குதல் தொடர்பில் ஆராயும் அனைத்து விசாரணைக் குழுக்கள் மீதும் எந்தவித நம்பிக்கையும் கிடையாது. விசாரணைகள் சுயாதீனமாக இடம்பெறுகின்றதா என்ற சந்தேகம் காணப்படுவதாக பாதிக்கப்பட்ட மக்கள் குற்றஞ்சாட்டுகின்றார்கள். விசாரணைகள் தொடர்பில் தொடர்ந்து அதிருப்தியடைவதாக மதத் தலைவர்கள் குற்றஞ்சாட்டுவது கவனத்துக்குரியது.

குண்டுத்தாக்குதல் தொடர்பில் எழுந்த கேள்விக்கு இது வரையில் உரிய பதில் கிடைக்கப் பெறவில்லை என்பதே எமது நிலைப்பாடாக காணப்படுகின்றன.

சுயாதீனமான விசாரணைகள் இடம் பெற வேண்டுமாயின் அரச தலைவர் விசாரணை ஆணைக்குழு நிறுவுதல் அவசியமாகும். இந்த விடயம் தொடர்பில் எதிர்க்கட்சி தலைவர் என்ற ரீதியில் நான், அரச தலைவர் மைத்திரிபாலவிடமும், தலைமை அமைச்சரிடமும் பிரத்தியேகமாக எடுத்துரைப்பேன் - என்றார். (ஒ.5)

# நவம்பர் மாதம் நடக்கும் தேர்தல் மாற்றத்துக்கான ஆரம்பப்புள்ளி

## மகிந்த அணி கூறுகின்றது

கொழும்பு, ஓக.9

அரசுக்குள் காணப்படுகின்ற உள்ளக போர் நாட்டின் அனைத்துப் பாகங்களையும் அழித்துவிட்டுள்ளது. நவம்பர் மாதம் நடைப்பெற வேண்டிய அரச தலைவர் தேர்தல் மாற்றத்துக்கான ஆரம்ப புள்ளியாகவே கருதப்பட வேண்டும்.

இவ்வாறு சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் தவிசாளர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

கொழும்பு கிங்ஸ்பரி விடுதியில் நேற்று வியாழக்கிழமை நடத்தப்பட்ட ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசுக்குள் பல அரசுகள் உள்ளதால் நாட்டில் நிலையற்ற தன்மை பாதிக்கப்பட்டுள்ளது. எந்தவிதமான கொள்கையுமற்ற வகையில் ஆட்சியாளர்கள் நாட்டை நிர்வகிக்கின்றனர். அதனால் பிரச்சினைக்குத் தீர்வில்லாது பல பிரச்சினைகள் மேலோங்கியுள்ளன. நாட்டு மக்களின் பாதுகாப்பு என்பது அடிப்படையானதொரு விடயமாகும். ஆனால் அதைக் கூட முறையாகச் செய்ய முடியாதளவு தற்போது அரசு பலவீனப்பட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற தற்கொலை குண்டுத் தாக்குதலின் பின்னர் தற்போதுவரை மக்களின் அச்சநிலை போக்கப்படவில்லை. தாக்குதல் தொடர்பில் அரசியல் மயப்பட்ட விசாரணைகளே நடக்கின்றன. நேர்மையான விசாரணைகள் அற்ற நிலையில் பாதிக்கப்பட்ட தரப்பினர் சந்தேகங்களை வெளியிடுகின்றனர். நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் முன்னிலையான தலைமை அமைச்சர் அங்கு தெரிவித்த கருத்துக்கள் அரசு எந்தளவு தேசிய பாதுகாப்பு விடயத்தில் கவனயீனமாக இருந்துள்ளது என்பதை வெளிப்படுத்துகின்றது.

மறுப்புறம் நாட்டின் பொருளாதாரம் படுமோசமான முறையில் வீழ்ச்சியடைந்துள்ளது. முதலீட்டாளர்கள் நம்பிக்கையை இழந்துள்ளனர். வரி, சட்டங்களாக இருந்தாலும் சரி வரி கொள்கையாக இருந்தாலும் சரி அனைத்திலும் அரசு மிக மோசமாக செயற்படுகின்றது. அதனால் முதலீட்டாளர்கள் வெளியேறுகின்றனர். தேசிய பொருளாதாரம் கடும் வீழ்ச்சியடைந்துள்ளது. நிலையான அரசு இல்லாது நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியாது.

அதேபோன்று உலக நாடுகளுடனான அயலுறவுத்துறை கொள்கைகளிலும் மோசமான நிலமையே காணப்படுகின்றது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் எமக்கு எதிராக அமெரிக்காவால் கொண்டு வரப்பட்ட தீர்மானத்துக்கு அனுசரணை வழங்கி நாட்டை மிகவும் மோசமாக காட்டிக் கொடுத்துள்ளனர். உலகில் வேறு எந்தவொரு நாடும் இவ்வாறு செயற்பட்டதில்லை.

நாட்டை நிலையான தன்மைக்கு கொண்டுச் செல்லவே சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி செயற்பட்டு வருகின்றது. அரசுக்குள் காணப்படுகின்ற உள்ளகப் போரால் அனைத்து துறைகளுமே கேள்விக்குறியாகி விட்டுள்ளது. அனைத்தையும் மாற்றியமைக்க அரச தலைவர் தேர்தல் முக்கியமானதாக அமைந்துள்ளது. அதையும் ஒத்திவைக்க பல முயற்சிகளும் முன்னெடுக்கப்படுகின்றன.

இந்த தேர்தலை பெற்றுக்கொள்ள வேண்டிய நிலையில் நாம் உள்ளோம். இதனை புதிய ஆரம்ப புள்ளியாகவே கருதுகின்றோம். நவம்பர் மாதம் நடுப்பகுதிக்குள் அரச தலைவர் தேர்தல் நடத்தப்பட வேண்டும் - என்றார். (எ-61)

# கேள்விகளுக்குப் பதிலளிக்காத அமைச்சர்களால் பெரும் சர்ச்சை

கொழும்பு, ஓக.9

எமது கேள்விகளுக்கு இதுவரை அமைச்சர்கள் பதில் வழங்கவில்லை. மக்கள் சார் கேள்விகளுக்குப் பதிலளிக்காத அமைச்சர்களின் பெயர்களைச் சபையில் அறிவியுங்கள் என்று மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திசாநாயக்க நேற்று நாடாளுமன்றில் வலியுறுத்தினார்.

எனினும் அமைச்சர்களின் பெயர்களைச் சபையில் தெரிவிக்க முடியாது. அது அநாவசியமாக அவர்களுக்குப் பிரச்சினைகளை ஏற்படுத்தும் என்று சபை முதல்வர் லக்ஷ்மன் கிரியெல்ல வாதிட்டார்.

நாடாளுமன்றத்தில் 27/2 இன் கீழ் நான் தொடர்ச்சியாக கேள்வி கேட்டுள்ளேன். ஆனால் நான் கேட்ட கேள்விகளுக்கு பதில் வரவில்லை. மூன்று மாதங்களாக பதில் வராத கேள்விகள் உள்ளன. ஆகவே யார் கேள்விகளுக்கு பதில் கூறாது உள்ளனர். பதிலளிக்காமைக்கா காரணிகளைத்தெரிவிக்க வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் அனுமரகுமார தெரிவித்தார்.

அதற்கு பதில் தெரிவித்த சபை முதல்வர் கிரியெல்ல, அமைச்சர்களின் பெயர்களை வெளிப்படுத்த முடியாது. ஆனால் நீங்கள் கேட்ட 9 கேள்விகளுக்கு பதில்வழங்காது உள்ளனர். ஒன்பது கேள்விகள் உள்ளன என்பதை ஏற்றுக் கொள்கிறேன் - என்றார்.

அனுரகுமார : யார் அந்த 9 பேர்?

சபை முதல்வர் : சபையை நான் நடத்துவதில்லை. சபாநாயகர் தான் சபையை வழிநடத்துகின்றார். சபாநாயகர் அமைச்சர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கலாம், என்னால் முடியாது.

சபாநாயகர் : சரி அப்படியென்றால் எனக்கு அவர்களின் பெயர் பட்டியலை தாருங்கள். அனுரகுமார அவர்களே, நான் தனிப்பட்ட முறையில் அவர்களிடம் பேசி தீர்வு ஒன்றை உங்களுக்குத் தருகின்றேன்.

அனுரகுமார: சபாநாயகர் அவர்களே, நான் முறையாக அவர்களின் பெயர்களைக் கேட்டுள்ளோம். கேள்விகளுக்கு பதில் தான் கிடைக்கவில்லை, ஆனால் பெயர்களை கூடவா தெரிவிக்க முடியாது.

சபை முதல்வர் : பெயர்களை கூறுவது சரியில்லையே, தனிப்பட்ட முறையில் உங்களிடம் தருகிறேன் சபாநாயகர் அவர்களே. இதில் அநாவசியமான பிரச்சினைகளை ஏற்படுத்திக்கொள்ள வேண்டாம்.

அனுரகுமார : இது அநாவசிய பிரச்சினையை ஏற்படுத்தும் காரணம் அல்ல, பதில் கூறாத அமைச்சர்கள் யார் என நாடாளுமன்றத்துக்கு தெரிவிக்க முடியாதா? இது எந்த விதத்தில் நியாயமானது.

சபை முதல்வர் : உங்களின் கேள்விக்கு பதில் தெரிவிக்காத அமைச்சர்களின் பெயர்கள் என்ன என நீங்கள் கேள்வி ஒன்றை முறையாகக் கேட்கவில்லை.

அனுரகுமார: சரி, நாளை நான் முறையாக உங்களிடம் இந்த கேள்வியை கேட்கிறேன். 27/2 இன் கீழ் நான் கேட்ட கேள்விகளுக்கு பதில் கூறிய அமைச்சர்கள் யார், பதில் கொடுக்காத அமைச்சர்கள் யார் எனக் கேட்கிறேன். இது என்ன முறைமை? அமைச்சர்கள் அனைவரும் மக்களின் பணத்தில் இயங்குகின்றனர். இந்த சபை மக்களின் பணத்தில் இயங்குகின்றது. ஆனால் மக்கள் சார் கேள்விகளை கேட்டால் அவர்கள் பதில் கூறுவதில்லை என்றால் இது என்ன நியாயம். அவர்களின் பெயர்களை மக்கள் அறிந்துகொள்ள வேண்டாமா? சபை முதல்வர் அரச தலைவர் வேட்பாளர் விடயத்தில் குழப்பிப்போயு ள்ளார் போலுள்ளது.

சபை முதல்வர்: ஆம். நாடாளுமன்றத்துக்குக் குண்டுத் தாக்குதல் நடத்திய நீங்கள் நியாயம் பற்றிப் பேசுகின்றீர்கள்.

அனுரகுமார : நாம் மக்கள் விடயம் குறித்து நியாயமாக காரணி ஒன்றையே இங்கு கேட்கிறோம். அதற்கு பதில் வழங்காது இருப்பது சம்பிரதாயமா இல்லையா என்பதை தீர்மானியுங்கள் - என்றார். (எ-31)

# ரணிலின் அரசால் மலையகத்துக்கு பெரும் உதவிகள்

## வடிவேல் சுரேஸ் கருத்து

கொழும்பு, ஓக. 9

எந்த அரசாலும் கிடைக்காத அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் இந்த அரசலேயே மலையகத்துக்குக் கிடைக்கப்பெற்றிருக்கின்றன என இராஜாங்க அமைச்சர் வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சட்டத்தின் கீழ் கட்டளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

மலையக மக்களின் உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கு என்றுமில்லாதவாறு இந்த அரசு மிகப்பெரிய அபிவிருத்தி, மிகப் பெரிய அங்கீகாரம் மற்றும் சுதந்திரத்தை வழங்கியுள்ளது. அதனை எவரும் மறுக்க முடியாது. அதேபோன்று உலக மாற்றத்துக்கு ஏற்றவாறும் கல்வியில் ஏற்பட்டு வரும் மாற்றதுக்கு ஏற்றவாறும் மலையக மக்களும் கல்வித்துறையில் மாற்றத்துக்கு தயாராகி வருகின்றனர். பல்கலைக் கழங்களுக்கு தெரிவு செய்யப்படுவர்களின் வீதம் அதிகரித்து வருகின்றது.

மேலும் மலையகம் வெறுமனே தனிவீட்டுத்திட்டத்தில் மாத்திரம் தங்கிவிடுவதல்ல. இந்திய அரசின் உதவியுடன் தனிவீட்டுத்திட்டத்தை மேற்கொள்வதை நாங்கள் பாராட்டுகின்றோம். மலையக மக்களுக்கு வெள்ளையர்கள் வழங்கிய விலாசம் இன்று மாற்றம் பெற்று அவர்களுக்கு வழங்கவேண்டிய உரிமைகள் கிடைக்கப்பெற்றுவருகின்றன. என்றாலும் நவீன உலகத்துக்கு ஏற்ற மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு நாங்கள் பல சவால்களையும் எதிர்கொள்ள வேண்டி இருக்கின்றது. சில அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் ஒருசில அதிகாரிகளின் நடவடிக்கையால் ஆமை வேகத்திலே சென்று கொண்டிருக்கின்றன - என்றார். (ம-31)

# மன்னாரில் உதைபந்தாடினார் அமைச்சர் சஜித் பிரேமதாஸ



மன்னார், ஓக. 9

மன்னாருக்கு நேற்று வியாழக்கிழமை காலை வருகை தந்த அமைச்சர் சஜித் பிரேமதாச ஜோசப்வாஸ் நகர் இளைஞர்களுடன் சிறிது நேரம் உதைபந்தாட்ட விளையாட்டில் ஈடுபட்டார்.

மன்னார் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஜோசப்வாஸில் அமைக்கப்பட்ட வீட்டுத் திட்ட மாதிரிக் கிராமங்களை வைபவ ரீதியாகத் திறந்து வைக்கும் நிகழ்வுகள் நேற்று நடைபெற்றன. அவற்றின் பின்னரே இராயப்பு ஜோசேப்பு ஆண்டகை விளையாட்டு மைதானத்தில் இளைஞர்களுடன் அமைச்சர் சஜித் பிரேமதாச உதைப்பந்தாட்ட விளையாட்டில் ஈடுபட்டார். (த-56)

# தேயிலை வியாபாரமும் பயங்கரவாதமும் ஒன்றுடன் மற்றொன்று தொடர்புபட்டவை!

## அமுனுகம கண்டுபிடிப்பு

கொழும்பு, ஓக. 9

இலங்கையின் கழிவுத் தேயிலை வியாபாரமும் பயங்கரவாதமும் ஒன்றுடன் மற்றொன்று தொடர்புபட்டுள்ளதுடன் பயங்கரவாதத் தாக்குதலுடன் தொடர்புபட்டவர்கள் மாவனல்லை, கண்டி போன்ற பகுதிகளில் கழிவுத்தேயிலை வியாபாரத்தில் ஈடுபட்டதை கவனத்தில் கொள்ள வேண்டும், இவ்வாறு தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி சரத் அமுனுகம.

அபிவிருத்தி உபாயமுறைகள் மற்றும் பன்னாட்டு வர்த்தக சட்டத்தின் மீதான ஒழுங்கு விதிகள் குறித்த விவாதத்தில் நேற்றுக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையின் தேயிலைக்குப் பன்னாட்டுச் சமூகத்தின் மத்தியில் அதற்காக கேள்வி இருந்த போதிலும் எமது தேயிலை இறப்பர் போன்றவற்றின் நிர்ணய விலை உயர்வு காரணமாக பன்னாட்டுச் சந்தையில் அதிகளவில் விற்க முடியாத நிலமை காணப்படுகின்றது. விலையில் கவனம் செலுத்த முடியும் என்றால் எம்மால் அதிகளவில் ஏற்றுமதிகளைக் கையாள முடியும். அதேபோல் இன்று கழிவுத்தேயிலை வியாபாரம் மிகவும் மோசமான வகையில் இலங்கையைப் பாதிக்கக்கூடியதாக உள்ளது.

உண்மையில் இந்த கழிவுத்தேயிலை வியாபாரமும் பயங்கரவாதமும் ஒன்றுடன் ஒன்று இணைந்தே செயற்படுகின்றன. குறிப்பாக பணம் சம்பாதிக்கும் நோக்கத்தில் இவை ஒன்றாகக் கையாளப்படுகின்றன. இங்கு பயங்கரவாத தாக்குதலை நடத்தியவர்கள்கூட மாவனல்ல மற்றும் கண்டி ஆகிய பகுதிகளில் கழிவுத்தேயிலை வியாபாரத்தில் ஈடுபட்டிருந்தனர். அதேபோல் இன்று மலையகத்தில் பிரசித்திபெற்ற அரசியல் வாதிகள் சிலர் இந்தக் கழிவுத்தேயிலை வியாபாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த விடயங்களை அரசு கவனத்தில் கொள்ளவேண்டும் - என்றார். (ம-31)

# காய்ச்சல் ஏற்படும் நோயாளர்களுக்கு சுகாதார அமைச்சு அவசர எச்சரிக்கை

கொழும்பு, ஓக.9

பொதுமக்கள் எவரும் காய்ச்சலுக்காக அஸ்பிரின் உள்ளிட்ட ஸ்ரிறொயிட் அல்லாத அழர்ஜி எதிர்ப்பு மருந்துகள் மற்றும் ஸ்ரிறொயிட் மருந்துகளைப் பாவிக்கவேண்டாம் எனச் சுகாதார அமைச்சு பொதுமக்களுக்கு அவசர எச்சரிக்கையை விடுத்துள்ளது.

தற்போது இலங்கையின் பல மாவட்டங்களில் டெங்கு நோயின் தாக்கமானது குறைவடைந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. எனினும் தென்மேற் பருவப்பெயர்ச்சிக் காற்றுக் காலநிலை காரணமாக கொழும்பு, கம்பஹா, களுத்துறை, காலி மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்களில் இந்த நோயின் தாக்கம் அதிகரித்துக் காணப்பட்டது. இந்த நிலையில் சில டெங்குக் காய்ச்சல் நோயாளிகள் குறிப்பிட்ட சில மருந்து வகைகளைப் பாவித்த காரணத்தால் அவர்களது நிலமை மோசமடைந்தது டன் சிலர் உயிரிழந்தும் உள்ளனர் என்று சுகாதார அமைச்சுக்கு தெரியவந்துள்ளது. இதனையடுத்தே காய்ச்சல் காணப்படும் நோயாளர்கள் கீழ்க்காணும் மருந்துகளைப் பாவிக்கவேண்டாம் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அனில் ஜாசிங்க நேற்று முன்தினம் அவசர ஊடக அறிவித்தல் ஒன்றினை விடுத்துள்ளார்.

அதன்படி அஸ்பிரின், புருபன் , டைக்கிலோபெனாக் சோடியம், மெபனமிக் அசிட் மற்றும் இந்த வகையைச்சேர்ந்த வேறு ஸ்ரிறொயிட் அல்லாத அழர்ஜி எதிர்ப்பு மருந்துகள், மேலும் ஸ்ரிறொயிட் வகையைச் சேர்ந்த மருந்துகளான பிறெட்னிசலோன் மீதைல் பிறெட்னிசலோன் மற்றும் டெக்ஸாமெத்தசோன் ஆகிய மருந்துகளை காய்ச்சல் நோயாளர்கள் உள்ளெடுக்க வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நோயாளர்களுக்குச்சிகிச்சை வழங்கும் வைத்தியர்கள் காய்ச்சல் நோயாளர்களுக்கு மேற்படி மருந்துகளைப் பரிந்துரைக்காது தவிர்க்கவேண்டும் எனவும் பொதுமக்கள் காய்ச்சலுக்காகத் தாங்கள் பாவிக்கும் மருந்துகள் குறித்து தெரிந்து கொள்ள வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. (21)

# இலங்கையுடன் கம்போடியா கைகோர்த்துச் செயற்படும்

## அந்த நாட்டு மன்னர் தெரிவிப்பு

கொழும்பு, ஓக.9

பொருளாதார, வர்த்தக மற்றும் சமூக ரீதியாகவும், பௌத்த சமயப் புத்தெழுச்சிக்காகவும், அனைத்து நடவடிக்கைகளிலும் கம்போடியா இலங்கையுடன் கைகோர்த்துள்ளது என்று கம்போடிய மன்னர் தெரிவித்துள்ளார்.

கம்போடிய அரசின் சிறப்பு அழைப்பின்பேரில் அந்த நாட்டுக்கு அரச முறைப் பயணம் மேற்கொண்டிருக்கும் அரச தலைவர் மைத்தரிபால சிறிசேனவுக்கும், கம்போடிய மன்னருக்கும் இடையே நேற்றுச் சந்திப்பு ஒன்று நடைபெற்றது.

அதன்போதே கம்போடிய மன்னர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இலங்கை அரச தலைவருக்கு அங்கு கோலாகலமான வரவேற்பு நிகழ்வும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

பண்டைய காலந்தொட்டு இரண்டுநாடுகளுக்குமிடையில் இருந்துவரும் உறவுகளை நினைவுகூர்ந்த கம்போடிய மன்னர் தனது அழைப்பின்பேரில் கம்போடியா நாட்டுக்கு வருகை தந்தமைக்காக நன்றிகளையும் தெரிவித்துள்ளார்.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் தலைமையின் கீழ் தற்போது இலங்கை பொருளாதார, வர்த்தக, சமூக மற்றும் சமய ரீதியாக அடைந்துள்ள முன்னேற்றத்தைப் பாராட்டிய கம்போடிய மன்னர், முக்கியமாக கம்போடியா பிக்குகளுக்கு கல்வி புலமைப் பரிசில்களை வழங்குதல் உள்ளிட்ட கல்வித்துறையில் இலங்கை அரசு கம்போடியாவுக்கு வழங்கும் உதவிகள் தொடர்பாகத் தனது நன்றியை தெரிவித்தார்.

இரண்டுநாடுகளுக்குமிடையிலான கல்வி, சுற்றுலா கைத்தொழில் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இருந்துவரும் உறவுகளை இரு நாடுகளுக்கும் நன்மை பயக்கும் வகையில் புதிய வழிகளில் முன்கொண்டு செல்வது தொடர்பாக இரு நாட்டுத் தலைவர்களும் விரிவாக கலந்துரையாடினர்.

இலங்கைக்கும் கம்போடியாவுக்கும் இடையிலான நீண்டகால நட்புறவை குறிக்கும் வகையில் கம்போடியாவுக்கு அரச முறைப் பயணமொன்றை மேற்கொள்வதற்கு அழைப்பு விடுத்தமைக்கு கம்போடிய மன்னருக்கு நன்றி தெரிவித்த அரசதலைவர் பௌத்த சமய புத்தெழுச்சிக்காக இலங்கை தற்போது பல முக்கிய பணிகளை மேற்கொண்டு வருவதாகவும், அவ்வாறானதொரு சந்தர்ப்பத்தில் இந்த பயணத்தில் இணைந்துகொள்ள கிடைத்தமை தொடர்பாக மகிழ்ச்சியடைவதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை , கம்போடியாவின் தலை நகரில் அமைந்துள்ள கம்போடியாவின் சுதந்திர தூபிக்கு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மலரஞ்சலி செலுத்தியதுடன், கம்போடியாவின் தந்தையாக கருதப்படும் தற்போதைய மன்னரின் தந்தையாரான நெரோடம் சிகானோவுக் மன்னரின் நினைவிடத்திலும் மலரஞ்சலி செலுத்தினார். (எ)

# இலங்கை இராணுவத்தின் பாதுகாப்பு கருத்தரங்கு!

இலங்கை இராணுவத்தின் ஏற்பாட்டில் "கொழும்புப் பாதுகாப்புக் கருத்தரங்கு 2019" இந்த மாத இறுதியில் நடைபெறவுள்ளது என்று பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

இந்தக் கருத்தரங்கு கொழும்பு பண்டாரநாயக்க மாநாட்டுமண்டபத்தில் எதிர்வரும் 29ஆம், 30ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தக் கருத்தரங்கு 2011 ஆம் ஆண்டு முதல் இலங்கை இராணுவப் பாதுகாப்புக் கருத்தரங்கு என்ற பெயரில் ஒவ்வொரு ஆண்டும் நடத்தப்பட்டு வந்தது. எனினும் 2016ஆம் ஆண்டு முதல் கொழும்பு பாதுகாப்புக் கருத்தரங்கு என்ற பெயரில் இந்தக் கருத்தரங்கு நடத்தப்படுகின்றது. (எ)

# பட்டதாரிகள், டிப்ளோமாதாரிகளுக்கு நியமனம் வழங்கத்தான் வேண்டும்

## தமிழ் அரசுக் கட்சியின் செயற்குழுவில் தீர்மானம் சீ.வி.கே. சிவஞானம் தெரிவிக்கிறார்

யாழ்ப்பாணம், ஓக. 9

வெளிவாரி பட்டதாரிகள் மற்றும் உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமாதாரிகளுக்கும் நியமனம் வழங்கப்பட வேண்டும் என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மையச்செயற்குழுவில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மூத்த துணைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் இதனைத் தெரிவித்தார்.

பட்டதாரி நியமனத்தில் புறக்கணிக்கப்பட்ட வெளிவாரிப் பட்டதாரிகள் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மூத்த துணைத்தலைவர் சீ.வீ. கே.சிவஞானத்தை நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடினர். பட்டதாரி நியமனத்தில் தாம் புறக்கணிக்கப்பட்டமை தொடர்பில் அரசியல் ரீதியாக அழுத்தம் கொடுக்கவில்லை என்று தெரிவித்திருந்தனர். அவர்களின் குற்றச்சாட்டுக்குப் பதிலளிக்கையில் சீ.வீ. கே.சிவஞானம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடு முழுவதும் அண்மையில் வழங்கப்பட்ட பட்டதாரி நியமனம் வழங்கலில் உள்வாரிப் பட்டதாரிகளுக்கு மட்டும் நியமனம் வழங்கப்பட்டது. வெளிவாரி மற்றும் உயர் தேசியகணக்கியல்டிப்பிளோமாதாரிகளுக்கு நியமனம் வழங்கப்படாது புறக்கணிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் அண்மையில் இடம்பெற்ற இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மையச் செயற்குழுவில் தீர்மானம் ஒன்று எடுக்கப்பட்டுள்ளது.

உள்வாரி வெளிவாரி என்ற பாகுபாடின்றி அனைத்துப் பட்டதாரிகள் மற்றும் உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமாதாரிகள் அனைவருக்கும் நியமனம் உடனடியாக வழங்கப்படவேண்டும் என்று தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பிலான தொடர் நடவடிக்கைகளை கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மேற்கொள்வார்கள் என்று தெரிவித்தார் என்று அவரின் ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

# வர்த்தக உறவுகளை பலப்படுத்த கம்போடியாவில் சிறப்பு மாநாடு



கொழும்பு, ஓக.9

கம்போடியாவின் சிறப்பு அழைப்பின்பேரில் அங்கு பயணம் மேற்கொண்டுள்ள அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கும், அந்த நாட்டின் வர்த்தகர்கள் மற்றும் அங்குள்ள இலங்கையர்களுக்கும் இடையே நேற்றுமுன்தினம் சந்திப்பு ஒன்று நடந்துள்ளது. இந்தச் சந்திப்பில் அந்த நாட்டுத் தலைமை அமைச்சரும் கலந்து கொண் டுள்ளார்.

இலங்கை மற்றும் கம்போடியாவுக்கிடையே வர்த்தக உறவுகளைப் பலப்படுத்துவது தொடர்பாக இந்தச் சந்திப்பில் கவனம் செலுத்தப்பட்டது. பொருளாதார வர்த்தக நடவடிக்கைகளில் இணைந்து செயற்படவும் ஆடைகள், இரத்தினக்கல், கைத்தொழில் போன்ற பல்வேறு துறைகளில் இரு நாடுகளுக்கும் இடையே உறவுகளை மேம்படுத்துவது தொடர்பாகவும் இந்தக் கலந்துரையாடலில் பேசப்பட்டுள்ளது.

மாநாட்டில் அந்த நாட்டுத் தலைமை அமைச்சர் சிறப்புரையாற்றினார். இலங்கை சார்பாக இராஜாங்க அமைச்சர் வசந்த சேனாநாயக்க உரையாற்றினார்.

இந்த மாநாட்டில் கம்போடியா வர்த்தகக் குழுவின் தலைவர், இலங்கை வர்த்தக சங்கத்தின் தலைவர் சாரங்க விஜேரத்ன உட்பட இரு நாடுகளையும் சேர்ந்த வர்த்தகர்கள் பலர் கலந்து கொண்டனர். (எ)

# தமிழர்களை மீண்டும் ஏமாற்ற முனைகின்றார் மகிந்த ராஜபக்ச

## தமிழ்க் கட்சித் தலைவர்கள் குற்றச்சாட்டு

கொழும்பு, ஓக. 9

புதிய அரசமைப்பு உருவாக்கத்தை மகிந்த தரப்பே கடுமையாக எதிர்த்து வருகின்றது. இந்த நிலையில் 13ஆவது திருத்தச்சட்டத்துக்கு அப்பால் சென்று அரசியல் தீர்வை வழங்குவேன் என்று மகிந்த கூறுவதன் நோக்கம், தேர்தலை இலக்கு வைத்து மீண்டும் தமிழர்களை ஏமாற்றுவதற்கே. இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், மற்றும் ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோர் தெரிவித்தனர்.

கடந்த திங்கட்கிழமை சில தமிழ் கட்சிகளின் தலைவர்கள் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்சவை சந்தித்து பேச்சு நடத்தியிருந்தனர். இதன்போது, 13ஆவது திருத்தச்சட்டத்துக்கு அப்பால் சென்று அதிகாரப்பகிர்வை வழங்கத் தாம் சிந்திப்பதாகவும், தமது ஆட்சிக் காலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உரிய ஒத்துழைப்பை வழங்காமையாலே இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாது போனதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் கூறியுள்ளார்.

மகிந்தவின் இந்தக் கருத்துத் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்ததாவது:

இனப்பிரச்சினைக்குத் தீர்வை வழங்குவதாக இரண்டு ஆண்டுகளுக்கு அதிகமாக எம்மை பேச்சுக்கு அழைத்து முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச ஏமாற்றியிருந்தார். 13ஆவது திருத்தச்சட்டத்துக்கு அப்பால் சென்று தீர்வை வழங்குவதாகவும் கூறிய அவர், 18ஆவது திருத்தச்சட்டத் தின் மூலம் மாகாண சபைகளின் அதிகாரங்கள் உட்பட ஒட்டு மொத்த அதிகாரத்தை நிறைவேற்று அதிகாரத்தின் கீழ் கொண்டு வந்ததை சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இனப்பிரச்சினைத் தீர்வுக்கு ஒத்துழைப்பு வழங்கவில்லை என்பது உண்மைக்குப் புறம்பானது. எம்மை மகிந்த ராஜபக்ச ஏமாற்றியிருந்தார் என்பதே உண்மை. தற்போதுகூட புதிய அரசமைப்பு உருவாக்கச் செயற்பாடுகளை நாடாளுமன்றில் அவரின் தரப்பே கடுமையாக எதிர்க்கிறது. எதிர்க்கட்சித் தலைவரின் போலி வாக்குறுதிகளை நம்பி ஏமாறுவதற்கு நாம் தயாரில்லை - என்றார்.

இதேவேளை, ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சித் தலைவர் சுரேஷ்பிரேமச்சந்திரன் தெரிவித்ததாவது:

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் முகமாக எதிர்க்கட்சித் தலைவரும் முன்னாள் அரசதலைவருமான மகிந்த ராஜபக்சவுடன் 18 முறை பேச்சு நடத்தியிருந்தோம். நாங்கள் முன்வைத்த எந்தவொரு கோரிக்கைகளையும் ஏற்றுக்கொள்ள மகிந்த ராஜபக்ச தரப்பு தயாராகவிருக்கவில்லை. முன்னாள் அமைச்சர் திஸ்ஸ விதாரண தலைமையில் சிறப்புக் குழுவொன்று அமைக்கப்பட்டது. இவர்கள் முன்மொழிந்த கோரிக்கைகளைக் கூட நடை முறைப்படுத்த மகிந்த ராஜபக்ச தயாராகவிருக்கவில்லை - என்றார். (ஒ.5)

# மைத்திரி அணிக்குள் வலுக்கிறது பிளவு

## மொட்டு மாநாட்டில் பங்கேற்க சு.கவினர் சிலர் விருப்பம்

கொழும்பு, ஓக. 9

பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் பற்றிய அறிவிப்பு வெளியிடப்படவுள்ள, அந்தக் கட்சியின் மாநாட்டில் தாம் கலந்துகொள்ளப் போவதாக சிறிலங்கா சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் தெரிவித்துள்ளனர்.

நாளை மறுதினம் 11ஆம் திகதி சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் மாநாடு நடைபெறவுள்ளது. இதில் மகிந்த ராஜபக்ச கட்சியின் தலைவராக பங்கேற்கவுள்ளதுடன், தமது கட்சியின் அரச தலைவர் வேட்பாளரின் பெயரையும் அறிவிக்கவுள்ளார்.

இந்த மாநாட்டில் பங்கேற்பதா? இல்லையா? என்பது குறித்து, கடந்த 6ஆம் திகதி அரச தலைவரின் இல்லத்தில் சுதந்திரக் கட்சியின் முக்கிய தலைவர்கள் கூடி ஆராய்ந்தனர்.

இதன்போது, மாநாட்டில் பங்கேற்க வேண்டும் என்று ஒரு தரப்பும், பங்கேற்கக் கூடாது என்று மற்றொரு தரப்பும் வாதிட்டன.

இரண்டு கட்சிகளுக்கும் இடையிலான கூட்டணி தொடர்பான முடிவு இன்னமும் எடுக்கப்படாத நிலையில், பொதுமக்கள் முன்னணியின் மாநாட்டில் பங்கேற்க வேண்டாம் என்று சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் அரச தலைவர் மைத்திரிபால கோரியிருந்தார்.

அதன் பின்னர் அவர் நேற்றுமுன்தினம் அதிகாலை கம்போடியாவுக்குப் புறப்பட்டுச் சென்று விட்டார்.

சுதந்திரக் கட்சியின் இந்த முடிவை கட்சியின் பொதுச்செயலர் தயாசிறி ஜயசேகர அறிவித்திருந்தார். எனினும், சுதந்திரக் கட்சித் தலைமையின் இந்த முடிவுக்குக் கட்டுப்படப் போவதில்லை என்று சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

தயாசிறி ஜயசேகர தவிர்ந்த சுதந்திரக் கட்சியின் ஏனைய உறுப்பினர்கள் இந்த மாநாட்டில் பங்கேற்கவுள்ளதாக எஸ்.பி.திசநாயக்க தெரிவித்தார். அத்துடன் பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளருக்குத் தாம் ஆசி வழங்கப்போவதாகவும் அவர் கூறினார்.

தானும் இந்த மாநாட்டில் பங்கேற்கப் போவதாக, சுதந்திரக் கட்சியின் மற்றொரு நாடாளுமன்ற உறுப்பினரான டிலான் பெரேராவும் கூறியுள்ளார்.

இதற்கிடையே, இரண்டு கட்சிகளுக்கும் இடையில் கூட்டணியை உருவாக்குவது தொடர்பாக பேச்சு நடத்தப்படுகின்ற நிலையில், சிறிலங்கா சுதந்திரக் கட்சித் தலைமை, மாநாட்டில் பங்கேற்க தடைவிதித்துள்ளமை குறித்து பொதுமக்கள் முன்னணி கடும் அதிருப்தி அடைந்துள்ளது. (ஓ.5)

## இலங்கைக்கும் வரவுள்ளார் உதவிச் செயலர் அலிஸ்

கொழும்பு, ஓக.9

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மத்திய, ஆசிய விவகாரங்களுக்கான முதன்மை பிரதிஉதவிச்செயலர்அலிஸ் வெல்ஸ் தெற்காசியாவுக்கு உத்தியோகபூர்வ பயணம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார்.

இந்தப் பயணத்தின்போது அவர் இலங்கைக்கும் வரவுள்ளார் என்று அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் நேற்றுத் தெரிவித்தது.

இந்த மாதம் 6 ஆம் திகதி முதல் 16 ஆம் திகதி வரை இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்குச் செல்ல அவர் திட்டமிட்டுள்ளார். இந்த நாடுகளின் அரச அதிகாரிகளுடன் இருநாடுகளின் பரஸ்பர நலன் தொடர்பான பிரச்சினைகள் குறித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.

அதேநேரம் வர்த்தகர்கள் மற்றும் சிவில் சமூகத்துடனும் பேச்சுநடத்துவார் என அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (எ)

## முஸ்லிம்களுக்கு தொடர்பில்லை

கொழும்பு, ஓக. 9

நீர்கொழும்பில் புனித செபஸ்தியார் திருச்சொரூபம் தாக்கப்பட்ட சம்பவத்துக்கும் முஸ்லிம்களுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று நீர்கொழும்பு மக்கள் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டது.

கடந்த செவ்வாய்க்கிழமை நீர்கொழும்பு கட்டுவாப்பிட்டியில் உள்ள புனித செபஸ்தியார் திருச்சொரூபம் தாக்கப்பட்டிருந்தது. இதனையடுத்து அந்தப் பகுதி மக்கள் கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர். முஸ்லிம்களின் கடைகளை மூடுமாறு பொலிஸார் அறிவுறுத்தியிருந்தனர். அந்தப்பகுதிக்கு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை சென்றிருந்தார். அதன் பின்னர் நிலமை சுமுகமாகியது.

இந்த நிலையில் இந்தச் சம்பவம் தொடர்பில் மக்கள் ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டதாவது:

இந்தத் தாக்குதலின் பின்னணியில் அடிப்படைவாதக்குழுக்கள் உள்ளன. உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் சம்பவங்களின் பின்னர் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களின் பின்னணியில் பொதுமக்கள் முன்னணியைச் சேர்ந்தவர்கள் இருந்தனர்.

மேலும், நீர்கொழும்புப் பகுதியில் தற்கொலைக் குண்டுத்தாக்குதலுக்கு இலக்காகி உறவுகளை இழந்த கத்தோலிக்க மக்களுக்கும் ஏனைய சமூகத்தினருக்கும் இடையிலான நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் பொருட்டு கடுமையாக உழைத்து வருகின்றோம்.

இவ்வாறானதொரு நிலையில் அமைதியைச் சீர்குலைக்கும் வகையில் இடம்பெறும் செயற்பாடுகளை ஏற்றுக்கொள்ள முடியாது - என்றுள்ளது. (ஓ.5)

## நீதியும் சமத்துவமும் பேணப்படவேண்டும் என்பதில் மிக உறுதியாக நின்றவர் சுஷ்மா

*கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் இரங்கல்*

கொழும்பு, ஓக. 9

இந்தியாவின் மூத்த அரசியல் தலைவர்களில் ஒருவரும், இந்தியாவின் முன்னாள் அயலுறவுத்துறை அமைச்சருமான சுஷ்மா சுவராஜின் மறைவுச்செய்தி கேட்டு அதிர்ச்சியும் கவலையும் அடைகின்றோம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் நேற்று வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அவரைச் சந்தித்த அனைத்துச்சந்தர்ப்பங்களிலும் அவர் எம்முடன் மிகவும் நெருக்கமாக இருந்த ஒருவராவார்.

மேலும், ஒரு நாட்டிலே சமாதானத்தையும் உறுதிப்பாட்டையும் அடைவதற்கு அந்நாட்டு அனைத்து மக்கள் மத்தியிலும் நீதியும் சமத்துவமும் பேணப்படவேண்டும்என்பதில்மிகஉறுதியான நிலைப்பாட்டைக் கொண்டிருந்த ஒருவருமாவார்.

இந்திய அரசுக்கும் அதன் குடிமக்களுக்கும் குறிப்பாக சுஷ்மா சுவராஜின் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம் என்றுள்ளது. (ஓ.5,22)

## ஊடகவியலாளர் மீதான தாக்குதல் வழக்கில் 6 படையினர் விடுவிப்பு

*ஆதாரமில்லை என்கிறது சட்டமா அதிபர் திணைக்களம்*

கொழும்பு, ஓக. 9

ரிவிர இதழின் ஆசிரியராக இருந்த உபாலி தென்னக்கோன் மற்றும் அவரது மனைவி மீது தாக்குதல் நடத்தப்பட்ட வழக்கில் இருந்து, மேஜர் பிரபாத் புலத்வத்த உள்ளிட்ட 6 இராணுவப் புலனாய்வாளர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை விலக்கிக் கொள்வதாக சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பான வழக்கு கம்பகா மேல் நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது.

இந்த வழக்கில் திரிப்பொலி இரகசிய புலனாய்வு முகாமைச் சேர்ந்த மேஜர் பிரபாத் புலத்வத்த உள்ளிட்ட, 8 புலனாய்வு அதிகாரிகளுக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன.

இந்த வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, முன்னிலையான குற்ற விசாரணைப் பிரிவு அதிகாரிகள், உபாலி தென்னக்கோன் மீதான தாக்குதல் வழக்கில் மேஜர் புலத்வத்த உள்ளிட்ட 6 இராணுவப் புலனாய்வு அதிகாரிகளுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யும் திட்டம் சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு இல்லை என்று நீதிபதியிடம் தெரிவித்தனர்.

போதிய ஆதாரங்கள் இல்லாமையால் இவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப் போவதில்லை என்றும், பிரேமானந்த உடலகம, லலித் ராஜபக்ச ஆகிய இரண்டு புலனாய்வு அதிகாரிகளுக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் தாக்கல் செய்யப்படும் என்றும் சட்டமா அதிபர் திணைக்களத்தால் அறிவிக்கப்பட்டதாகவும் அவர்கள் கூறினர்.

அதேவேளை தற்போது பிணையில் உள்ள மேஜர் பிரபாத் புலத்வத்த உள்ளிட்ட 6 அதிகாரிகளையும் வழக்கில் இருந்து விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறும், குற்ற விசாரணைப் பிரிவு அதிகாரிகள் கோரியுள்ளனர்.

இதையடுத்து, மேஜர் பிரபாத் புலத்வத்த, பிரேமச்சந்திர பெரேரா, பிரபாத் துமிந்த வீரரத்ன, லசந்த விமலவீர, நிசாந்த ஜெயதிலக, நிசாந்த குமார ஆகிய புலனாய்வு அதிகாரிகளை எதிர்வரும் 23ஆம் திகதி நீதிமன்றத்தில் முன்னிலையாக உத்தரவிடப்பட்டது. (ஓ.5)

## யார் களமிறங்குவது: கட்சிக்குள் தேர்தல் நடத்திப் பார்ப்போம்

*ரணிலுக்கு சவால் விட்ட சஜித்*

கொழும்பு, ஓக. 9

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும், கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கும் இடையில் கடந்த செவ்வாய்க்கிழமை நடந்த பேச்சு முடிவுகள் ஏதுமின்றி நிறைவுக்கு வந்துள்ளன.

அரச தலைவர் தேர்தலில் ரணில் தானும் களமிறங்கப் போவதாக இந்தச் சந்திப்பில் கூறியுள்ளார். இதனையடுத்து சஜித் பிரேமதாசா, அரச தலைவர் தேர்தலில் கட்சி சார்பில் யார் போட்டியிடுவது என்று வாக்கெடுப்பு நடத்திப் பார்க்குமாறு சவால் விடுத்துள்ளார்.

அலரி மாளிகையில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு மூடிய அறைக்குள், ரணில் விக்கிரமசிங்கவும், சஜித் பிரேமதாசவும் பேச்சு நடத்தியிருந்தனர். இதன்போது, அரச தலைவர் தேர்தலில் போட்டியிடத் தாம் விரும்புவதாகரணில்விக்கிரமசிங்க கூறினார். சஜித் பிரேமதாச தாமும் போட்டியிட விரும்புவதாக வும் கட்சியில் பெரும்பாலானோர் தாம் போட்டியிடுவதையே விரும்புகின்றனர் என்றும் கூறியதாக ஒரு தகவல் கூறுகிறது.

எனினும், இந்தச் சந்திப்பில் எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என்று, கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ஓ.5)

## முன்னாள் அரச தலைவர் செயலணி அதிகாரி விடுதலை!

அரச நிதி மோசடி தொடர்பாக குற்றஞ் சாட்டப்பட்ட முன்னாள் அரச தலைவர் செயலணியின் தலைமை அதிகாரி காமினி செனரத் உட்பட மூவரை நிரந்தர நீதாய மேல் நீதிமன்றம் விடுதலை செய்துள்ளது.

சம்பத் அபேகோன், சம்பத் விஜேரத்ன மற்றும் சம்பா ஜானகி ராஜரத்ன உள்ளிட்ட மூவரடங்கியநீதிபதிகள் குழாம் முன்னிலையில் நேற்று இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது இந்தக் கட்டளை பிறப்பிக்கப்பட்டது.

பிரதிவாதிகளுக்கு எதிராக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக சரியான முறையில் சாட்சிகள் இல்லாத காரணத்தால் அவர்கள் விடுதலை செய்யப்படுகின்றனர் என்று நீதிபதிகள் தீர்ப்பு வழங்கினர்.

லிட்ரோ வாயு நிறுவனத்துக்குச் சொந்தமான 500 மில்லியன் ரூபாவுக்கும் அதிக பணத்தை முறையற்ற விதத்தில் பயன் படுத்தியமை உட்பட 24 குற்றச்சாட்டுக்களின் கீழ் முன்னாள் அரச தலைவர்செயலணியின்பிரதானிகாமினி செனரத், நீல் பண்டார ஹப்புஹின்ன, லசந்த பண்டார, பியதாஸ குடாபாலகே உள்ளிட்ட பிரதிவாதிகளுக்குஎதிராகஇந்தவழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. (எ)

## சஜின்வாஸ்க்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல்

கொழும்பு, ஓக.9

440 மில்லியன் ரூபாவை முறையற்ற விதத்தில் பெற்றுக்கொண்டுள்ளார் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சஜின்வாஸ் குணவர்த்தனவுக்கு எதிராகக் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்தக் குற்றப்பத்திரிகை நேற்று கொழும்பு நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. சஜின்வாஸ் குணவர்த்தன நாடாளுமன்ற உறுப்பினராக 5 ஆண்டுகள் பதவி வகித்தபோது இந்த முறைகேட்டில் ஈடுபட்டுள்ளார் என்று கூறப்படுகின்றது.

அதேவேளை, சஜின்வாஸ் குணவர்த்தன நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்படுவதற்கு முன்னதாக தனக்குச் சொந்தமான நிறுவனங்களின் நிதியைத் தனது கணக்குகளுக்கு மாற்றினார் என்ற குற்றச்சாட்டும் அவர் மீது முன்வைக்கப்பட்டு வருகின்றது. (எ)



# செல்வ வளம் பெருகும் வரலட்சுமி விரதம்

இராமபுரத்தூர் நிஷாந்தன்

ஆதியும் அந்தம் இல்லா அரும்பெரும் மதமாக மேன்மையுறும் இந்து மதம் தனின் வழிபாட்டு முறைமைகளில் இந்து மக்களால் தவறாது கடைப்பிடிக்கப்படுபவை விரதங்கள் ஆகும். விரதம் என்பதுஎம்மனதைஒருநிலைப்படுத்தி இறைவன் திருவருளைபெற்றுக் கொள்வதற்குநாம்இயற்றும்ஒரு வழிபாட்டுமுறையாகும். இத்தகு விரதங்கள் பல எம் இந்து மதத்தவரால்கடைப்பிடிக்கப்படுகின்றது. ஒவ்வொருகடவுளுக்குஎன்றுபல விரதங்கள்குறிக்கப்பட்டுள்ளன. ஆனால் அவை அனைத்தும் இறைவன்திருவருளைபெறுதல் எனும் தத்துவத்தையே உணர்த்தி நிற்கின்றன. இத்தகு விரதங்களில் உயர்வானதும், சிறப்புக்குரியதுமானவிரதம் வரலட்சுமிவிரதமாகும். இந்தவிதரதம்ஆவணி மாதத்தில் வரும் பௌர்ணமிக்கு முதல் வெள்ளிக்கி ழமை கடைப் பிடிக்கப்படுகிறது.

மேலும் இந்த விரதம் செல்வபோகங்களைப் பெறுவதற்கும், புத்திர பாக்கியம் உண்டாகுவதற்கும், கணவனுக்கு நீண்ட ஆயுள் கிடைக்கப்பெறுவதற்கும், திருமணம் ஆன பெண்களின்மாங்கல்யம் நிலைத்திருப்பதற்கும், வாழ்வில் மகிழ்ச்சி பொங்குவதற்கும் என இந்த விரதம் கடைப்பிடிக்கப்படுகிறது.

### மகாலட்சுமியின் தோற்றம்

ஒருமுறைஅமிர்தம்வேண்டிதேவர்களும், அசுரர்களும் பாற்கடல் கடைந்தனர். அப்போது அந்த பாற்கடலில் இருந்து பலதெய்வீகமான வஸ்துக்கள் வெளிவந்தன.

அவற்றைத் தொடர்ந்து அழகெல்லாம் ஒருங்கே பெற்ற மகாலட்சுமி பாற்கடலில் இருந்துதோன்றியவரேமகாலட்சுமிதேவி. அவ்வாறுதோன்றிமகாலட்சுமிக்குத்தேவர்களின் தலைவன் இரத்தினமயமான பீடம் ஒன்றை அளித்தான். மேலும், அங்கிருந்த தேவர்கள், முனிவர்கள் எல்லோரும் மகாலட்சுமியைப் போற்றித் துதித்தனர். தன் திருக்கரத்தில் செல்வம் பொழியும் கலசத்துடன் தோன்றியவர் திருமகள்.

அக்கணமே காத்தல் கடவுளாம் விஷ்ணுவைத் தன் கணவான தேர்ந்தெடுத்து அவருக்கே மணமாலை சூடி அந் நாராயணன் இதயக்கமலத்தில் அமர்ந்து கொண்டாள். பாற்கடலிடைப் பிறந்தாள் அது பயந்த நல் அமுதத்தின் பான்மை கொண்டாள் ஏற்குமோர் தாமரைப்பூ அதில் இணை மலர்த் திருவடி இசைந்திருப்பாள்.

நாற்க் கரம் தானுடையாள்அந்த
நான்கினும் பல வகைத் திருவுடையாள்
வேற் கரு விழியுடையாள் செய்ய
மேனியள் பசுமையை விரும்புபவள் என திருமகளாம்லட்சுமியின்பிறப்பைப்போற்றிப் பாடுகின்றார் மகாகவி பாரதியார்.

### வரலட்சுமி விரதத்தின் கதையாடல்

நிலவுலகில் பத்ரசரவஸ் எனும் மன்னன் மகதநாட்டைஆட்சிசெய்துவந்தான். அவன் மனைவிசுசந்திரா ஆவள். தான் மகாராணி என்பதாலும்செல்வமமதையாலும்மகாலட்சுமியை அவமதித்து வந்தாள். இதனால் காலப்போக்கில்அனைத்துசெல்வங்களையும் இழந்து துன்பத்தால் வருந்தினாள். இந்த நிலையில் அவள் மகள் சாருமதி. ஆவள் தெய்வ நம்பிக்கை கொண்டவள். மகாலட்சுமியின் கிருபையினால் எல்லா செல்வங்களும் பெற்று நல் துணைவனையும்பெற்றுமகிழ்ச்சியாகவாழ்ந்துவந்தாள். ஒரு முறை மகாலட்சுமி சாருமதியின் கனவில் தோன்றி வரலட்சுமி விரதம் கடைப்பிடிக்கும்வழிமுறையைஎடுத்துரைத்துஅதை கடைபிடிக்கும் படியும், உன் தாயிடம் இது பற்றிக் கூறும்படியும்சொல்லிமறைத்தாள். சாருமதியும் தாயிடம் சென்று வரலட்சுமி விரதத்தைகடைப்பிடிக்கும்வழிமுறையைக் கூறினாள். அதன்படி சுசந்திராவும் தன் தவறைஉணர்ந்துவரலட்சுமிவிரதம்கடைப்பிடித்தாள். இதன்காரணமாக இழந்த செல்வங்கள்எல்லாம்மீண்டும்கிடைக்கப்பெற்றால் என்கின்றது புராணக் கதையாடல்.

### அருள் புரியும் அஷ்டலட்சுமிகள்

மகாலட்சுமி அஷ்டலட்சுமிகளாக வடிவம் தாங்கி திருவருள் பாலிக்கின்றாள். அத்தகு அஷ்டலட்சுமிகளைபின்வருமாறுகண்ணுறலாம். ஆதிலட்சுமி, விஜயலட்சுமி, தைரியலட்சுமி, கஜலட்சுமி, சந்தானலட்சுமி, வித்யாலட்சுமி, தனலட்சுமி, தான்ய லட்சுமி ஆகியோரே அவர்களாவர். இவ் அஷ்டலட்சுமிகளைவழிபட்டால்நலன்கள்யாவும்பெற்றிட முடியும். இத்தகு அஷ்டலட்சுமிகளின் அருளும், கிருபையும் எம் அனைவருக்கும் கிடைக்கப்பெறவேண்டும்எனில்வரலட்சுமி விரதத்தை கடைபிடித்தால்போதும்.

### வரலட்சுமி விரதம் கடைப்பிடிக்கும் முறை

இந்தவிரதம்அதிகளவில்விஷ்ணுஆலயங்களில்நடைபெறும். மேலும்அம்பாள்ஆலயங்களிலும்கடைப்பிடிக்கப்படும். ஆலயங்களில் திருவிளக்குப் பூஜையுடன் விரதத்தினை உரிய நியதிப்படி அனுஷ்டிக்கலாம். எனினும் ஆலயங்களுக்குச் சென்று விரதத்தை அனுஷ்டிக்க முடியாதவர்கள் தம் வீடுகளில்உரியமுறைப்படிஇவ்விரதத்தை கடைப்பிடிக்க முடியும்.


அதாவது இந் நாளில் வீட்டினை தூய்மைப் படுத்தி வீட்டு வாசலில் கோலம் ஈட்டு சுவாமி அறையில் கும்பம் வைத்து, பூக்கள், பூமாலைகள் சாற்றி நைவேத்தியங்களை படையல் செய்து, திரு விளக்கு ஏற்றி குங்கும அர்ச்சனைசெய்வதுடன், மகாலட்சுமிஅஷ்டோத்திரம், மகாலட்சுமி பாடல்களை உச்சரித்து நோன்புக்காப்பைக்கையில்அணிந்து விரத்தைநிறைவுசெய்யலாம்.

### வரலட்சுமி தேவியின் திருவருள்

ஆகவே இத்தகையசிறப்புக்கள்பலவற்றை கொண்டு விளங்குகின்ற இந்த வரலட்சுமி விரதத்தை திருமணமான பெண்கள், கன்னிப்பெண்கள்மற்றும்விரதம்கடைப்பிடிக்க விரும்புகின்றவர்கள் என அனைவரும் உரிய முறைப்படி கடைப்பிடித்து பாற்கடல் அவதரித்துவிஷ்ணுவின்இதயக்கமலத்தில் வீற்றிருக்கின்ற ஸ்ரீ தேவியாம் மகாலட்சுமியின் திருவருள் துணை பெற்று சகல நலன்களையும் பெற்று இந்த வையகத்தில் இன்புற்று வாழ்வோமாக.

# சாதனை நாயகன் 'ஆழிக்குமரன்'

## அவரது பெயர் தாங்கி வல்வையில் நீச்சல் தடாகம் இன்று திறப்பு



'ஆழிக்குமரன்' என்றழைக்கப்படும் வீ.எஸ்.குமார் ஆனந்தன் பல கின்னஸ் சாதனைகளுக்குச் சொந்தக்காரர். ஈடிணையற்றஉலகசாதனைகளைநிலைநாட்டிய "ஆழிக்குமரன்"ஆனந்தன்அவ்வாறானமேலதிகசாதனைகளில்பேராவல்கொண்டவராவார். யாழ்ப்பாணம், வல்வெட்டித்துறையில் 1943 ஆம் ஆண்டு மே மாதம் 25ஆம் திகதி பிறந்த அவர் இளமைப் பருவத்தில் இருந்தே கல்வி, விளையாட்டு என்பவற்றில் திறமைசாலியாக இருந்தார். கடினமானவிளையாட்டுக்கள், உடற்பயிற்சிகள் மீதிருந்த அவருடைய ஈடுபாடு மற்றும் ஆர்வத்தின் காரமணாக அவரால் 7 கின்னஸ்சாதனைகளையும், கின்னஸ்புத்தகத்தில் பதியப்படாத 7 சாதனைகளையும் நிலைநாட்ட முடிந்தது. 1983ஆம்ஆண்டுவரைஅங்கீகரிக்கப்பட்டு கின்னஸ் உலகசாதனைப் புத்தகத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள ஏழு உலக சாதனைகளையும், அங்கீகரிக்கப்படாத ஏழு ஏனைய சாதனைகளையும் ஆனந்தன் நிலைநாட்டினார். பதின்நான்குசாதனைகளில்நான்குசாதனைகள்ஒரேநாளில்நிகழ்த்தப்பட்டமைஎன்பது குறிப்பிடத்தக்கது.

### கின்னஸ் சாதனைகள்

பாக்கு நீரிணையினூடாக தலைமன்னாரிலிருந்து தென் இந்தியாவின் தனுஷ்கோடிக்கும் மீண்டும் அங்கிருந்து தலைமன்னாருக்கும் நீந்தியஒரேநபர்இவராவார். 51மணித்தியாலங்கள் 35 நிமிடங்கள் அவர் தொடர்ச்சியாக நீந்தியிருந்தார். 1975ஆம் ஆண்டு சித்திரை மாதம் 18ஆம் திகதி வெள்ளிக்கிழமை தொடக்கம் சித்திரை மாதம் 20ஆம் திகதி வரை 40 மைல்கள் நீந்தி அவர் சாதனை படைத்திருந்தார்.

கொழும்பு விகாரமாதேவி பூங்காவில் இடைவிடாது தொடர்ச்சியாக உந்துருளி ஓட்டிச் சாதனைபடைத்திருந்தார். 187மணித்தியாலங்கள்28நிமிடங்கள்தொடர்ச்சியாகஅவர்உந்துருளி ஓடிய தூரம் 1487 மைல்களாகும். 1979ஆம்ஆண்டுவைகாசிமாதம்2ஆம்திகதி புதன்கிழமைதொடக்கம்வைகாசிமாதம்10ஆம் திகதிவரைஉந்துருளிஓடிஅவர்இந்தச்சாதனையைப் படைத்திருந்தார்.

கொழும்புவிகாரமாதேவி பூங்காவில்பந்தைக் குத்துதலில் (போல் பஞ்சிங்) சாதனை படைத்தார். தொடர்ச்சியாக 136 மணித்தியாலங்கள் 28 நிமிடங்கள் அவர் அதில் ஈடுபட்டனர். 1979ஆம்ஆண்டுமார்கழிமாதம்26ஆம்திகதி புதன் கிழமை தொடக்கம் 1980ம் ஆண்டு தை மாதம் 1ஆம் திகதி செவ்வாய்கிழமை வரையில் அவர் இந்தச் சாதனையை நிகழ்த்தினார்.

கொழும்பு வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் உட்கார்ந்து எழுதலில் (சிற் அப்) சாதனை படைத்தார். அவர் 2நிமிடங்களில்165தடவைகள்உட்கார்ந்து எழுந்து சாதனை படைத்திருந்தார். இந்தச் சாதனை 1980ஆம் ஆண்டு வைகாசி மாதம் 15ஆம்திகதிவியாழக்கிழமைநிகழ்த்தப்பட்டது.

கொழும்புவை.எம்.சி.ஏ. மண்டபத்தில்தொடர்ச்சியாக ஒற்றைக்காலில் சம நிலையில் நின்று சாதனை படைத்தார். 33 மணித்தியாலங்கள் அவர்தொடர்ச்சியாகஒற்றைக்காலில்சமநிலையில் நின்றார். 1980ஆம் ஆண்டு வைகாசி மாதம்15ஆம்திகதிவியாழக்கிழமைதொடக்கம் வைகாசி மாதம் 17ஆம் திகதிவரையில் இந்தச் சாதனை நிகழ்த்தப்பட்டது.

கொழும்பு காலி முகத்திடலில் காலை உயர்த்தி உயர்உதைத்தலில்ஈடுபட்டுச்(கைற்கிற்)சாதனை படைத்தார். 6 மணித்தியாலங்கள் 51நிமிடங்களில் 9 ஆயிரத்து 100 உதைகள் உதைத்துச் சாதனை நிகழ்த்தினார். 1980ஆம் ஆண்டு மார்கழிமதம்31ஆம்திகதிபுதன்கிழமைதொடக்கம்1981ஆம்ஆண்டுதைமாதம்முதலாம்திகதி வியாழக்கிழமை வரை இந்தச் சாதனை நிகழ்த்தப்பட்டது.

தென் இந்தியாவில் சென்னையில் அமைந்துள்ளஅண்ணாநீச்சல்தடாகத்தில்கைகளால், கால்களால் தவளை போல் நீரை உதைத்துக் கொண்டிருந்துசாதனைபடைத்தார். 80மணித்தியாலங்கள் 33 வினாடிகள் தொடர்ச்சியாக இந்தச் சாதனையைப் படைத்தார். 1981ஆம் ஆண்டு ஆடி மாதம் 27ஆம் திகதி திங்கள் கிழமை தொடக்கம் 1981ஆம் ஆண்டு ஆவணி மாதம்முதலாம்திகதிசனிக்கிழமைவரைஅவர் இந்தச்சாதனையை நிகழ்த்தினார்.

### பதியப்படாத சாதனைகள்

வல்வெட்டித்துறையில் இருந்து இந்தியாவில் உள்ள கோடிக் கரைக்கு பாக்கு நீரிணையில் நீந்திச் சென்றமை. 42 மணித்தியாலங்கள் அவர் நீந்தியிருந்தார். இந்தச் சாதனையை 1963ஆம் ஆண்டு பங்குனிமாதம் 20ஆம் திகதி புதன்கிழமை தொடக்கம் 22ஆம் திகதி வெள்ளிக்கிழமைவரைநிகழ்த்தினார். அவர்30 மைல்கள்நீந்தியிருந்தார். கொழும்புகாலிமுகத்திடலில் நிறுத்தாமல் ருவிஸ்ற் நடனமாடிச் சாதனை படைத்தார். 128 மணித்தியாலங்கள் 16 நிமிடங்கள் தொடர்ச்சியாக நடனமாடினார். இந்தச்சாதனையை அவர் 1978ஆம் ஆண்டு மார்கழி மாதம் 27ஆம் திகதி புதன் கிழமை தொடக்கம்1979ஆம்ஆண்டுதைமாதம்2ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை நிகழ்த்தினார்.

கொழும்பு வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் தமது உடல்எடைக்குச்சமனான130 இறாத்தல்எடையுள்ள இரும்பு வட்டங்களைத் தூக்கி கொண்டு, வேகமாக குந்தி எழும்பிச் சாதனை படைத்தார். 4நிமிடங்கள்24வினாடிகளில்195தடவைகள் குந்தி எழுந்து சாதனை படைத்தார். 1980ஆம் ஆண்டு வைகாசி மாதம் 15ஆம் திகதி வியாழக்கிழமைஅவர் இந்தச்சாதனையைப்படைத்தார்.

கொழும்புவை.எம்.சி.ஏ. மண்டபத்தில் 5 சுருள்கள்கொண்ட 80 இறாத்தல்நிறையுடையமார்பு விரிவாக்கியை இழுத்துச் சாதனை படைத்தார். 59 வினாடிகளில் 39 தடவைகள் இழுத்துச் சாதனை படைத்தார். 1980ஆம் ஆண்டு வைகாசி மாதம் 15ஆம் திகதி வியாழக்கிழமை அவர் இதைச் சாதித்துக் காட்டினார்.

தென் இந்தியாவில் உள்ள சென்னையில் நிற்காமல் தொடர்ச்சியாக நடத்தலில் ஈடுபட்டுச் சாதனை படைத்தார். 149 மணித்தியாலங்கள் தொடர்ச்சியாகநடந்து296மைல்களைக்கடந்தார். இந்தச் சாதனை 1981ஆம் ஆண்டு ஆவணி மாதம் முதலாம் திகதி சனிக்கிழமை தொடக்கம் ஆவணி மாதம் 7ஆம் திகதி வெள்ளிக்கிழமைவரை நிகழ்த்தப்பட்டது.

யாழ்ப்பாணம் திறந்த வெளி அரங்கில் 22 அவுன்ஸ் எடையுள்ள பிலியட்ஸ் தடியை, ஒரு கையால் மேலும் கீழுமாக உயர்த்திச் சாதனை படைத்தார். 3 மணித்தியாலங்கள் 59 நிமிடங்களில் 2 ஆயிரத்து 250 தடவைகள் அவர் அவ்வாறுசெய்தார். இந்தச்சாதனை1982ஆம் ஆண்டுமார்கழிமாதம்31ஆம்திகதிதொடக்கம் 1983ஆம் ஆண்டு தை மாதம் முதலாம் திகதி வரை நிகழ்த்தப்பட்டது.

1980ஆம்ஆண்டுவைகாசிமாதம்15ஆம்திகதி வியாழக்கிழமைஅவரால்நான்குசாதனைகள் நிகழ்த்தப்பட்டன. 5 மணித்தியாலங்களில் அவைநிறைவேற்றப்பட்டன. ஈடிணையற்றஉலக சாதனைகளை நிலைநாட்டிய "ஆழிக் குமரன்" ஆனந்தன் அவ்வாறான மேலதிக சாதனைகளில் போராவல் கொண்டிருந்தார். ஆங்கிலக் கால்வாயை(இங்கிலாந்துக்கும்பிரான்ஸுக்கும் இடையே) நீதிக் கடக்க முயன்றபோதும் கடும் குளிரானநீரில்சிக்கி1984ஆம்ஆண்டு8ஆம் மாதம் 6ஆம் திகதி காலமானார். அது தமிழர்களுக்கு பேரிழப்பு என்றே கூற வேண்டும்.


### சாதனை நாயகனுக்கு மதிப்பு


பல சாதனைகளைப் படைத்த ஆழிக்குமரன் நினைவாகவல்வெட்டித்துறையில்பன்னாட்டுத் தரத்தில் நீச்சல் தடாகம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அந்தநீச்சல்தடாகம்இன்றுவெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்குத் திறக்கப்படவுள்ளது. நிதிஅமைச்சர்மங்களசமரவீர அந்தத் தடாகத்தைத் திறந்து வைக்கவுள்ளார்.

தொலைத்தொடர்பு வெளிநாட்டு வேலைவாய்ப்புவிளையாட்டுத்துறைஅமைச்சர்ஹரீன் பெர்னாண்டோ, யாழ்ப்பாண மாவட்ட நடாளுமன்றஉறுப்பினர்களானமாவைசோ.சேனாதிராசா, எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

சிறந்த திறமைகளைக் கொண்ட அமைதியான சூழலில்நல்லிணக்கத்துக்கு உயிரூட்டி, விளையாட்டில் ஈடுபடும் கிராமிய விளையாட்டு வீரர்களுக்குப் பன்னாட்டு மட்டத்தில் விளையாட்டு வசதிகளை வழங்குதவதை நோக்கமாகக் கொண்டு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் வழிகாட்டலில் நிதி அமைச்சால்10கோடிரூபாநிதிஒதுக்கீட்டில்இந்தநீச்சல் தடாகம் அமைக்கப்பட்டுள்ளது.

# வெனிசுலாவுக்கு உதவுவதை நிறுத்துக சீனாவுக்கு அமெரிக்கா எச்சரிக்கை





பீஜிங், ஓக.9

அமெரிக்காவில் உள்ள வெனிசுலா அரசின் சகல சொத்துக்களையும், நிதிகளையும் முடக்குவதற்கான கட்டளையை அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் பிறப்பித்தார். இந்த நிலையில் கடந்த திங்கட் கிழமை பேருவில் இடம் பெற்ற மாநாடு ஒன்றில் பன்னாட்டு ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த அமெரிக்காவின்பாதுகாப்புஆலோசகர்ஜோன் போல்டன் சீனாவும், ரஷ்யாவும் வெனிசுலா அதிபர் நிக்கோலஸ் மதுரோவுக்கு வழங்கும் சகல உதவிகளையும், நிவாரணங்களையும் உடனடியாக நிறுத்த வேண்டும் என எச்சரித்தார். ஜோன் போல்டனின் இந்தக் கருத்து, பன்னாட்டு சட்டதிட்டங்களை, விதி முறைகளை மீறும் செயல் என்று சீனாவின் அயலுறவுப் பேச்சாளர் ஹூவா சுனியிங் சீனாவின் தேசிய செய்தி ஊடகத்தின் வாயிலாகத் தெரிவித்தார்.

இந்த நிலையில் சீன அதிபா ஜின்பிங் இது குறித்துத் தெரிவிக்கும்போது, வெனிசுலாவின் அரசியல் சாதாரண நிலைக்கு த் திரும்புவதற்குத்தான்உதவ விரும்புவதாகக் குறிப்பிட்டார். சீனாவுக்கும், அமெரிக்காவுக்கும் இடையிலான வர்த்தகப் போர் உச்சக்கட்டத்தைஅடைந்துள்ளநிலையில் வெனிசுலா விவகாரத்தில் முரண்போக்கு தோன்றுவது குறிப்பிடத்தக்கது.

## அமெரிக்காவில் பயங்கரம் கத்திக்குத்தால் 4பேர் சாவு

நியூயோர்க்,ஓக.9


அமெரிக்காவில் இனந்தெரியாத நபர் ஒருவர் நடத்திய கத்திக்குத்துக்கு இலக்காகி 4 பேர் சாவடைந்தனர். 2 பேர் படுகாயமடைந்தனர். அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் மாகாணத்தின் தென் கிழக்குப் பகுதியில் கார்டன் கிரோவ் என்ற நகரத்திலுள்ள ஒரு குடியிருப்புப் பகுதியிலேயே இந்தச்சம்பவம் நடந்தது. அந்தப் பகுதிக்குள் நுழைந்த நபர் தான், மறைத்து வைத்திருந்த கத்தியால் அங்கிருந்தஇரண்டுபேர்மீதுசரமாரியாகக்குத்தினார். பின்னர், அந்தப் பகுதியில் இருந்து தப்பிச் சென்ற அந்த நபர், அருகில் இருந்த உணவகம்மற்றும்எரிபொருள்நிரப்புநிலையத்தில்இருந்தபொது மக்கள் மீது கத்தியால் குத்தினார். இந்தத் தாக்குதலுக்கான காரணம்குறித்து விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

*காஷ்மீர் விவகாரம்*

## பொறுமையைக் கடைப்பிடிக்குமாறு ஐக்கிய நாடுகள் சபை அறிவுரை

நியூயோர்க்,ஓக.9

இந்தியாவின்கட்டுப்பாட்டிலுள்ளகாஷ்மீருக்கான அரசமைப்பில் இந்திய மாற்றம் செய்த விவகாரத்தில், பாகிஸ்தான் இந்தியா ஆகிய இரண்டு தரப்பினரும் பொறுமையைக் கடைபிடிக்க வேண்டும் என்று ஐ.நா. அறிவுறுத்தியது. ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலர் அன்ரனியோ குட்டரெஸின் செய்தித்தொடர்பாளர் ஸ்ரீபன் துஜாரிக்கே இவ்வாறு தெரிவித்தார். ஐ.நா. பொதுச்செயலர், காஷ்மீரில் நிலவும் பதற்றமான சூழ்நிலையைக் கவலையுடன் பார்த்து வருகிறார். அனைத்துத் தரப்பினரும் பொறுமையைக் கடைப்பிடிக்குமாறு அறிவுறுத்தி உள்ளார். இரண்டு நாடுகளும் கேட்டுக்கொண்டால் தான் அவர் இணக்கத்தை ஏற்படுத்துவதற்கு முன்வருவார் என்று அவர் மேலும் கூறினார்.



கடந்த இரண்டு வாரங்களில் நான்காவது ஏவுகணைச் சோதனையைக் கடந்த செவ்வாய்க்கிழமையன்று வடகொரியா மேற்கொண்டது. தென்கொரியா மற்றும் அமெரிக்கா இடையிலான கூட்டு இராணுவப் பயிற்சிக்கு எச்சரிக்கை விடுக்கும் வகையிலேயே இந்தச் சோதனையை நடத்தியதாக வடகொரியா தெரிவித்தது. நான்காவது ஏவுகணை ஏவு தளத்திலிருந்து ஏவப்பட்ட காட்சி இது. பன்னாட்டு ஊடகமான ரெய்டார்ஸ் இதை வெளியிட்டது.

## இன்றைய நாள்

**மேடம்:** மனதில் இருந்த குழப்பம் நீங்கும். தொழில், வியாபாரம் வளர்ச்சிக்காக கூடுதல் பணி மேற்கொள்வீர்கள். பணவரவு திருப்தியளிக்கும். பெண்கள் வீட்டுக்குத் தேவையான பொருள்கள் வாங்குவர்.

**இடபம்:** மாறுபட்ட கருத்து கொண்டவரை சந்திக்க நேரிடலாம். பொறுமை காப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் இலாபம் சுமாராக இருக்கும். வாகன போக்குவரத்தில் மிதவேகம் கடைபிடிக்கவும்.

**மிதுனம்:** பெற்றோரின் அறிவுரையை ஏற்பது நல்லது. பணியில் பொறுப்பு அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் இருக்கிற அனுகூலம் பாதுகாப்பது நல்லது.

**கடகம்:** பெருந்தன்மை மிக்கவராக விளங்குவீர்கள். நற்செயலில் ஈடுபட்டு சமூகத்தில் வரவேற்பு பெறுவீர்கள். தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர்.

**சிம்மம்:** செயலில் திறமை வெளிப்படும். அலைச்சல் தந்த வேலை ஆதாயம் தருவதாக மாறும். தொழில் வியாபா ரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி இலக்கு நிறைவேறும். வருமானம்

**கன்னி:** மாறுபட்ட சூழ்நிலையை சந்திக்க நேரிடலாம். நிதானத்தை கடைபிடிப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் சுமாரான லாபம் கிடைக்கும். இஷ்ட தெய்வ வழிபாடு மன அமைதிக்கு வழி வகுக்கும்

**துலாம்:** செயல் நிறைவேற தாமதம் ஆகலாம். சிறிய பணி கூட சுமையாக இருக்கலாம். தொழில், வியாபாரம் சிறக்க விடாமுயற்சி அவசியம். லாபம் சுமாராக இருக்கும். பெண்கள் நகை இரவல் கொடுக்க வாங்க வேண்டாம்.

**விருச்சிகம்:** செயல்களில் அதிக நேர்த்தி நிறைந்திருக்கும். அரசு தொடர்பான உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி இலக்கு நிறைவேறும்.

**தனுசு:** சிலர் சுயநலத்துடன் உங்களிடம் பழகலாம். விழிப்புடன் விலகுவது நல்லது. தொழில்வியாபாரத்தில்உழைப்பிற்கேற்ப ஆதாயம்கிடைக்கும். பெண்கள் ஆடம்பர எண்ணத்துடன் செயற்படுவர்.

**மகரம்:** இஷ்ட தெய்வ அருளால் நன்மை உருவாகும். அன்றாட வாழ்வில் புத்துணர்வுடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி வியப்பூட்டும் விதத்தில் இருக்கும்.

**கும்பம்:** திட்டமிட்ட செயல் நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் உள்ள தடைகளை முறியடிப்பீர்கள். லாபம் அதிகரிக்கும். உடல்நலனில் அக்கறை தேவை.

**மீனம்:** புதிய முயற்சி முழு அளவில் வெற்றியளிக்கும். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி உண்டாகும். ஆதாயம் கூடும். குடும்பத் தேவைகளை தாராள செலவில் நிறை வேற்றுவீர்கள்.

# குழந்தையுடன் சென்ற பெண் உறுப்பினர் நாடாளுமன்றிலிருந்து வெளியேற்றம்

நைரோபி, ஓக. 9

தனது ஐந்து மாதக் குழந்தையை நாடாளுமன்றத்துக்குக் கொண்டு சென்ற ஜுலைக்கா ஹசன் எனும் பெண் உறுப்பினர் நாடாளுமன்றில் எழுந்த எதிர்ப்புக் காரணமாக நாடாளுமன்றில் இருந்து வெளியேறினார்.



இது குறித்து மேலும் தெரியவருவதாவது:


ஜுலைக்காஹசன்தனதுகுழந்தையுடன் நாடாளுமன்றத்துக்குள் நுழைந்ததும் அங்குள்ள ஏனைய உறுப்பினர்கள் எதிர்ப்புத் தெரிவித்ததுடன், இவரது செயல் வெட்கக்கேடானது என்று விமர்சிக்கத் தொடங்கினர். அதையடுத்துப் பேசிய சபாநாயகர், குழந்தையுடன் சபையிலிருந்து வெளியேறுமாறு ஜுலைக்காஹசனுக்கு உத்தரவிட்டார். அத்தோடு குழந்தையில்லாமல் அவர் சபைக்குத்திரும்பவும்வரலாம்என்றும் சபாநாயகர்தெரிவித்தார். தனக்குவேறு வழியில்லாத சூழலிலேயே குழந்தையுடன்நாடாளுமன்றுக்குச்சமுகமளிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டதாகவும், நாடாளுமன்ற வளாகத்தில் குழந்தைப் பராமரிப்புப்பகுதிஇருந்திருந்தால், தனது குழந்தையைச்சபைக்கு அழைத்துவந்திருக்கமாட்டேன்என்றும்-நாடாளுமன்றத்துக்குப் பெண் உறுப்பினர்கள் வர வேண்டுமென்றால் அவர்களுக்குத் தேவையானஅடிப்படைவசதிகள்வழங்கப்படவேண்டும்என்றும் - இதுகுறித்து ஜுலைக்கா தெரிவித்தார். நாட்டிலுள்ள அனைத்து நிறுவனங்களும் பெண் ஊழியர்கள் தங்களது குழந்தை களுக்குத் தாய்ப்பாலூட்டுவதற்குச் சிறப்பு அறைகளைஅமைக்கவேண்டுமென்று 2017ஆம்ஆண்டுசட்டம்நிறைவேற்றப்பட்டு, கென்ய நாடாளுமன்றத்திலேயே இந்தச் சம்பவம் நடந்தேறியுள்ளது. 2018ஆம் ஆண்டு நியூயோர்க்கில் நடந்தஐக்கியநாடுகள்சபையின்பொதுக்கூட்டத்தில் நியூசிலாந்தின் தலைமை அமைச்சர் ஜெசிந்தா தனது மூன்று மாதக்குழந்தையையுடன்பங்கேற்றார் என்பது குறிப்பிடத்தக்கது

# வெற்றியைத்தடுக்கத்திட்டம்

## கூகுள் மீது ட்ரம்ப் குற்றச்சாட்டு மறுத்துப் பதிலளித்தது கூகுள்

நியூயோர்க், ஓக. 9

எதிர்வரும் அரச தலைவர் தேர்தலில்போட்டியிடத்தயாராகிவருகின்றதனதுவெற்றியைத் தடுப்பதற்கு 'கூகுள்' திட்டமிட்டிருப்பதாகஅமெரிக்காவின் அரச தலைவர் ட்ரம்ப் குற்றஞ் சாட்டினார். கூகுள்நிறுவனத்தில்இருந்து கடந்த ஆண்டு பணிநீக்கம் செய்யப்பட்ட கெவின் கொர்னெகீ என்ற பொறியியலாளர்தொலைக்காட்சிக்குஒன்றுக்கு அளித்த செவ்வியில், 2016ஆம் ஆண்டு அமெரிக்க அதிபர் தேர்தலின் போதுகூகுள்நிறுவனம்ட்ரம்புக்கு எதிரான நிலைப்பாட்டுடன்செயற்பட்டது. இதுகுறித்துக் கேள்வி எழுப்பியதாலேயே நான் பணி நீக்கம் செய்யப்பட்டேன். அடுத்த ஆண்டு நடைபெறும் ஜனாதிபதி தேர்தலிலும் ட்ரம்பின் பரப்புரையைப் பலவீனப்படுத்துவதற்கு கூகுள் திட்டமிட்டுஇருக்கிறது எனக்கூறினார். குறித்த செவ்வியைத் தனது கீச்சகப் பக்கத்தில் பகிர்ந்து, இது மிகவும் சட்டவிரோதமானது.



நாங்கள் கூகுளை உன்னிப்பாகக்கவனித்துவருகிறோம் எனக் குறிப்பிட்டார் ட்ரம்ப். கடந்தமார்ச்மாதம்வெள்ளை மாளிகைக்கு வந்த சுந்தர் பிச்சை, என்னை மிகவும் பிடிக்கும்என்றுகூறியதோடு, எனது நிர்வாகத்தைப் புகழ்ந்து பேசினார். அமெரிக்க இராணுவத்துக்குக் கடமைப்பட்டிருப்பதாகவும், சீனஇராணுவத்துக்குஉதவுவதாகக்கூறுவதுபொய்என்றும்அவர்விளக்கமளித்தார். அத்துடன்2016ஆம்ஆண்டு நடந்த தேர்தலில் ஹிலாரிக்கு உதவவில்லை என்றும், அடுத்தஆண்டுநடைபெறும்தேர்தலைமுறியடிப்பதற்குத் திட்டமிடவில்லை என்றும் உறுதியளித்தார். கெவின் கொர்னெகீயை சந்திக்கும் வரையில் அதுதான் உண்மை என்று நினைத்திருந்தேன். அவர்கூறித்தான் கடந்த தேர்தலில் ஹிலாரி குறித்த எதிர்மறையான தகவல்களைப் பின் தள்ளிவிட்டு, என்னைபற்றியஎதிர்மறையான தகவல்களைக் கூகுள் முன்னிலைப்படுத்தியது தெரியவந்தது. இதேபோல் எதிர்வரும் தேர்தலிலும் எனது வெற்றியைத் தடுக்க கூகுள் திட்டமிட்டிருக்கிறது.

கூகுள் நிறுவனத்தின் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று ட்ரம்ப் மேலும் தெரிவித்தார்.

இந்தக் குற்றச்சாட்டுக்களை கூகுள் நிறுவனம் திட்டவட்டமாக மறுத்துள்ளது. இது தொடர்பாக அந்த நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில், எங்கள் நிறுவனம் ஒற்றைச்சார்புடனோ, அரசியல் சார்புடனோ செயற்படவில்லை என்பதை உறுதிப்படுத்துகிறோம். அதிருப்தி ஊழியர் கூறிய அனைத்துத் தகவல்களும் பொய்யானவை. பொறாமை மற்றும் பழிவாங்கும் நோக்கில் கூறப்பட்ட அடிப்படை ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்கள் என்று தெரிவித்தது.


# பேச்சுக்கள் விரைவில் ஆரம்பம்

## அமெரிக்கா தெரிவிப்பு

வோஷிங்டன், ஓக. 9

வடகொரியா அமெரிக்காவுக்கிடையிலான பேச்சுக்கள் விரைவில் ஆரம்பமாகும் என அமெரிக்க இராஜாங்கச்செயலர் மைக்பொம்பியேதெரிவித்தார். கடந்தபுதன்கிழமைஇடம் பெற்றசெய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார். அப்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

இன்னும் இரண்டொரு கிழமைகளில் நாங்கள் வடகொரியாவுடனான பேச்சுக்களை ஆரம்பிக்கவுள்ளோம். இந்தப் பேச்சுக்கள் விரைவில் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பதைப்பலமுறைஅமெரிக்கஅதிபர்டொனால்ட் ட்ரம்பிடம் வலியுறுத்தியுள்ளோம். இப்பொழுது எங்களுக்கு முன்னாள் உள்ள சவால் வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன், அமெரிக்கஅதிபர்டொனால்ட்ட்ரம்ப்ஆகியோருக்கு இடையில்சிங்கப்பூரில்நடந்த பேச்சில்விவாதிக்கப்பட்ட இரண்டு முக்கிய விடயங்கள் தொடர்பான பேச்சுக்களை முன்னெடுப்பது தான் என்றார். வடகொரியா - அமெரிக்கா



இடையிலான முரண்பாடுகள் தொடரும் நிலையில்இந்தக்கருத்துவெளியாகியிருப்பது குறிப்பிடத்தக்கது.

# தாய்வானில் நில நடுக்கம்

தாய்வானில்நேற்றுநில நடுக்கம்ஏற்பட்டது. இந்த நிலநடுக்கம்ரிக்டர் அளவில்6 ஆகப்பதிவாகியது. தாய்வனின் தலைநகர்தைபேமற்றும் வடகிழக்குப்பகுதிகளில் இந்த நிலநடுக்கம் உணரப்பட்டது. கிட்டத்தட்ட 2ஆயிரத்துக்கும் அதிகமான வீடுகள் இதனால் அதிர்ந்தன என்றுதெரிவிக்கப்படுகிறது. இந்த நிலநடுக்கம் காரணமாக ஏற்பட்ட பாதிப்புகள் குறித்த உடனடித் தகவல் ஏதும் வெளிவரவில்லை. 2016 ஆம் ஆண்டு தாய்வானின் தென்பகுதியில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் 100 பேர் சாவடைந்திருந்தமையும், 1999 ஆம் ஆண்டு 7.6 ரிக்டர் அளவில் ஏற்பட்ட நில நடுக்கத்தால் 2ஆயிரம் பேர்வரை சாவடைந்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# 8 ஆண்டுகளில் ஒரு லட்சம் பேர் கைது

## சிரியா குறித்து. ஐ. நா. கவலை

நியூயோர்க், ஓக. 9

சிரியாவில் கடந்த 8 ஆண்டுகளாக நடந்துவரும் உள்நாட்டுப்போர்காரணமாகக் கிட்டத்தட்ட ஒரு லட்சம் பேர்வரை கைதுசெய்யப்பட்டிருப்பதாகக் கவலைவெளியிட்டது ஐக்கிய நாடுகள்சபை. சிரியாவில்இதுவரை காணாமலாக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை கவலையளிப்பதாகவும் இதற்கான முழுப் பொறுப்பும் சிரிய அரசையே சாரும் என்றும் ஐ. நா மேலும் தெரிவித்தது. 2011ஆம் ஆண்டு முதல் அங்கு ஐ. நாவின் மனித உரிமை ஆணையகம் மற்றும் மனித உரிமை அமைப்புகள் பாதிக்கப்பட்ட மக்கள் குறித்து விசாரணை நடத்தி வருகின்றன. இதன் அடிப்படையிலேயே இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்டுள்ள அனைவரையும் விடுவிக்கவும், கைது செய்யப்பட்டவர்கள் குறித்தத் தகவலை அவர்களதுகுடும்பங்களுக்குவழங்குவதுஅவசியம் என்றும் ஐக்கிய நாடுகள் சபைவலியுறுத்தியுமுள்ளது.



**பின்னணி**

சிரியாவின் அரச தலைவர் ஆசாத்துக்கும், ஐ. எஸ். ஆயுததாரிகளுக்கும் இடையே கடந்தஆறுஆண்டுகளாகப் போர் நடக்கிறது. அரசுக்கு ரஷ்யாஆதரவுஅளிக்கிறது. ஆயுததாரிகளின்கட்டுப்பாட்டில்இருந்தபகுதிகள்அரசகூட்டுப்படைகளால் மீட்கப்பட்டுவிட்டன. சிரியாவின்வடகிழக்குப் பகுதியான இட்லிப் மாகாணம் ஆயுததாரிகளின் வசம் உள்ளது.

அதைமீட்பதற்குஅரசபடைகளும்ரஷ்யாவும் போரிட்டு வருகின்றன. இதில் பொதுமக்கள் அளவுகணக்கற்றுக்கொல்லப்படுவதாகவும், 4 லட்சம் மக்கள் இடம்பெயர்ந்துள்ளதாகவும் ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்தது. இதற்கு ஐ. நா. வின்தரப்பில்கண்டனமும்தெரிவிக்கப்பட்டது.

# இராணுவத் தளத்தில் குண்டுவெடிப்பு

## ரஷ்யாவில் சம்பவம்; இருவர் சாவு!

மொஸ்கோ, ஓக. 9

ரஷ்யாவின் வடக்குப் பகுதியில் உள்ள இராணுவத் தளத்தில் ஏவுகணைப் பரிசோதனையின் போது ஏற்பட்டவெடிவிபத்தில்இருவர்சாவடைந்தனர். கடந்தசிலநாள்களாகக் குறித்த இராணுவத் தளத்தில் ஏவுகணைகள், ஆயுத உபகரணங்கள் மற்றும்வெடிபொருள்கள்சோதனை நடத்தப்பட்டு வருகிறது. இதனால் அந்தப்பகுதியிலுள்ளஉள்ளமக்கள் வெளியேற்றப்பட்டிருந்தனர். இந்த நிலையிலேயே இந்த வெடி விபத்து ஏற்பட்டது. 7 பேர் காயங்களுக்கும் உள்ளாகினர்.



## தமிழ்...

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் எவர்? என்ற கேள்விக்கு விரைவில் பதில் தெரியவரும். மூவின மக்களையும் நாட்டையும் பாதுகாக்கக்கூடிய ஒருவரே அரச தலைவர் வேட்பாளராகக் களமிறங்குவார்.

அரச தலைவர் வேட்பாளர் அறிவிக்கப்பட்ட பின்னர் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியுடன் கைகோர்க்க தமிழ், முஸ்லிம் அரசியல்வாதிகள் பலர் தயாராகவுள்ளனர். அவர்களுடன் எமது சக உறுப்பினர்கள் பேச்சுக்களை நடத்தி வருகின்றனர். ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் வேட்பாளராக எவர் களமிறங்கினாலும் அது எமக்குச் சவால் அல்ல.

சிறுபான்மை இன மக்களும் எமக்கே ஆதரவு வழங்குவார்கள் என்ற நம்பிக்கை இருக்கின்றது. நாடளாவிய ரீதியில் சிங்கள மக்கள் பெரும்பான்மை இனத்தவர்களாக இருந்தாலும் சிறுபான்மை இனத்தவர்களான தமிழ், முஸ்லிம் மக்களின் வாக்குகளே தேர்தல்களின் வெற்றியைத் தீர்மானிக்கும்.

நடைபெறவுள்ள அரச தலைவர் தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தல் ஆகியவற்றில் கடும் போட்டி நிலவக்கூடும் என்று பலர் கருதுகின்றனர். எனினும், இந்த இரு தேர்தல்களிலும் மூவின மக்களின் ஆதரவுடன் நாம் வெல்லுவோம்' என்றார்.

பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளராகக் களமிறங்கக்கூடிய வாய்ப்புக்களைக் கொண்டிருப்பவர் என்று கருதப்படும் கோத்தபாய ராஜபக்ச, சிறுபான்மை மக்களின் வாக்குகள் இல்லாமல் தேர்தலில் வெற்றிபெற முடியும் என்றவாறாக நேற்றுமுன்தினம் கருத்துத் தெரிவித்திருந்தார். (ம-22)

## நல்லூரர்ச்...

னரால் சோதனை செய்யப்பட்ட பின்னரே ஆலயத்துக்குள் அனுமதிக்கப்பட்டு வருகின்றனர். இது பக்தர்களுக்கு சற்று சஞ்சலமாக இருப்பதை அறிய முடிகிறது. ஆனாலும் பாதுகாப்பு முக்கியம். அதனால் இந்த நடவடிக்கைளை நாம் எதிர்கொண்டுதான் ஆக வேண்டும். இந்தச் சோதனை நடவடிக்கைகளை இலகுவாக்கும் நோக்கில் 4 சிறப்பு சோதனை இயந்திரங்கள் விரைவில் அங்கு பொருத்தப்பட உள்ளன. அதாவது ஆலயத்துக்கு வரும் அடியவர்களை மறித்துத் தனியாக சோதனை செய்வதைத் தவிர்த்து, வாசலில் பொருத்தப்படும் இந்த இயந்திரத்தின் வாயிலாக உள்நுழையும்போது அது தன்னியக்க சோதனை நடவடிக்கைகளை மேற்கொள்ளும். இதன் மூலமாக பக்தர்களின் சஞ்சலம் சற்று குறையும். இந்த வேலையை மாநகர சபை அல்லது ஆலய நிர்வாகம் செய்திருக்கலாம். ஆனாலும் நாம் செய்கின்றோம் - என்றார். (ம-7)

## தமிழர்களை...

இவ்வாறு மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

மகிந்த அணியின் அரச தலைவர் வேட்பாளர் என்று எதிர்வுகூறப்படும் கோத்தபாய ராஜபக்ச, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் புளொட் அமைப்பின் தலைவருமான த.சித்தார்த்தனை கடந்த செவ்வாய்க்கிழமை இரவு சந்தித்து 40 நிமிடங்கள் கலந்துரையாடியிருந்தார்.

இந்தச் சந்திப்பின்போது, தான் தேர்தலில் வெற்றி பெறுவதற்கு தமிழ் மக்களின் ஆதரவு தேவையில்லை என்று கூறியதாக உதயன் பத்திரிகையில் வெளியான செய்தி தொடர்பில், கொழும்பு ஊடகம் ஒன்று மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தானவிடம் கேள்வி எழுப்பியது.

அதற்குப் பதிலளித்த அவர், அரசமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டத்தை மையப்படுத்தியே தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வை முன்வைக்க வேண்டும் என்றே கோத்தபாய ராஜபக்ச குறிப்பிட்டிருந்தார். அத்துடன், அரச தலைவர் தேர்தலில் வெற்றிபெறுவதற்கு தமிழ் மக்களின் வாக்குகளும் அவசியம் எனவும் சுட்டிக்காட்டியிருந்தார். சந்தேகம் இருப்பின் இது தொடர்பில் நீங்கள் சித்தார்த்தனிடமே வினவலாம். தான் ஆட்சிக்கு வந்த பிறகு வடக்கு அபிவிருத்திக்காக பல பில்லியன்களை ஒதுக்குவார் எனவும் உறுதியளித்திருந்தார். மாறாக தமிழ் மக்களின் வாக்குகள் தேவையில்லை என அவர் கூறவில்லை.

தோல்வி பயம்காரணமாகவே எமது எதிர்கால அரச தலைவருக்கு எதிராக இவ்வாறு போலிப் பரப்புரைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன - என்றார்.

கோத்தபாய ராஜபக்சவுக்கும், நாடாளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தனுக்கும் இடையிலான சந்திப்பில் அவர்கள் இருவரையும் தவிர வேறு எவரும் கலந்து கொள்ளவில்லை என்பதுடன், உதயன் பத்திரிகையில் வெளியான செய்தியை இரு தரப்பினரும் மறுக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம-ஓ-5)

## ரெலோவின்...

மான சிவாஜிலிங்கம், அரச தலைவர் தேர்தல் தொடர்பில் கருத்து வெளியிட்டிருந்தார். அரச தலைவர் தேர்தலை தமிழ் மக்கள் புறக்கணிக்க வேண்டும் அல்லது தமிழ் வேட்பாளர் ஒருவரைக் களமிறக்க வேண்டும் என்று கூறியிருந்தார்.

இவ்வாறானதொரு நிலையிலேயே ரெலோ அமைப்பு நேற்று அறிக்கை வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

எந்தக் கட்சிகளும் தங்கள் வேட்பாளரை அறிவிக்கவில்லை. அரச தலைவர் தேர்தல் வேட்பாளர்கள் எவர் என்பதில் எமது கட்சி அதிக கவனம் செலுத்தப்போவதில்லை. அவர்களால் வெளியிடப்படும் தேர்தல் அறிக்கையையே நாங்கள் கூர்ந்து அவதானிப்போம். தமிழ் மக்களுடைய தேசியப் பிரச்சினைகளுக்கும், மக்கள் எதிர் நோக்குகின்ற ஏனைய அரசியல், அன்றாட பிரச்சினைகளுக்காக முன்வைக்கப்போகின்ற தீர்வுகள், எப்படி அந்தப் பிரச்சினைகளை அணுகிறார்கள் என்பது தொடர்பில் நாங்கள் அவதானிப்போம்.

எமது போராட்டங்களுக்கும், அரசியல் நிலைப்பாடுகளுக்கும் ஆதரவு அளித்துக் கொண்டிருக்கின்ற பன்னாட்டுச் சமூகத்தின் விருப்பையும், நிலைபாட்டையும் தெரிந்து கொண்ட பின்னர் முடிவை எட்டுவது உசிதமாக இருக்கும் என்று கருதுகின்றோம்.

எமது கட்சி உறுப்பினர்களோடு மாத்திரமல்லாது, வெளிநாட்டு உறவுகளோடும், புலம்பெயர் அமைப்புக்களோடும் இணைந்து திட்டங்களை மேற்கொண்டுவருகின்ற எமது கட்சியின் வெளிநாட்டு கிளை உறுப்பினர்களோடும் இது தொடர்பில் கலந்தாலோசித்து வருகின்றோம். இவை எல்லாவற்றையும் கருத்தில்கொண்டு, அலசி ஆரய்ந்து தமிழ் மக்களின் அரசியல் நிலைப்பாட்டை பிரதிபலிக்கும் தேர்தல் அறிக்கையை வெளியிட்டுள்ள வேட்பாளரை அல்லது வேட்பாளர்களை நேரில் சந்தித்து எமது மக்களின் அரசியல் வேணவாக்கள் தொடர்பில் கோரிக்கைகளை முன்வைப்பது பற்றியும் பரிசீலிப்போம்.

கட்சியின் அரசியல் குழு, தலைமைக்குழு போன்ற உயர் பீடங்களை சில தடவையோ, பல தடவையோ கூட்டி தேவையேற்படின் பொதுக்குழுவையும் கூட்டி இது தொடர்பான முடிவுகளை எட்டிய பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சியான நாங்கள் ஏனைய அங்கத்துவக் கட்சிகளுடனும் கலந்துரையாட கடமைப்பட்டுள்ளோம். இந்த தேர்தலின் மூலம் தமிழ் மக்களின் ஒற்றுமையை துண்டாட முயற்சிப்பவர்களையோ அல்லது இதன் மூலம் எமது பலத்தை நசுக்க முயற்சிபவர்கள் தொடர்பில் நாங்கள் விழிப்பாகவும், ஒற்றுமையாகவும் அவதானமாகவும் கையாள வேண்டிய சூழ்நிலையில் இருக்கின்றோம். எங்களுடைய அங்கத்துவக் கட்சிகளுடனும் பேச்சு நடத்தி முடிவுகளை எட்டிய பின்னர்தமிழீழ விடுதலை இயக்கம் தமது நிலைப்பாடு என்ன என்பதை உத்தியோகபூர்வமாக மக்களுக்கு அறிவிக்கும். அது வரை எமது கட்சி எந்த விதமான அவசர முடிவுகளையும் எடுக்க மாட்டாது.

அவசரமாகவோ அல்லது உணர்வுபூர்வமாகவோ நாங்கள் இதில் முடிவுகளை எட்டாது மிக அவதானமாக நகர்வுகளை மேற்கொள்ள வேண்டியது தமிழ் மக்களின் எதிர்காலத்துக்கு அவசியமானது என்றுள்ளது. (ஒ.5,110)

## பன்னாட்டு...

வோம். வடக்கு கிழக்கில் உங்களைத்தேடி உங்கள் காலடிக்கே வந்து அபிவிருத்திகளையும், உங்கள் குறைகளையும் தீர்ப்பது வேறு யாருமல்ல சஜித் பிரேமதாசதான் என்பதையும் இங்கு வைத்துக் கூறிக் கொள்கின்றேன். இவ்வாறு அமைச்சர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

மன்னார் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நிர்மாணிக்கப்பட்ட 239ஆவது மாதிரி கிராமமான ஜோசப்வாஸ் நகர் மற்றும் 230 ஆவது மாதிரிக் கிராமமான ஜோசப்புரம் ஆகிய இரண்டு மாதிரிக் கிராமங்களும் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டன.

மன்னார் மாவட்டச் செயலர் சி.ஏ.மோகன்ராஜ் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் அமைச்சர் சஜித் பிரேமதாச, நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், அமைச்சர் ரிசாட் பதியுதீனின் செயலர் றிப்கான் பதியுதீன், மன்னார் பிரதேச சபையின் தலைவர் எம்.முஜாகிர், ஐக்கிய தேசியக் கட்சியின் மாவட்ட அமைப்பாளர் ஏ.எஸ்.எம்.பஸ்மி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் அமைச்சர் சஜித் மேலும் தெரிவித்ததாவது:

நவம்பர் மாதத்தை நீங்கள் சரியான முறையில் பயன்படுத்தி, சரியான தீர்வை எடுப்பீர்களாக இருந்தால் இந்தத் தீர்மானம் இலங்கை மக்களுக்கும், உங்களுக்கும் சரியான தீர்மானமாக இருக்குமாக இருந்தால் நான் மீண்டும் வந்து மன்னாரில் மாத்திரமல்ல இலங்கையில் இருக்கக்கூடிய ஒட்டுமொத்த வீட்டு பிரச்சினைகளுக்கும் தீர்வைத் தருவேன். 2025ஆம் ஆண்டுக்குள் 20 ஆயிரம் வீடுகளை நாடளாவிய ரீதியில் கட்டி முடிப்பேன்.

போர் நிறைவடைந்து சமாதானம் ஏற்படும் போது சேதமடைந்த அந்தப் பகுதிகளை மீண்டும் நிர்மாணிப்பார்கள். அவ்வாறு நிர்மாணப் பணிகளை மேற்கொள்ள ஒரு அமைப்பை உருவாக்குவார்கள். பன்னாட்டு நிதி சம்மேளனம் என்பதுதான் அதன் பெயர். அப்படியாக ஒரு அமைப்பை உருவாக்கி அந்த அமைப்பின் ஊடாக வெளிநாடுகளிடம் இருந்து நிதியை பெற்று சேதமடைந்த பகுதிகளை முற்று முழுதுமாக நிவர்த்தி செய்து முழுமையாக கட்டி எழுப்புவார்கள்.

2009ஆம் ஆண்டு மே மாதம் போர் நிறைவுக்கு வந்தது. கிட்டத்தட்ட 10 ஆண்டுகளை அண்மித்து விட்டோம். இன்று வரை இவ்வாறான பன்னாட்டு நிதிச் சம்மேளனத்தை உருவாக்கினார்களா? அப்படி ஒன்றும் இல்லை. அவர்கள் உருவாக்கியது என்ன?

போர் முடிந்த பின்னர் எப்படி அரசியல் இலாபத்தை பெற்றுக் கொள்வது என்பதைத்தான் உருவாக்கினார்கள். போரால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களைக் கட்டியெழுப்பாதவர்கள் ஆட்சியைப் பிடிக்க நினைக்கின்றார்கள்.

அரச தலைவர் வேட்பாளராக நான் போட்டியிடப் போகின்றேன். அவர் போட்டியிடப் போகின்றார். இப்படிக் கூறுகின்றார்கள். அவர்களின் குடும்பத்தில் சகோதரர்களை ராஜாவாக்க முயற்சித்தார்கள். தற்போது மகனை ராஜாவாக்க முற்படுகின்றார்கள். மக்களுக்கு உதவி செய்வதைப் பற்றி பேசும் இவர்கள், கடந்த காலங்களில் குடும்பமாக வெளிநாடுகளுக்குச் சென்று நட்சத்திர விடுதிகளில் தங்கி கூத்தடித்தார்கள்.

இன்று வெட்டி வீராப்பு பேசிக்கொண்டு மீண்டும் ஒருமுறை ஆட்சியைத் தட்டிப் பறிக்க முயற்சிக்கின்றார்கள். வீணான இந்த உதவாக்கரைகள் அன்று மக்களைப்பற்றி சிந்திக்கவில்லை. குடும்ப ஆட்சியைக் கொண்டு வந்தார்கள். சுகபோக வாழ்க்கை வாழ்ந்தார்கள்.

ஒரு காலத்திலே ராஜாவாக வாழக்கூடிய அளவுக்கு சுகபோக வாழ்க்கையை நாட்டினுடைய மக்கள் மூலமாக பெற்ற வரிப்பணத்தின் மூலம் வாழ்ந்தார்கள்.

நான் ஆட்சிக்கு வந்தால் அவர்களைப் போல் ராஜாவாக நடந்து கொள்ள மாட்டேன். தற்போது உடுத்தியுள்ள இந்த உடையுடன் உங்களைத் தேடி வருவேன். உங்களின் பிரச்சினைகளை அடையாளம் காணுவேன். உங்களுடைய பிரச்சினைகளுக்கு சரியான தீர்வைப் பெற்றுத்தருவேன். நல்ல ஆட்சியை நாடளாவிய ரீதியில் உங்களுக்கு ஏற்படுத்தித் தருவேன்.

எங்களுடன் இணைந்துள்ள மக்களைப் பார்த்து அவர்களுக்கு பித்துப் பிடித்து விட்டது. சஜித்துக்கு வயது காணாது என்கின்றார்கள். கடந்த 10 ஆண்டுகளாக பன்னாட்டுத் தொடர்புகளுடன் புகுந்து விளையாடிய உங்களால் ஏன் பன்னாட்டு நிதிச் சம்மேளனத்தை உருவாக்க முடியாமல் போனது?

போரால் பாதிக்கப்பட்ட மக்கள் பற்றிச் சிந்தித்தீர்களா? இல்லையே. இன்று அதைப் பற்றிச் சிந்திக்காது, நாங்கள் வந்தால் ஆட்டை மாட்டாக்குவோம் என்று கதைவிடுகின்றீர்கள் - என்றார். (ம-ஓ5,56)

## விபத்தில்...

தார்.

உந்துருளியொன்று சடுதியாக வீதியைக் கடந்த நிலையில் முதன்மை வீதியில் பயணித்த குறித்த நபர் நிலைகுலைந்து டிப்பர் வாகனத்துடன் மோதி விபத்து இடம்பெற்றது என்று தெரிவிக்கப்பட்டது. (ம-9,26)

## வெளிநாட்டிலுள்ள...

காரணமாக காங்கேசன்துறை தேர்தல் தொகுதியில் 30 ஆயிரம் வாக்காளர்கள் நீக்கப்படும் அபாயம் காணப்படுகின்றது. வாக்காளர்கள் நீக்கப்பட்டால், யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தின் நாடாளுமன்ற ஆசனங்களின் எண்ணிக்கை இரண்டால் குறைவடையும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

வலி.வடக்கில் மீளக்குடியமர அனுமதிக்கப்படாத பிரதேசங்கள் கடந்த காலங்களில் மீளாய்வுகளின் போது, மீளாய்வுக்கு உட்படுத்தபடுவதில்லை. இந்த ஆண்டும் மீளாய்வுக்கு உட்படுத்த வேண்டாம் என்று மாவட்ட தேர்தல்கள் திணைக்களத்தால் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு கடிதம் அனுப்பப்பட்டிருந்தது.

இருப்பினும், அந்தப் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எங்கிருந்தாலும் அவர்களைப் பதிவு செய்யுமாறு தேர்தல்கள் ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது.

நகுலேஸ்வரம் (ஜே/226), காங்கேசன்துறை (ஜே/233), காங்கேசன்துறை மத்தி (ஜே/234), காங்கேசன்துறை தெற்கு (ஜே/235), கட்டுவன் (ஜே/238), தென்மயிலை (ஜே/240), வறுத்தலைவிளான் (ஜே/241), குரும்பசிட்டி (ஜே/242), குரும்பசிட்டி கிழக்கு (ஜே/243), வசாவிளான் கிழக்கு (ஜே/244), வசாவிளான் மேற்கு (ஜே/245), மயிலிட்டி வடக்கு (ஜே/246), தையிட்டி வடக்கு (ஜே/249), தையிட்டி மேற்கு (ஜே/250), மயிலிட்டித்துறை வடக்கு (ஜே/251), பலாலி தெற்கு (ஜே/252), பலாலி கிழக்கு (ஜே/253), பலாலி வடக்கு (ஜே/254) ஆகிய கிராம அலுவலர் பிரிவுகள் பகுதியாக விடுவிக்கப்படவில்லை.

மயிலிட்டி தெற்கு (ஜே/248), பலாலி வடமேல் (ஜே/255), பலாலி மேற்கு (ஜே/256) ஆகிய கிராம அலுவலர் பிரிவுகள் முழுமையாக விடுவிக்கப்படவில்லை.

இந்தக் கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் எங்கு வசித்து வந்தாலும் சிறப்பு விண்ணப்பப் படிவத்தை முழுமை செய்து எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவேண்டும். இது தொடர்பான விண்ணப்பப் படிவங்கள் கிராம அலுவலர்கள் அலுவலகங்களில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இந்தக் கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த வெளிநாட்டில் வசிப்பவர்கள் இங்குள்ள தமது உறவினர்கள் ஊடாக பதிவுகளை மேற்கொள்ள முடியும்.

இவற்றை மக்களுக்குத் தெளிவுபடுத்தி அறிவிக்குமாறு மாவட்டத்தின் அனைத்து அரசியல்வாதிகளுக்கும் தேர்தல்கள் திணைக்களம் தெரியப்படுத்தியும் அது தொடர்பில் அவர்கள் அக்கறை அற்று இருப்பதாக குற்றஞ் சுமத்தப்படுகின்றது. கடந்த நாடாளுமன்றத் தேர்தல், மாகாணசபைத் தேர்தல் மற்றும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் ஆகியவற்றில் போட்டியிட்ட சகல வேட்பாளர்களுக்கும் இது தொடர்பான விளக்கக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மேற்படி கிராம அலுவலர் பிரிவில் வசிக்கும் மக்கள் தொடர்பான விவரங்கள் திரட்டப்பட்ட பின்னர், விண்ணப்பிக்காதவர்கள் வாக்காளர் பட்டியலிருந்து நீக்கப்படுவதற்கான அபாயம் காணப்படுகின்றது. சுமார் 30 ஆயிரம் பேர் வரையில் இந்தப் பகுதிகளில் வாக்காளர் பெயர்ப்பட்டியலில் பதிவு செய்யப்பட்டுள்ளனர். 1987ஆம் ஆண்டுக்குப் பின்னர் இந்தக் கிராம அலுவலர் பிரிவுகளில் மீளாய்வு செய்யப்படவில்லை. எனவே, அந்தப் பகுதியைச் சேர்ந்த மக்கள் பதிவு செய்யத் தவறும் பட்சத்தில், யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தின் வாக்காளர் எண்ணிக்கை 25 ஆயிரத்தால் குறைவடைவதற்கான வாய்ப்புக்கள் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அவ்வாறு குறைவடைந்தால் அடுத்த ஆண்டு நடைபெறும் நாடாளுமன்றத் தேர்தலின்போது யாழ்ப்பாண மாவட்டத்துக்கு 5 ஆசனங்களே ஒதுக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ.5)





# நாமகள் சென்.நியூஸ்ரார் இறுதியாட்டத்தில் மோதல்

யாழ்ப்பாணம், ஓக.9
வலிகாமம் கால்பந்தாட்ட லீக்கில் பதிவு செய்யப்பட்ட கால்பந்தாட்ட அணிகளுக்கு இடையே நடத்தப்படும் எவ்.ஏ. கிண்ணத் தொடரின் இறுதியாட்டத்தில் தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழகமும், துணைவி சென். நியூஸ்ரார் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.

இந்த இறுதியாட்டம் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி மைதானத்தில் இரவு 7 மணிக்கு நடைபெறவுள்ளது. (எ)



# கொற்றவாத்தைறேஞ்சர்ஸ் கால்பந்தில் சம்பியனானது

யாழ்ப்பாணம், ஓக.9
வதிரி, பொம்மர்ஸ் விளையாட்டுக் கழகம்நடத்தும்15வயதுப்பிரிவினருக்கான கால்பந்தாட்டத் தொடரில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக அணி கிண்ணம் வென்றது.

நேற்றுமுன்தினம் புதன்கிழமை இறுதியாட்டம்நடைபெற்றது. கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக அணியும், சமரபாகு நியூட்டன் விளையாட்டுக் கழக அணியும் அதில் மோதின.

இரு அணிகளும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தின. ஆட்ட நேர முடிவில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக அணி 1:0 வெற்றி பெற்றுக் கிண்ணத்தைத் தனதாக்கிக் கொண்டது.

கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகத்தின் சார்பாக எஸ்.அஸ்வின் கோலைப் பதிவு செய்தார். (எ-23)

## வீரர்கள் ஒப்பந்தத்திலிருந்து மாலிக், ஹபீஸ் நீக்கம்

*பாக். கிரிக்கெட் சபை அதிரடி*

2019-2020ஆம் ஆண்டு பருவகாலத்துக்கான பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் வீரர்கள் ஒப்பந்தத்திலிருந்து சொய்ப் மாலிக், மொகமது ஹபீஸ் ஆகியோர் நீக்கப்பட்டுள்ளனர்.

வீரர்கள் எண்ணிக்கையையும் 33இலிருந்து 19ஆக குறைக்கப்பட்டுள்ளது. அதேபோல் வீரர்கள் பிரிவையும் ஐந்திலிருந்து மூன்றாகக் குறைத்துள்ளது.

இதன்படி பாபர் அஸாம், சர்பராஸ் அகமெட், யாசிர் ஷா ஆகிய வீரர்கள் ஒப்பந்தப் பட்டியலில் முதன்நிலையில் இடம்பெற்றுள்ளனர். கடந்த ஆண்டு முறையே 'ஏ' மற்றும் 'பி' பட்டியலில் இருந்த மாலிக் மற்றும் ஹபீஸ் இந்த முறை ஒப்பந்தப்பட்டியலில் இடம்பெறவில்லை.

வீரர்கள் எண்ணிக்கையைக் குறைத்து நிதிப் பயன்களை 25 முதல் 40 சதவீதம் வரை அதிகரித்துள்ளது பாகிஸ்தான் கிரிக்கெட் சபை.

அதேபோல் பிரிவு 'ஏ' யிலிருந்த மொகமது அமீர், பிரிவு 'பி' யிலிருந்த ஃபகார் சமான் ஆகியோர் 'சி' பிரிவுக்கு மாற்றப்பட்டுள்ளனர். டெஸ்ட் துடுப்பாட்ட வீரர் அசார் அலி 'ஏ' பிரிவிலிருந்து 'பி' பிரிவுக்கு மாற்றப்பட்டார்.

இமாம் உல் ஹக், ஹாரிஸ் சொஹைல், மொகமது அப்பாஸ் ஆகியோர் 'சி'பிரிவிலிருந்து 'பி' பிரிவுக்கு முன்னேறியுள்ளனர்.



# கரப்பந்தாட்ட முடிவுகள்

யாழ்ப்பாணம், ஓக.9
கைதடிதெற்குச்சனசமூகநிலையத்தின் 64ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் "பி" பிரிவு அணிகளுக்கு இடையே கரப்பந்தாட்டத் தொடரில் நீர்வேலி காமாட்சி அம்பாள் விளையாட்டுக் கழக அணி இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளது.

நேற்றுமுன்தினம் மின்னொளியில் கழகமைதானத்தில்நடந்தஅரையிறுதி ஆட்டத்தில் தொண்டமானாறு விளையாட்டுக் கழக அணியை வெற்றி கொண்டு நீர்வேலி காமாட்சி அம்பாள் விளையாட்டுக் கழக அணி இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

5 செற்களைக் கொண்டதாக அரையிறுதி ஆட்டம் நடைபெற்றது. முதல் செற்றை நீர்வேலி காமாட்சி அம்பாள் விளையாட்டுக்கழகஅணி25:20என்ற புள்ளிகள்அடிப்படையில்தனதாக்கியது. இரண்டாவது செற்றை 25:17 என்றபுள்ளிகள் அடிப்படையில் தொண்டைமானாறு விளையாட்டுக் கழகம் வெற்றி கொண்டது. அதன்பின்னர் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய நீர்வேலி காமாட்சி விளையாட்டுக் கழக அணி மூன்றாவது மற்றும் நான்காவது செற்களை25:20,25:23என்றபுள்ளிகளின் அடிப்படையில்வெற்றிகொண்டுஇறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது. (எ-23)

யாழ்ப்பாணம், ஓக.9
கைதடிதெற்குச்சனசமூகநிலையத்தின் 64ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு"ஏ"பிரிவுஅணிகளுக்குஇடையே நடத்தப்படும் கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டம் ஒன்றில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது.

இந்த ஆட்டம் நேற்றுமுன்தினம் மின்னொளியில் கழக மைதானத்தில் நடைபெற்றது. அதில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உடுபபிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது.

ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகஅணி25:13,25:22என்ற புள்ளிகள் அடிப்படையில் நேர் செற்கணக்கில்வெற்றிபெற்றது. (எ-23)



# மென்பந்து துடுப்பாட்டம் நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஓக.9
அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகம் நந்தும் அமரர் கனகசபாபதி சத்தியநேசன் ஞாபகார்த்த மென்பந்துத் துடுப்பாட்டச் சுற்றுப் போட்டி நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு கழக மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

காலை 8.30 மணிக்கு நடக்கும் ஆட்டத்தில் சிவிலிம அணியை எதிர்த்து நக்கீரன் அணி களமிறங்கும். காலை 9 மணிக்கு நடக்கும் ஆட்டத்தில் பொம்மர்ஸ் அணியை எதிர்த்து றேஞ்சர்ஸ் அணி மோதவுள்ளது.

காலை 9.30 மணிக்கு நடக்கும் ஆட்டத்தில் டைமன்ஸ் அணியை எதிர்த்து இமையாணன் மத்திய அணி மோதவுள்ளது. முற்பகல் 10 மணிக்கு நடக்கும் ஆட்டத்தில் கழுகு அணியை எதிர்த்து இமையாணன் இளைஞர் அணி மோதவுள்ளது. (எ-23)

## டிராவிட்டுக்கு ஆதரவாக கங்குலி, ஹர்பஜன்

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் ராகுல் டிராவிட்டுக்கு எதிராக இந்திய கிரிக்கெட் சபை அனுப்பிய கடிதத்துக்கு கங்குலி எதிர்ப்பை வெளியிட்டுள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர்கள் இரட்டை பதவிகள் மூலம் ஆதாயம் பெற்று வருவதாக தொடர்ந்து குற்றச்சாட்டு எழுந்து வருகிறது.

இந்த நிலையில், சச்சின், கங்குலி, லக்ஷமன் உள்ளிட்டோரும் இந்தக் குற்றச்சாட்டுக்கு ஆளாகி இருந்தனர். தற்போது இதே குற்றச்சாட்டுக்காக டிராவிட்டுக்கு இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

தேசிய கிரிக்கெட் அக்கடமியின் தலைவராகவும், இந்தியா சிமென்ட்ஸ் நிறுவனத்தின் துணைத் தலைவராகவும் ஆதாயம் தரும் இரு பதவிகளில் டிராவிட் இருக்கிறார் என அவர் மீது முறைப்பாடு எழுந்தது. இது குறித்து விளக்கமளிக்க டிராவிட்டுக்கு 2 வாரங்கள் கால அவகாசம் வழங்கப் பட்டுள்ளது.

இந்த நிலையில் டிராவிட்டுக்கு கடிதம் அனுப்பியது தொடர்பாக கங்குலி தெரிவிக்கையில்;

இந்திய கிரிக்கெட்டில் இரட்டை பதவி ஆதாய குற்றச்சாட்டு புதிதாக முன்வைக்கப்படுகிறது. செய்திகளில் தொடர்ந்து இடம்பெறுவதற்கான சிறந்த வழி, இந்திய அணியை கடவுள் தான் காப்பாற்ற வேண்டும் - என்றார்.

கங்குலியின் இந்த கருத்தை ஹர்பஜன் சிங் வரவேற்று, இந்திய கிரிக்கெட்டுக்கு டிராவிட்டை விட சிறந்த நபர் கிடைக்க மட்டார். இதுபோன்ற ஜாம்பவான்களுக்கு கடிதம் அனுப்புவது என்பது அவர்களை அவமதிக்கும் செயல் எனத் தெரிவித்தார்.




நியூசிலாந்து அணித் தலைவர் கேன் வில்லியம்சன் நேற்றுத் தனது 29ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாடினார். இலங்கைக் கிரிக்கெட் ரசிகர்களுடன் கேக் வெட்டி தனது பிறந்த தினத்தை அவர் கொண்டாடியுள்ளார்.

### வரலாற்றுப் பதிவில்

# சாதனையை பதிக்க காத்திருக்கும் கெய்ல்






ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் 13 ஓட்டங்கள் அடித்தால் அதிக ஓட்டங்கள் குவித்த மேற்கிந்திய வீரர் என்ற பெருமையை கிறிஸ் கெய்ல் பெறுவார்.

உலக கிரிக்கெட்டில் ஜாம்பவான்களாகக் கருதப்படுபவர்களில் மேற்கிந்தியத் தீவுகள் அணியைச் சேர்ந்த பிரைன் லாராவும் ஒருவர். தனது அபார துடுப்பாட்டத்தால் மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு பல வெற்றிகளை தேடிக்கொடுத்தவர். இவர் 131 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 34 சதங்களுடன் 11,953 ஓட்டங்கள் குவித்து, டெஸ்ட் போட்டியில் அதிக ஓட்டங்கள் குவித்த மேற்கிந்திய வீரர் என்ற பெருமையுடன் காணப் படுகின்றார்.

ஒருநாள் கிரிக்கெட்டிலும் 299 போட்டியில் விளையாடி 19 சதங்களுடன் 10,405 ஓட்டங்களைக் குவித்து முதலிடத்தில் உள்ளார். ஆனால் ஒருநாள் போட்டியில் கிறிஸ் கெய்ல் லாராவின் சாதனையை துரத்தினார். அவர் 298 போட்டியில் 25 சதங்களுடன் 10,393ஓட்டங்களைப் பெற்றுள்ளார். லாராவைவிட 12 ஓட்டங்களே அவர் பின்தங்கியுள்ளார்.

இந்த நிலையில் இந்தியா - மேற்கிந்தியத்தீவுகள் அணிகளுக்கு இடையிலான மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் கிரிக்கெட் இடம்பெறவுள்ளது. இதில் முதலாவது போட்டியில் அவர் அணியில் இடம்பிடித்திருந்தார். இதில் அவர் லாராவின் சாதனையை முறியடிக்கும் வாய்ப்பைத் தவற விட்டார். அவர் 4 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றினார். இரண்டாவது போட்டியிலாவது லாராவின் சாதனையை முறியடிப்பாரா?. இன்னும் 9 ஓட்டங்கள் தேவை.

### அதிக வருமானம் பெறும் வீராங்கனை பட்டியலில்

# செரீனா வில்லியம்ஸ் தொடர்ந்து முதலிடம்




அதிகம் சம்பாதிக்கும் விளையாட்டு வீராங்கனைகளின் பட்டியலில் இந்திய பூப்பந்தாட்ட வீராங்கனை பி.வி.சிந்து 13ஆவது இடத்தை பிடித்துள்ளார். அதிகம் சம்பாதிக்கும் விளையாட்டு வீராங்கனைகளின் பட்டியல் தரப்படுத்தலில், இந்திய பூப்பந்தாட்ட வீராங்கனை பி.வி.சிந்து மட்டுமே இந்தியாவிலிருந்து இடம் பிடித்துள்ளார். 13ஆவது இடத்தை பெற்றுள்ள அவர் ஆண்டுக்கு பரிசு மற்றும் விளம்பரம் மூலம் ரூ.39 கோடி சம்பாதிக்கிறார்.

இந்த பட்டியலில் தொடர்ந்து முதலிடம் வகிக்கும் அமெரிக்க ரென்னிஸ் வீராங்கனை செரீனா வில்லியம்ஸின் ஆண்டு வருமானம் ரூ.207 கோடியாக உள்ளது.

### பி.சி.சி.ஐயின் வருமானம் குறைப்பு;

# ஐ.சி.சி. தீர்மானம்

வரிவிதிப்பில் விலக்கு அளிக்காததால் இந்திய கிரிக்கெட் சபைக்கு கிடைக்கக்கூடிய வருவாயை வெகுவாக குறைக்க பன்னாட்டு கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை தீர்மானித்துள்ளது.

கிரிக்கெட்டில், இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை மிகப்பெரிய அளவில் ஆதிக்கம் செலுத்தி வருகிறது. பன்னாட்டுக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை நடத்தும் தொடர்கள் மூலம் கிடைக்கும் வருவாயில் இந்தியா, ஆஸ்திரேலியா மற்றும் இங்கிலாந்து அணிகள் மிகப் பெரிய அளவில் பங்கிட்டு கொண்டன.

பொதுவாக பன்னாட்டு கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை நடத்தும் தொடர், ஒரு நாட்டில் நடைபெற்றால், அந்த நாட்டு கிரிக்கெட் சபை அரசின் வரிவிலக்கு வாங்கிக் கொடுக்கும். வரி விலக்கு அளிக்கப்படும்போது அரசுக்கு மிகப்பெரிய அளவில் வரி செலுத்த வேண்டிய




தில்லை. இந்த நடைமுறையின் மூலம் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்கு கூடுதல் நிதி கிடைத்தது. ஆனால் 2016ஆம் ஆண்டு ரி-20 உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் இந்தியாவில் இடம்பெற்றது. இதற்கு வரி விலக்கு வாங்கித் தர வேண்டும் என்று பன்னாட்டு கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையிடம் கோரிக்கை விடுத்தது.

ஆனால், அரசு வரிவிலக்கு அளிக்க மறுத்துவிட்டது. இதனால் ரி-20 கிரிக்கெட்டில் வரியாக செலுத்தியதை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் ஆண்டு வருமானத்தில் பிடித்தம் செய்ய பன்னாட்டு கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை விரும்புகிறது. இதனால் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்கு மிகப்பெரிய இழப்பு ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# கிங்ஸ் லெவன் பஞ்சாப் பயிற்சியாளர் மைக் ஹெஸ்சன் விலகல்




நியூசிலாந்து கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைமை பயிற்சியாளரான மைக் ஹெஸ்சன் ஐ.பி.எல். போட்டியில் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியின் பயிற்சியாளராக இருந்தார். தற்போது அவர் அந்தப் பதவியில் இருந்து விலகுவாதாக அறிவித்தார்.

இது குறித்து அவர் தெரிவிக்கையில்;

கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியுடன் ஒரு வருடமாக சந்தோசமாக வேலைப்பார்த்தேன். அவர்கள் என்னை தலைமை பயிற்சியாளராக்கியதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த வருடம் அணியை சிறப்பான நிலைக்கு கொண்டு போக முடியவில்லை என்பது ஏமாற்றமே. பஞ்சாப் அணி கிண்ணத்தை வெல்வது மிகத் தொலைவில் இல்லை. வருங்காலத்தில் சிறப்பாக விளையாட வாழ்த்துகிறேன்-என்றார்.

# நல்லைக்கந்தனுக்கு

இன்று (09.08.2019) வெள்ளிக்கிழமை

## நான்காம் திருவிழா



ஆடும் பரி, வேல், அணிசேவல் எனப்
பாடும் பணியே பணியா அருள்வாய்
தேடும் கயமா முகனைச் செருவில்
சாடும் தனி யானைச் சகோதரனே!

திருவிழா சிறப்புற வாழ்த்துவோர்

என்றும் முதற்தர தங்க நகைகளுக்கு
VMK JEWELLERY
வீ.எம்.கே ஜுவல்லர்ஸ்
80/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 720 1117 / 021 222 2515

என்றும் முதற்தர தங்க நகைகளுக்கு
VMK JEWELLERY
வீ.எம்.கே ஸ்தாபனத்தில்

வீ.எம்.கே ஜுவல்லர்ஸ்
கண்டி வீதி, சாவகச்சேரி
021 227 1616 / 077 7849 369

## ஆளணி தேவை

ஆர்கலி தனியார் வைத்தியசாலை
21, வைத்தியசாலை சுற்றுவட்ட வீதி, குடியிருப்பு, வவுனியா.

a) வைத்தியர்கள் (Doctors)
(OPD யில் கடமையாற்றிய அனுபவம்)

b) தாதிய உத்தியோகத்தர்கள் - பெண் ( Nursing Officer)
(Theatre, EU, ICU இல் கடமையாற்றிய அனுபவம்)

c)கதிரியக்குநர் ( Radiographer)
(கதிரியக்கப்பிரிவில் கடமையாற்றிய அனுபவம்)

d)மருந்தாளர் ( Pharmacist)
(இலங்கை மருத்துவ சங்கத்தில் பதிவு செய்த முன்னனுபவம் கொண்டவர்கள்)

e)பரிசாரகர் - ஆண் ( Attendant)
(சத்திர சிகிச்சைக்கூட, EU, ICU கடமையாற்றிய அனுபவம்.)

குறிப்பு :- தகுதியுள்ள, எம்முடன் இணைந்து பணியாற்ற விரும்பியவர்கள், மேற்குறிப்பிட்ட துறைகளிலிருந்து ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தர்களும் விண்ணப்பிக்கலாம்.
(AVA/557) (1)

**Hot Line:- 076 665 8562**

## புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான சிங்களம், கணினி வகுப்புக்கள் ஆரம்பம்.

✓ உங்களுக்கு விரும்பிய நேரத்தைத் தெரிவு செய்து கற்க முடியும்.
✓ சான்றிதழ்கள் வழங்கப்படும். ☎:021-221-5992

**New Sky Computer Training Centre**
இல.716, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

## இலங்கை கணக்காளர் சேவை III

திறந்த/மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை நவம்பர் 2019

இலங்கை கணக்காளர் சேவையில் போட்டிப் பரீட்சையின் மூலம் தெரிவு செய்யப்பட்டு கணக்காளராக பணிபுரியும் தலை சிறந்த விரிவுரையாளர் குழாமினரால் வகுப்புக்கள் நடத்தப்படும்.

ஏனைய சிறப்பம்சங்கள்
- முன்னைய பரீட்சைகளில் அதிகூடிய சித்தி வீதங்களை கொண்ட நிறுவனம்.
- இலகுவாக அடையக்கூடிய வகையில் யாழ் பஸ் நிலைய பின்புறமாக உள்ளது.
- பரீட்சை பாடத்திட்டத்தை அடிப்படையாக கொண்ட விரிவுரைகள் மற்றும் 100% பரீட்சை வினாத்தாள்.

இப் பரீட்சைக்கு விண்ணப்பிக்க தகுதியுடையவர்கள்
திறந்த பரீட்சைக்கு
- முகாமைத்துவ / வணிக / பொருளியல் துறை பட்டதாரி

அல்லது
- கணக்கியல் உயர் டிப்ளோமா (HNDA) தகுதி உடையோர்

அல்லது
- பட்டயக்கணக்காளர் பரீட்சை CAB 1 மற்றும் CAB 2 பூர்த்தி செய்த அல்லது Business level பூர்த்தி செய்தவராக இருத்தல்

மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சைக்கு
ஓய்வூதியம் பெறக்கூடிய அரசசேவையில் 5 வருட சேவை

பிரிவு II வகுப்புகள் ஆரம்பம் - 10th Aug 2019 @ 9.00 a.m

Institute of Business Management
No: 01, 2nd Lane, Power House Rd, Jaffna
077 707 1601 / 0777 633 915
எமக்கு யாழ் நகரில் கிளைகள் வேறு கிடையாது

# அம்லா ஓய்வு

தென்னாபிரிக்கா அணியின் துடுப்பாட்ட வீரரான ஹசிம் அம்லா, பன்னாட்டு கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார். தென்னாபிரிக்கா அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரராகத் திகழ்ந்தவர் அம்லா. இவர் ஒருநாள் போட்டியில் ஏராளமான சாதனைகளை படைத்திருந்தார். இந்த நிலையில் அவர் ஒட்டுமொத்த பன்னாட்டு கிரிக்கெட்டிலும் இருந்து ஓய்வு பெறுவதாக நேற்று அறிவித்தார்.

அம்லா 124 டெஸ்ட் போட்டிகளில் 28 சதங்களுடன், 9,282 ஓட்டங்களைப் பெற்றார். அத்தோடு 181 ஒருநாள் போட்டியில் 27 சதங்களுடன் 8,113 ஓட்டங்களும், 44 ரி-20 போட்டிகளில் ஆயிரத்து 277 ஓட்டங்களையும் அடித்துள்ளார்.

## SLAS Open/Limited

P.உமாசங்கர் & வளவாளர்கள் கருத்தரங்கு தொடர் 5
நுண்ணறிவு - S.நவநீதன்
பொது அறிவு
10/08/2019 சனி
9.am- 12 pm
கிரகித்தல் A.பௌநந்தி
01.pm- 4 pm
நுண்ணறிவு S.நவநீதன்
"அதை நிச்சய எதிர்பார்க்கப்படும் விடயங்களுடன்"

**NEC**
மணிக்கூட்டு வீதி யாழ்ப்பாணம்.
(பெருமாள் கோவில் அருகில்)
076 166 1986, 077 741 7143

## போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்

கணக்காளர் சேவை-III
ஆரம்பம்
10.08.2019 சனி
9.00Am
பிரதி சனி, ஞாயிறு
9.00Am-3.00Pm

SLAS
பிரதி சனி, ஞாயிறு
9.00Am-4.00Pm

**நாவலர்**
கல்வி நிலையம்,
பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
076 166 1986, 077 469 6695

## SLAS Open/Limited

P.உமாசங்கர் & வளவாளர்கள் கருத்தரங்கு தொடர் 6
பொது அறிவு
நுண்ணறிவு
முகாமைத்துவம்
கட்டுரையாக்கம்
P.உமாசங்கர் & S.நவநீதன்
11/08/2019 ஞாயிறு
9am- 4.30 pm
"அதைதீர்க்கமான எதிர்பார்க்கை விடயங்களுடன்"

நாவலர் கல்வி நிலையம்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்
076 166 1988, 077 741 7143

## SLAS (Open/ Ltd) கருத்தரங்கு

பிரதி சனிக்கிழமைகளில் 9AM - 4.00 PM
P. கமல்தாசன் மற்றும் துறைசார் வளவாளர்கள்

**10.08.2019 சனி - 9am - 4.00 pm**
K.தெய்வேந்திரம் (SLAS) - பொதுமுகாமைத்துவ விடய ஆய்வு
K.குமணன் (SLPS) - பொது விவேகம்
V.தினேஷ் (SLTES) - பொது முகாமைத்துவ உளச்சார்பு

**14.08.2019 புதன்கிழமை - 9am - 4.00 pm**
P.கமல்தாசன் (SLPS) - பொதுவிவேகம்
R.C.அமல்ராஜ் (SLAS) - பொதுமுகாமைத்துவ விடய ஆய்வு

நாவலர் கல்வி நிறுவனம்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
077 977 9700, 077 380 7222, 076 166 1986
(CS/27223)(1)

## வீடு வாடகைக்கு உண்டு

இல.95, செட்டித்தெரு, நல்லூரில் சகல வசதியுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.

**077 436 9349**

# மரண அறிவித்தல்



தோற்றம் 05.08.1965 — மறைவு 03.08.2019

## சின்னத்துரை சிவராஜா (ஆச்சாரியார்)

யாழ். தாவளை இயற்றாலை கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனி (Lichtenfels) வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை சிவராஜா 03.08.2019 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், செல்லத்துரை - இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், ஜெயந்தியின் பாசமிகு அன்புக் கணவரும், சஜீதன், சகானா ஆகியோரின் பாசமிகு அன்புத் தந்தையும், கனகம்மா (இலங்கை), செல்லம்மா (இலங்கை), நடராஜா (கனடா), சரஸ்வதி (இலங்கை), இராஜேஸ்வரி (இலங்கை), பேபி (இலங்கை), கலாவதி (இலங்கை), இந்திராணி (இலங்கை), தியாகராஜா (பிரான்ஸ்), தவராஜா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம், கனகரத்தினம், மற்றும் அன்னலட்சுமி, கலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி, சண்முகலிங்கம் மற்றும் பஞ்சாட்சரம், முத்துராசா, கலாமோகன், சிவாகரன், பத்மலோஜினி, சறோமிளா, வசந்தி, சுகந்தி, ஆனந்தி ஆகியோரின் மைத்துனரும், நற்குணராஜா, பாஸ்கர், துளசிதாஸ் ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.08.2019) வெள்ளிக்கிழமை ஜேர்மன் நேரப்படி முற்பகல் 8.00 மணிமுதல் பி.ப.12.00 மணிவரை பார்வைக்கு வைக்கப்பட்டு அதனைத் தொடர்ந்து இறுதிக்கிரியை நடைபெற்று பின்னர் ஜேர்மன் Erlenweg 2, 96215 Lichtenfels மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சகோதரங்களும், மருமக்களும்.

## INFORMATION TECHNOLOGY PARK

*Under the purview of the Ministry of Digital Infrastructure & Information Technology*

MPCS Buliding
127.K.K.S.Road, Jaffna
Office :- 021 222 3641
Fax No :- 021 222 3643

### இடை வரவு விரிவுரையாளர்கள் தேவை

தகவல் தொழில் நுட்பப்பூங்காவின் கல்விச் செயற்பாடுகளினை விரிவுபடுத்த தீர்மானித்துள்ளோம். அதன்பொருட்டு கணினித்துறை சார்ந்த பாடங்களை வார/இறுதி நாட்களில் போதிப்பதற்கு இடைவரவு விரிவுரையாளர்கள் வேண்டப்படுகின்றார்கள்.தகுதிவாய்ந்த விண்ணப்பதாரர்கள் 23.08.2019 (Friday) க்கு முன்னதாக கீழ்வரும் முகவரிக்கு தங்கள் சுயவிபரக் கோவையை தகைமைகளை உறுதிப்படுத்தும் ஆவணங்களின் பிரதிகள், தம்மால் விரிவுரையாற்றக் கூடிய கணினித்துறை சார்ந்த பாடங்கள் ஆகியவை உள்ளடங்கலாக பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கவும். தபால் உறையின் இடது பக்க மூலையில் (இடை வரவு விரிவுரையாளருக்கான விண்ணப்பம்) என குறிப்பிடல் வேண்டும்.

அனுப்ப வேண்டிய முகவரி :- நிறைவேற்று அதிகாரி,
தகவல் தொழில் நுட்பப் பூங்கா,
127,K.K.S வீதி,
யாழ்ப்பாணம்.

- விண்ணப்பதாரிகள் கணினித்துறை சார்ந்த பட்டங்களை அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களில் பெற்றிருத்தல் அல்லது அதற்கு இணையான தகைமைகளையும் போதிய கற்பித்தல் அனுபவத்தையும் கொண்டிருத்தல் வேண்டும்.
- நேர்முகப்பரீட்சை மூலம் இடைவரவு விரிவுரையாளர் தேர்வு நடைபெறும் என்பதுடன் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் சுற்றுநிருபத்தின்படி விரிவுரையாற்றும் மணித்தியாலங்களின் அடிப்படையில் கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

-நிறைவேற்று அதிகாரி-
CENTRE FOR INFORMATION TECHNOLOGY

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 09.08.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.